# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

கலை பண்பாட்டுத் துறை



2007க்கான

# கலைமாமணி விருது

வழங்கும் விழா





# கலை மலர்



ஏழைகளுக்கு என்றும் துணை இருக்கும்
துணை முதல்வருக்கு பிறந்த நாள் வாழ்த்து



10 டிச 2009
சென்னை-600 012
00197



2007க்கான

# கலைமாமணி விருது

வழங்கும் விழா

# கலைமாமணி
# கலைஞர்



22.4.1967 அன்று அண்ணாவின் அன்புக் கரங்களால் கலைமாமணி விருது பெறும் முதல்வர் கலைஞர்



மேடையில் அறிஞர் அண்ணா அமர்ந்திருக்க, கலைமாமணி விருது பெற்ற கலைஞர் ஏற்புரை வழங்கும் காட்சி

தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் ஆண்டுதோறும் சிறந்த கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து விருதுகள் வழங்கி ஊக்கமூட்டும் பணியினை விடாது செய்து வருகிறது. அந்த ஆண்டு திரைப்படத் துறையில் சிறந்த வசனகர்த்தா விருதுக்கு என்னைத் தேர்ந்தெடுத்தார்கள்.

கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் தலைமையில் விருது வழங்கும் விழா 22.4.67 மாலை சென்னை ராஜாஜி மண்டபத்தில் நிகழ்ந்தது.

அவ்வை டி.கே.சண்முகம் அவர்கள் கலைஞர்களை அறிமுகப்படுத்திட, அண்ணா அவர்கள் விருதுகளை வழங்கினார்கள்.

என்னுடைய முறை வந்து பெயர் அறிவிக்கப்பட்டு நான் எழுந்து சென்றபோது எனக்குரிய விருதை உடனே என்னிடம் அளித்திடவில்லை. அண்ணா, தாமே அந்த மாலையை அணிந்துகொண்டார். தன் உயிருக்குயிரான சேயிடம் வேடிக்கை காட்டிடும் தாயைப் போலவே அண்ணா விருதணிந்து நின்றிட்ட அந்த வியத்தகு கோலத்தைக் கண்டு ராஜாஜி மண்டபமே ஆரவாரத்தால் அதிர்ந்தது. சில நொடிகள் சென்ற பின்னர் அந்த மாலையை எடுத்து எனக்கு அணிவித்தார்.

"....கலைஞர் கருணாநிதி அவர்கள் கலையில் ஈடுபாடு கொண்டு எதையும் நேர்த்தியாகச் செய்வது போலவே, ஆட்சியிலும் கலையின் நேர்த்தியினை இணைத்துக் காரியமாற்றி முன்னேற்றம் கண்டிருக்கிறார். அப்படிப்பட்டவர் விருது பெறுவதால் நான் தனிப்பட்ட முறையில் பெருமை அடைவதை நீங்கள் அனுமதிப்பீர்கள் என்று நம்புகிறேன்" என்று உளந்திறந்து அப்போது அண்ணா பாராட்டினார்.

நன்றியுரை நவின்றிட்ட நான்,

"...கடந்த மார்ச் 6 ஆம் நாள் பொதுப்பணித்துறை அமைச்சராக இதே மண்டபத்தில் நான் உறுதிமொழி எடுத்துக்கொண்ட அந்த நாளைவிட விருது பெற்ற இந்த நாளை நான் பெருமைக்குரிய நாளாகக் கருதுகிறேன். எல்லாவற்றுக்கும் மேலாகப் பாசமுள்ள அண்ணனின் கையால் விருது பெற்றிருக்கிறோம் என்பதை எண்ணுகிற நேரத்தில் உள்ளபடியே நான் பெருமையடைகிறேன்" என்று குறிப்பிட்டேன்.

அண்ணாவை அடுத்து நான் முதலமைச்சர் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட பின்னர் நண்பர் எஸ்.டி.சுந்தரம் அவர்களைச் செயலாளராகக் கொண்டு இயங்கும் அந்தச் சங்கீத நாடக சங்கமே பிறகு இயல் இசை நாடக மன்றம் என மூன்று தமிழையும் வளர்க்கக் கட்டமைக்கப்பட்டது என்கிற வகையில் புதுப்பெயரினை, தமிழ்ப் பெயரினைப் பூண்டது.

– 'நெஞ்சுக்கு நீதி' யில்
முதல்வர் கலைஞர் அவர்கள்

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை - 2010

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்...

**செம்மொழி மாநாடு வெல்லட்டும்**
**ஜெகமெங்கும் கலைஞர் பெயர் சொல்லட்டும்**



மேதகு தமிழக ஆளுநர்

திரு **சுர்ஜித் சிங் பர்னாலா** அவர்கள்

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 19-11-2009

## வாழ்த்துச் செய்தி

தமிழ்நாடு அரசு சார்பில் கலைமாமணி விருது வழங்கும் விழா 28.11.2009 அன்று சென்னையில் நடைபெறுவதையொட்டிச் சிறப்பு மலர் வெளியிடப்படுவது அறிந்து மகிழ்கிறேன்.

உலகின் பல்வேறு பகுதி மக்களாலும் பாராட்டப்படும் தமிழ்க் கலைகளைப் பொலிவோடும், புதுமை உணர்வோடும் பேணிவளர்த்திடும் குறிக்கோளுடன் தமிழக அரசு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாகக் கலைத்துறையில் செயற்கரிய தொண்டுகள் புரிந்துவரும் கலைஞர்களுக்கு ஆண்டுதோறும், 'கலைமாமணி விருது' வழங்கிப் பாராட்டி வருகிறது. அந்தவகையில் இயல், இசை, நாடகம், திரைப்படம், கிராமியக் கலைகள் ஆகிய பல்வேறு துறைகளிலும் முத்திரைகள் பதித்த பெருமக்களில் இதுவரை 1450 கலைஞர்களுக்கு விருது வழங்கிச் சிறப்பித்துள்ளநிலையில், தற்போது மேலும் 71 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது வழங்கப்படுகிறது. கலைஞர்களைப் போற்றுவதும் புகழ்வதும், விருதுகள் வழங்கிச் சிறப்பிப்பதும் இந்த நாட்டின் பண்பாட்டிற்கு அடித்தளமாக விளங்கும் பல்வேறு கலைகளையும் காக்கும் திருப்பணிகளென்றே இந்த அரசு கருதுகிறது.

அந்த உணர்வோடு இந்த ஆண்டில் கலைமாமணி விருதுபெறும் கலைஞர்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்து, விழாமலர் பல்வகைக் கலைஞர்களின் பெருமைகளையும் எடுத்துரைப்பதாக அமைந்திட என் நல்வாழ்த்துகளை உரித்தாக்குகிறேன்.

(மு.கருணாநிதி)

பெறுநர்

கவிஞர் இளையபாரதி,
உறுப்பினர்–செயலாளர்,
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்,
பொன்னி 31, பி.எல். குமாரசாமி ராஜா சாலை,
சென்னை – 600 028.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

முத்தமிழ் அறிஞர்

திரு **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்

**மு.க. ஸ்டாலின்**
துணை முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 20/11/2009

## வாழ்த்துச் செய்தி

தமிழ்க் கலைகளின் வளர்ச்சிக்கும், கலைஞர்களின் நல்வாழ்விற்கும், அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் செயலாற்றிவருவது **"இயல் இசை நாடக மன்றம்"** ஆகும். 28.11.2009 அன்று 42–வது கலைமாமணி விருது வழங்கும் விழாவினை நடத்தி, கலைத்துறையில் சிறந்து விளங்கி வரும் 71 கலைஞர்களுக்குக் **கலைமாமணி** விருது வழங்கிச் சிறப்பித்து, சிறப்பு மலரும் வெளியிட இருப்பது அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

1955–ஆம் ஆண்டில் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்ட இம்மன்றம், 1972–ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் ஆட்சி காலத்தில் **" தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் "** எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. சிறந்த கலைஞர்களுக்கு விருதும் பொற்பதக்கமும் வழங்கிப் பாராட்டுவது, சிறந்த கலைப் பணியும் பாராட்டுக்கு உரியதும் ஆகும்.

விழா சீரும் சிறப்புடன் நடைபெறவும், சிறப்பு மலர் சிறந்த கருத்தோவியங்களுடன் வெளி வந்திடவும், என் நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

20/11/2009

**(மு.க. ஸ்டாலின்)**

பெறுநர்

**கவிஞர் இளையபாரதி,**
**உறுப்பினர்–செயலாளர்,**
**தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்,**
**பொன்னி 31, பி.எல். குமாரசாமி ராஜா சாலை,**
**<u>சென்னை – 600 028</u>.**



மாண்புமிகு துணை முதலமைச்சர்

திரு **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

என். சுரேஷ்ராஜன்
சுற்றுலா மற்றும் பதிவுத் துறை
அமைச்சர்

வாய்மையே வெல்லும்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 20-11-2009

## வாழ்த்துச் செய்தி

அன்புடையீர் ! வணக்கம்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சி காலத்தில்தான் முன் எப்பொழுதும்விட இயல், இசை, நாடகக் கலை மெருகேறி சிறப்பாக செயல்படுகிறது. அதன் சிறப்பம்சமாக கலைமாமணி விருது வழங்கும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் விருது பெறும் அனைத்து கலைஞர்களையும் வாழ்த்துகிறேன். இந்த விருது கலைஞர்களை மென்மேலும் உற்சாகத்துடன் செயல்படவும், இவ்விழா வெற்றி பெற்றிடவும் எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்–கொள்கிறேன்.

அன்புடன்,

என். சுரேஷ்ராஜன் 20/11/09.

(என். சுரேஷ்ராஜன்)

பெறுநர்

கவிஞர் இளையபாரதி அவர்கள்,
உறுப்பினர் செயலாளர்,
தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்,
"பொன்னி" P.S. குமாரசாமி ராஜா சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-600 028.



மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர்

திரு **என்.சுரேஷ்ராஜன்** அவர்கள்

ப.அ.மணி, இ.வ.ப.,
ஆணையர்

கலை பண்பாட்டு இயக்ககம்,
தென்றல், கிரீன்வேய்சு சாலை,
சென்னை 600 028

நாள் 17.11.2009

## வாழ்த்துரை

இந்தியத் துணைக் கண்டத்தில், மிகவும் பழமையானதும், ஏறத்தாழ அரைநூற்றாண்டு கடந்துள்ள, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், கலைகளின் மேம்பாட்டு வளர்ச்சிக்கும், கலைஞர்களின் நல்வாழ்விற்கும் பல்வேறு அரிய கலைத் திட்டங்களை, பார் போற்றும் வண்ணம் தமிழக அரசின் உறுதுணையுடன் மிகச் சிறப்புடன் செயற்படுத்தி வருவது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

மேதகு ஆளுநர், மாண்புமிகு முதல்வரின் தலைமையில் நடைபெறும் 42வது கலைமாமணி விருது வழங்கும் நல் விழா சீரும் சிறப்புமாக அமையவும், கலைமாமணி விருது பெறும் 71 கலைஞர்களுக்கும் என் இதய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ப. மணி,
ஆணையர்,
கலை பண்பாட்டு இயக்ககம்

பெறுநர்

உறுப்பினர் செயலாளர்,
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
சென்னை 600 028

# ‘பொற்சிகரம் கலைஞர்’

## ஜெயகாந்தன்



மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு 86வது பிறந்தநாள் வாழ்த்து தெரிவிக்கும் எழுத்தாளர் ஜெயகாந்தன், உடன் மன்றச் செயலாளர் கவிஞர் இளையபாரதி

# Anyone can organise Chennai Sangamam: Kanimozhi

**'Nooru Pookal Malaratuum,' a collection of poetry, released**

Special Correspondent

**CHENNAI:** Holding Chennai Sangamam is not an exclusive right of a particular organisation and anyone interested in art, music and culture could organise the festival, said DMK MP Kanimozhi who is also the co-ordinator of Chennai Sangamam.

Releasing 'Nooru Pookal Malaratuum,' a collection of poetry written in the two previous editions of Chennai Sangamam, Ms.Kanimozhi said that the event should emulate the December Music festival in Chennai.

She said though an institution like the Music Academy pioneered the concept of the December festival, today more and more sabas were organising music festivals making it an annual event.

"All should come forward and organise Chennai Sangamam," she added.

Ms.Kanimozhi said that the response to Chennai Sangamam had proved that Tamil society, especially the youth, had not forgotten their roots.

Information Minister Parithi Ilamvazhuthi stressed the need for purging the folk arts of vulgar themes and messages.

"Chennai Sangamam has rejuvenated the art forms that will otherwise be dying for want of patronage," he added.



**AUSPICIOUS START:** *Rajathi Ammal at a book launch function to coincide with the Chennai Sangamam in Chennai on Sunday. (From left) MP Kanimozhi, scholar Jagathratchagan, poet Vairamuthu and Minister Parithi Ilamvazhuthi are also in the picture.* – PHOTO: M.KARUNAKARAN

Poet Vairamuthu said that in Chennai Sangamam Tamil and Music had replaced religion as a theme of celebration.

Tamil scholar Jagathratchagan said the event had identified Ms.Kanimozhi as a great organiser.

The first copy of the book was received by Chief Minister M. Karunanidhi's wife Rajathi Ammal. Tamil Sangamam organiser Poet Ilayabharathi also spoke.

**சென்னை, தியாகராய நகர். சர்.பிட்டி தியாகராயர் கலையரங்கில் 11.01.2009 அன்று நடைபெற்ற சென்னை சங்கமத்தின் ஒரு அங்கமாகிய தமிழ்ச்சங்கமம் துவக்க விழாவில்**

# சிகரங்களில் உறைகிறது காலம்



'சிகரங்களில் உறைகிறது காலம்' என்ற கனிமொழியின் கவிதைநூலை பலமுறை படித்தேன். பலமுறை படிக்கும் விதமாக, யோசிக்கும் விதமாக அந்த நூல் அமைந்திருந்தது.

என்னைப் பார்க்க வந்த ஒரு நண்பரிடம் இந்தப் புத்தகத்தைக் கொடுத்து படிக்கச் சொன்னேன். படித்துவிட்டு வந்த அவரிடம் என்ன புரிகிறதா என்று கேட்டேன். அவர் புரியவில்லை என்றார். சரி இந்தப் புத்தகத்தில் உள்ள படங்களாவது புரிகிறதா என்று கேட்டேன். அவர் அதுவும் புரியவில்லை என்றார். நாம் ஒரு புத்தகத்தை நம்பிப் படிக்கவேண்டும். அந்தப் படைப்பின்மேல் ஆழமான நம்பிக்கை வைக்கவேண்டும்.

'சிகரங்களில் உறைகிறது காலம்' என்ற தலைப்பை நான் யோசித்துப் பார்த்தேன். வள்ளுவர் ஒரு சிகரம், அதில் காலம் உறைகிறது. கம்பன் ஒரு சிகரம், அதில் காலம் உறைகிறது. பெரியார் ஒரு சிகரம், அதில் காலம் உறைகிறது. அண்ணா ஒரு சிகரம், அவரில் காலம் உறைகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, இதோ எதிரே அமர்ந்திருக்கிறாரே கலைஞர் அவரே ஒரு பொற்சிகரம். அவரில் காலம் உறைகிறது. இந்தச் சிகரங்களின் வரிசையில் கனிமொழியும் ஒருவராக உயரவேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

– ஜெயகாந்தன்



## இயல் இசை நாடக மன்ற விழாக்களில்

# கவிஞர் கனிமொழி எம்.பி. அவர்கள் ஆற்றிய உரைகள்

இந்த தமிழ்ச் சங்கமத்திற்கு வந்திருக்கக்கூடிய அத்தனை தமிழ் நெஞ்சங்களுக்கும் என் மாலை வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த தமிழ்ச்சங்கமத்தை சென்னை சங்கமத்தோடு சேர்த்து நடத்த வேண்டும் என்று முடிவு செய்தபோது, இத்தகைய ஒரு பெரிய காரியத்தைச் சிறப்பாகச் செய்யக் கூடிய என் நம்பிக்கைக்கு உரியவராகக் கவிஞர் இளையபாரதி ஒருவரைத் தான் என்னால் நினைத்துப் பார்க்க முடிந்தது. அப்போது அவரை அழைத்து இதை செய்யமுடியுமா? என்று கேட்டோம். முதலாண்டு சங்கமம் நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை நாங்கள் செய்து கொண்டிருந்தபோது அதை எப்படி சரியாகச் செய்வது, எப்படி ஒருங்கிணைப்பது, என்று ஒரு பெரிய குழப்பம் இருந்தது. நண்பர்கள் அனைவருக்கும் தெரியும். அந்த நேரத்தில் இவர் இந்தப் பொறுப்புகளை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு ஆண்டும் சங்கமம் நிகழ்ச்சிகளைப் பற்றி பார்க்கும்போது முதலில் அழைப்பிதழ் வருவது இந்த தமிழ்ச் சங்கமத்தின் நிகழ்ச்சிகளுக்காகத்தான் இருக்கும். ஏனென்றால் அந்த அளவுக்கு சரியாகத் திட்டமிட்டு இந்த நிகழ்ச்சிகளைச் செய்யக் கூடியவராக அவர் இருக்கிறார். அதற்கு இந்தச் சந்தர்ப்பத்தில் என் நன்றியை, நான் கவிஞர் இளையபாரதி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



எங்களது சங்கமம் நிகழ்ச்சிகளாக இருக்கட்டும். நான் எதற்கு அழைத்தாலும் எப்போதும் உறுதுணையாக ஓடோடி வரக்கூடிய அண்ணனாக இருக்கும் அமைச்சர் பரிதி இளம்வழுதி அவர்களுக்கு என் வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் புத்தகத்தின் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்ட திருமதி ராஜாத்தி அம்மையார் அவர்களையும் வருக வருக என்று வரவேற்கிறேன். கவிஞர் இளையபாரதி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். எத்தனையோ இளைஞர்களுக்கு ஆதர்ஸமாக தமிழின் மீது ஒரு ஆர்வமும், அக்கறையும் எழ முதல்படியாக அவர்களையெல்லாம் வசீகரித்து தமிழ் என்ற உலகத்திற்கு அழைத்து வரக்கூடியவராக இருக்கும் கவிப்பேரரசு அவர்களையும் இந்த நிகழ்ச்சிக்கு வருக வருக என்று வரவேற்கிறேன். டாக்டர் ஜெகத்ரட்சகன் அவர்கள், அவர் பேசும்போது அது தமிழா, தமிழ் மழையா, என்று நம்மைச் சிந்திக்க வைக்கும். வெள்ளம் கரைபுரண்டு ஓடும்போது அது அதன் துள்ளலும், எழுச்சியும் எவ்வளவு அதிகமாக இருக்குமோ அவ்வளவு அதிகமான தமிழ்நடையில் பேசக்கூடியவர். அவரையும் இந்த நிகழ்ச்சிக்கு வருக வருக என்று வரவேற்கிறேன்.

இந்தப் புத்தகத்தைப் பற்றி ஒரு உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் இதில் தொகுப்பு கனிமொழி என்று போட்டிருக்கிறது. இந்தப் புத்தகத்தை நான் இன்றைக்குத் தான் முதன்முதலாகப் பார்க்கிறேன். இதுவும் அவருடைய பெரிய தியாக உள்ளத்தின் ஒரு பரிமாணம் என்று எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் இந்தத் தமிழ்ச் சங்கமம் வெற்றிகரமாக நடத்தி வருவதற்கு அத்தனை முழு காரணமாக இருக்கக்கூடியவர் கவிஞர் இளையபாரதி அவர்கள்தான். ஏனென்றால் ஒவ்வொன்றுக்கும் எல்லோரும் ஓடிக்கொண்டிருக்கிற நேரம். எதற்காகவும் ஒருகேள்விகூட இருக்காது. இதைப் பண்ணலியே. அந்த முதல் லிஸ்ட் போட்டு வந்து காட்டிவிட்டு போறதோட சரி. நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பது, கவிஞர்களை அழைப்பது, பேச்சாளர்களை அழைப்பது எதுவாக இருந்தாலும் அவரே முடிவு செய்து, அவரே அந்த நிகழ்ச்சிகளை மிகச் சிறப்பாக ஒவ்வொரு ஆண்டும் செய்து கொண்டிருக்கிறார். அது போல தான். இந்தப் புத்தகத்தை வெளியிட வேண்டும் என்று சொல்லி, தொகுப்பு கொண்டு வருகிறேன் அப்படின்னு சொன்னாங்க, இந்த அளவுக்கு மிக குறுகிய கால கட்டத்திற்குள் இந்தக் கவிதைகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து, இந்த மிக அழகான தொகுப்பை அவர் வெளிக்கொண்டு வந்திருக்கிறார். அவருக்கு என் பாராட்டுக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சென்னை சங்கமம் என்பது தமிழர்களின் பாரம்பரியக் கலைகளை, அவர்கள் ஒரு மீட்டுருவாக்கம் செய்யக்கூடிய ஒன்றாக இருக்கவேண்டும் என்று நினைத்தோம். ஆனால் சென்னை சங்கமம் என்பது இந்தக் கலைகளை, நம் தொன்மையானக் கலைகளை,



பாரம்பரியக் கலைகளை மக்களிடம் சென்றுசேர்க்கக்கூடிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாக அமைவதற்குக் காரணம் அதற்காகப் பாடுபட்ட எத்தனையோ பேர், அதற்காக எத்தனையோ ஆண்டுகளாக அந்தக் கலைகளை போஷித்து, பாதுகாத்து அவை உயிர்ப்போடு இருப்பதற்குக் காரணமாக இருக்கக்கூடிய நா.முத்துசாமி போன்றவர்கள், சா.க (சா.கணேசன்) போன்றவர்கள் எல்லாம் அவர்களுடைய உழைப்பு. இப்படி எத்தனையோ பேருடைய உழைப்புதான் இன்று இந்தச் சென்னை சங்கமம் போன்ற ஒரு நிகழ்ச்சி வெற்றிகரமாக நடைபெறுவதற்கு, இத்தனைப் பேர்களுடைய உழைப்பும், ஆர்வமும் பின்புலமாகக் காரணமாக இருக்கிறது என்று கூறி, அவர்களுக்கும் இந்த மேடையில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறன்.

ஏனென்றால் இந்தக் கலைகள் எல்லாம் பாதுகாக்கப்பட வேண்டும். இவற்றின் ஆர்வம் குறைந்துவிடக்கூடாது என்று எத்தனையோ பேர், பல Universities. திருச்சியில் இருக்கக்கூடிய St.Xavier University யிடமிருந்து எத்தனையோ இடங்களில் இதைப் பற்றிய ஆராய்ச்சிகள், மாணவர்கள் எத்தனையோ பேர் வந்து இதைப் பல ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார்கள். இந்தக் கலைகள் எல்லாம் அழிந்துபோய்விடக் கூடாது என்று, அதை எடுத்துக்கொண்டு போய் மக்களிடமும், இளைஞர்களிடமும் பரப்பி இருக்கிறார்கள். இவர்களுடைய உழைப்பெல்லாம் சேர்ந்துதான் இந்த நிகழ்ச்சியின் வெற்றி சாத்தியமாகியிருக்கிறது. அவர்கள் அத்தனைப் பேருக்கும் என் நன்றியை நான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சி துவங்கிய போது நாங்கள் இது இவ்வளவு

2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா

**இத்தகைய ஒரு பெரிய காரியத்தைச் சிறப்பாகச் செய்யக் கூடிய என் நம்பிக்கைக்கு உரியவராகக் கவிஞர் இளையபாரதி ஒருவரைத் தான் என்னால் நினைத்துப் பார்க்க முடிந்தது.**

வெற்றிகரமாகவும், இவ்வளவு ஆர்வத்தோடும் வரவேற்கப்படும் என்று எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால் நாமெல்லாம் ஒரு மாயையில் சிக்கிக் கொண்டிருந்தோம். நமக்கு திரும்பத் திரும்பச் சொல்லப்பட்ட ஒரு மாயை அது. தமிழ் மீதும், தமிழ்க் கலைகள் மீதும், நமது பாரம்பரியமான விஷயங்கள் மீதும் மக்களுக்கும், இந்த இளைய தலைமுறைக்கும் அக்கறை இல்லை. தமிழைப் பற்றி பேசினாலோ இல்லன்னா நம்முடைய கலைகளைப் பற்றி பேசினாலோ அது ஒரு சின்ன நகைப்புக்குரிய ஒரு விஷயமாக மாற்றப்பட்டு, அதை நாமே நம்மை, நாமேன்னா நான் எல்லாரையும் சேர்த்து சொல்லல. நிச்சயமாக எனக்கும் அந்த ஒரு சின்ன அச்சம் துளிர்க்க துவங்கி இருந்த நேரம். இந்தச் சங்கமம் நிகழ்ச்சிகளை நாங்கள் நடத்தும்போது அதற்கு மக்களிடம் இருந்த வரவேற்பு இந்தத் தமிழ்ச் சங்கமத்திற்கு மக்களிடம் இருக்கக் கூடிய வரவேற்பு. அந்த ஆய்வுகளை, அங்கு படிக்கப்படும் கட்டுரைகளை இளைஞர்கள் எப்படி எதிர்கொள்கிறார்கள் என்று பார்க்கும்போது நிச்சயமாக இந்தச் சமூகம் தனது வேர்களை அது இழந்துவிடவில்லை என்ற நம்பிக்கையை எங்களுக்குள் எல்லாம் மீண்டும் விதைத்திருக்கிறது. அது தான் மிக முக்கியமான ஒன்றாக இந்தச் சங்கமத்தின் ஒரு முக்கியமான வளர்ச்சியாக இந்தச் சங்கமத்தின் மூலம் நாங்களே கற்றுக்கொண்ட ஒன்றாக நாம் கருதுகிறோம்.

இது இந்தச் சின்ன நம்பிக்கை, நமக்குள் எழுந்திருக்கக் கூடிய இந்த ஒரு சின்ன நம்பிக்கை இன்னும் வளர்ந்து இந்தச் சங்கமம் என்பது இது யாருக்குமோ ஒருவருக்கோ ஒரு அமைப்பிற்போ சொந்தமான ஒன்று இல்லை. இதை யார் வேண்டும் என்றாலும் சொந்தம் கொண்டாடலாம். உரிமை கொண்டாடலாம். பலர் வேண்டுமென்றாலும் எடுத்துக்கொண்டு இதைச் செய்யலாம். இது தமிழ் மையம்தானோ, இல்லன்னா சுற்றுலாத் துறையோ, இளையபாரதி போன்றவர்களோ தான் செய்ய வேண்டும் என்று எந்தக் கட்டுப்பாடுகளும், எந்த விதிமுறைகளும் இல்லை. இது எல்லோருக்கும் சொந்தமான ஒரு விழா. மக்களுக்கு ஒரு விழா. இதை ஒரு அமைப்பு தன் கையில் வைத்துக்கொண்டிருப்பது என்பது அவ்வளவு ஆரோக்கியமான விஷயம் இல்லை என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இதை மக்கள் தங்கள் விழாவாக, எல்லோரும் தங்கள் விழாவாக மாற்றிக்கொண்டு, இன்னொரு இடத்துல செய்யும்போது அடுத்த ஆண்டு இந்த நிகழ்ச்சிகளை நடத்தும்போது வேறு ஒரு அமைப்போ, வேறுயாரோ, ஒரு சிலரோ இதை எடுத்துக்கொண்டு அவர்கள் செய்யவேண்டும். அவர்கள் உருவாக்க வேண்டும். அப்படி ஒவ்வொரு இடத்திலேயும் கல்கத்தாவில் வந்து துர்கா பூஜை பண்ணும்போது யாரோ அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் யார் வேண்டுமென்றாலும் ஒன்றாக இணைத்து அதை செய்கிறார்கள். அப்படி ஒவ்வொரு, அதாவது இந்தச் சென்னையில் நடக்கக்கூடிய டிசம்பர் Music Festival ஒரு பெரிய Umberella க்குக் கீழே வரக்கூடிய ஒருவிஷயமாக அது இருக்கிறதோ, ஒரு பெரிய குடைக்குக் கீழே வரக்கூடிய ஒரு விஷயமாகத் தான் இருக்கிறதே தவிர, அது ஒரே ஒரு அமைப்பு மட்டும் மியூசிக் அகாடெமி என்று ஒரு அமைப்பு அது துவங்கியிருந்தாலும் இன்றைக்கு அது விரிந்து யார் வேண்டுமென்றாலும் அந்த நிகழ்ச்சிகளை நடத்தலாம். அந்தக் காலக் கட்டத்தில் நடத்தலாம். அப்படி என்று உருவாகியிருக்கிறது. அதுபோன்று இந்தப் பொங்கல் நேரத்தில் நம்முடைய பாரம்பரியக் கலைகளை மக்களிடம் எடுத்துக்கொண்டு போய் சேர்க்கக்கூடிய இந்த நிகழ்ச்சியை எல்லோரும் இணைந்து நடத்தவேண்டும் என்பதுதான் எங்கள் அவா. அதற்கு உறுதுணையாக எங்களை ஊக்குவிக்கும் வகையில் வந்திருக்கக் கூடிய உங்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேடையில் இருக்கக்கூடிய இருவரும் தமிழில் ஆழ்ந்த ஆர்வமும், அறிவும் உள்ளவர்கள். இளைஞர்களைத் தமிழின் அந்தத் தொடர்ச்சியை இன்னும் அவர்களோடு ஒரு இணைப்பு உருவாக்கி, இளைஞர்களை இன்னும் தமிழும், கலைகளுக்குள்ளும் வசீகரித்து வைத்திருக்கக்கூடியவர்கள். இப்படிப்பட்ட எத்தனையோ பேர் இங்கு வந்திருக்கிறார்கள். கவிஞர் சல்மாவாக இருக்கட்டும், கவிஞர் தமிழச்சியாக இருக்கட்டும் இங்கு வந்திருக்கக்கூடிய மற்ற எழுத்தாளர்களாக இருக்கட்டும். இப்படி எத்தனையோ பேர் தமிழ்ப் பல்கலைக்கத்தின் துணை வேந்தர் அவர்கள் வந்திருக்கிறார்கள். இப்படி இளைஞர்களோடு தொடர்ந்து பணியாற்றக்கூடிய எத்தனையோ பேர் இங்கு வந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் இந்தத் தொடர்ச்சியை, நமது கலைகளின் தொடர்ச்சியை, நமது பாரம்பரியங்களின் தொடர்ச்சியை எல்லாருக்கும் எடுத்துச்செல்லவேண்டும் என்பதை கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

# 29.3.2008 அன்று தியாகராய நகர், வாணிமகாலில் நடைபெற்ற ஒன்பதுநாள் ஒப்பற்ற கலை இலக்கியத் திருவிழாவில்...

அனைவருக்கும் வணக்கம். பொதுவாக சில பேர் வீட்ல வந்து காலையிலே எழுந்து பூஜை பண்ணுவாங்க, சில பேர் தானா பண்ணுவாங்க, சில பேர்வந்து ஒரு குருக்களை கூட்டி வந்து பண்ணுவாங்க. தொடர்ந்து ஒரேஒரு குருக்களை தான் சில பேர் கூப்பிடுவாங்க. அது மாதிரி இளையபாரதி எந்த நிகழ்ச்சி நடத்தினாலும், அதற்கு முதல்ல என்னைக் கூப்பிடுவாரு. ஏன்னா குருக்களை கூப்பிடுவதற்கு ஒருவழி இருக்குது. ஆனால் பொதுவாக இந்த இயல் இசை நாடக மன்றம் அப்படிங்கிறது வந்து திரு.இராம நாராயணன் அவர்களையும்
திரு. இளையபாரதி அவர்களையும் பொறுப்பு ஏற்றுக்கொள்வதற்கு முன்னால் நாம் அதிகமாக அறியப்படாத ஒரு சீக்ரட் சொசைட்டி என்று சொல்வார்கள். இல்லையா? அதுமாதிரி இயங்கிகிட்டு இருந்த ஒருவிஷயமாகவே அது இருந்தது. இவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு பல விஷயங்களை, பல நல்ல நிகழ்ச்சிகளை, பல விழாக்களை, நமது பாரம்பரியத்தை, நமது பண்பாடுகளை, நமது இசையை வெளிக்கொணரும் நமது கலைஞர்களை ஊக்கப்படுத்தும் விதமாக பல நிகழ்வுகளை இவர்கள் நிகழ்த்தி இருக்கிறார்கள்.



இத்தனைநாள் அவர்கள் செய்த நிகழ்ச்சிகளுக்கும், இந்த ஒயிலான திருவிழாவாக இருந்தாலும், ஒப்பற்ற விழாவாக இருந்தாலும், அது ஒயிலைவிட ஒப்பற்ற விழாவாகத்தான் இங்கே வந்த பிறகு தலைவர் அவர்கள் நிஜமாகவே முன்னாடியே உணர்ந்து ஒப்பற்றவிழா அப்படின்னு சொல்லியிருக்காங்க என்றுதான் நினைக்கணும். ஆனால் இதை மிகவும் முக்கியமான ஒரு விழாவாக நான் கருதுகிறேன். ஏன்னா இது வந்து திராவிட இயக்கப் படைப்பாளிகளில் துவங்கி ஜீவா,பாரதியார், இப்படி போய் கடைசியிலே தேவாரம் பாடினால் தில்லை அம்பலம் தீட்டாகுமா? அப்படின்னு இன்றைக்கு நாம் கேட்க வேண்டிய ஒரு கேள்வியோடு இந்த விழா நிறைவுறுகிறது.

இங்கே இந்தப் படைப்பாளிகளை நம்மையெல்லாம் உருவாக்கியப் பெரியாரில் துவங்கி படைப்பாளிகளின் படைப்புகளைப் பற்றி அது இந்தச் சமூகத்தில் செய்து இருக்கும் தாக்கங்களைப் பற்றியெல்லாம் மிக விரிவாக அழகாக, எத்தனையோ அற்புதமானக் கருத்துக்களை திரும்பிப்போய் தேடி மறுபடியும் வாசித்துத் தெரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு ஊக்கத்தை இங்கு பேசிய பேச்சாளர்கள் எல்லாம் நம் முன் உருவாக்கி இருக்கிறார்கள். ஆனால் அதையும் தாண்டி இதை மிக முக்கியமான ஒரு நிகழ்வு என இந்த மறு வாசிப்புக்கு வேண்டிய ஒரு விஷயம் என இந்தத் திராவிட இயக்கப் படைப்பாளிகளை பொதுவாகவே இப்ப நமக்கே கூட இது என்னமோ திராவிட இயக்கம் திருப்பித் திருப்பி கூட ஒரு பொய்யச் சொன்னா ஒன்பது தடவை ஒருபொய்யச் சொன்னாக் கூட வந்து அதுவே மக்கள் மத்தியிலே, மனசுலே வந்து பதிஞ்சிடும் என்று சில கணக்கெடுப்புகள் சொல்லுது. ஹிட்லர் கூட வந்து இந்தப் பாணியைத் தான் பின்பற்றினார். அதைப் போல இளைஞர்கள் மனதில், இளைய சமுதாயத்தின் மனதில் திரும்பத் திரும்ப திராவிட இயக்க எழுத்துக்கள் என்பது இலக்கியம் இல்லைனும் அதைப் புறக்கணிக்கணும்னும் சொல்லப்பட்டு இருக்கிறது. நமக்குள் அது ஊட்டப்பட்டு இருக்கிறது.

2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா

**இராம நாராயணனும், இளையபாரதியும் பொறுப்பு ஏற்றுக்கொள்வதற்கு முன்னால் நாம் அதிகமாக அறியப்படாத ஒருசீக்ரட் சொசைட்டி என்று சொல்வார்கள். இல்லையா? அதுமாதிரி இயங்கிகிட்டு இருந்த ஒரு விஷயமாகவே இயல் இசை நாடக மன்றம் இருந்தது.**

அதனால் இந்த பொய்யான கருத்தாக்கங்களால் ஏன்னா ஒருவிஷயத்தை மக்களோடு பகிர்ந்துக்கிறது தான் எந்த படைப்பு இலக்கியமாக இருந்தாலும் ஒரு படைப்பாளியாக இருந்தாலும் அவங்களுக்கு வந்து ஏதோ ஒருவிஷயத்தை, தான் நம்பும் ஒன்றை சொல்ல விரும்பும் ஒரு கருத்தை வந்து மக்களோடு பகிர்ந்துக்கிறதுக்காக நாம் பாடறோம் பேசறோம் அப்படிங்கிறது, ஏன்னா அது தான் அடிப்படை.

ஆனால் சில பேர் இருக்காங்க. தான் சொல்ல வந்த எந்த ஒரு விஷயத்தையும் யாரும் புரிஞ்சிக்கக் கூடாது. அப்படிங்கிற ஒரு கோட்பாட்டை வைத்துக்கொண்டு எழுதுகிறவர்களும் இருக்கிறார்கள். இதை வந்து சிறு பத்திரிகையைப் படிக்கிறவங்களுக்கு எல்லாம் அது தெரியும். ஆனால் பொதுவாக எழுதுவது என்பது ஒருத்தருக்கு தான் நம்பும் விஷயத்தைக் கொண்டு போய் சேர்ப்பதற்காகத்தான். இதைத்தான் திராவிட இயக்கப் படைப்பாளிகள் செய்தார்கள். இதை விட்டுவிட்டு எதுக்காக அந்தப் பொய்? சொல்ல நினைத்த அந்த விஷயம் இன்றைக்கு உங்களையும், என்னையும் இங்கு கொண்டு வந்து கீழே இராமாயணம் நடக்குது, அதுக்கு மேலே நம்மைக் கொண்டு வந்து வச்சிருக்கு இல்லையா? இது அவர்கள் கொண்டு வந்த மாற்றம். தி.நகரில் நம்மாலே இந்த இடத்திலே கூட்டம் நடத்த முடியும்ன்னா அவர்கள் கொண்டு வந்த ஒரு மாற்றம்.

இத்தனைப் பெண்கள் இங்கு வந்து படித்துவிட்டு அமர்ந்து இருக்கிறார்கள் என்றால் அவர்கள் கொண்டு வந்த மாற்றம். அது வந்து பள்ளிக்கூடம் இருக்கிற தெருவிலே நடந்துபோகக் கூடாது என்று வைத்திருந்த பிள்ளைகள் படித்துவிட்டு இருக்கிறார்கள் என்றால் அவர்கள் கொண்டு வந்த மாற்றம் இது. இதுதான் ஒரு படைப்போடும் இலக்கியத்தோடும் எழுத்தோடும் எந்த மேடையேறும் எந்த ஒரு விஷயமாக இருந்தாலும் அதன் அடிப்படையாக இருக்கவேண்டும் என்ற இதைத்தான் செய்து இருக்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ளமுடியும். ஆனால் இதையும் தாண்டி நாம் எதற்காக இந்தத் தருணத்தில் மறு வாசிப்பு செய்ய வேண்டும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஏன்னா? இன்னொரு விஷயம் வந்து ஒரு காலத்திலே வந்து பல போராட்டங்கள் இருந்தது. ஆங்கிலேயர்களை விரட்ட வேண்டி இருந்தது. இல்லன்னா இந்தி எதிர்ப்பு இருந்தது. அடிதட்டு மக்களை வந்து எழுப்பி விட வேண்டிய ஒரு அவசியம் இருந்தது. ஆனால் இந்தக் காலக் கட்டம் அதையெல்லாம் தாண்டி வந்து விட்ட ஒன்று. இப்ப எந்தப் போராட்டங்களுக்குமான களங்களும் அவசியமும் இல்லை. இன்றைக்கு இருக்கின்ற தலைமுறைக்கு வந்து எதிர்ப்புகள் இல்லை. தலைமுறைகள் தாண்டிக் கடக்க வேண்டிய எந்தத் தடைகளும் இல்லை. இது வந்து நமக்குள்ள இன்னொரு பொய். நமக்குள்ள நமக்காகச் சொல்லப்படுகின்ற இன்னொரு பொய். எல்லாம் கிடைச்சிருச்சி. நமக்கு கிடைக்க வேண்டிய நியாயமான சுயமரியாதையும், உரிமையும் கிடைத்துவிட்டது. இந்த ஒருவிஷயம் வந்து இப்பப் பரவலாக அத்தனை ஊடகங்கள் வழியாகவும் படித்த மேதாவிகளின் வழியாகவும் சொல்லப்படும் இன்னொரு கருத்து அது. ஆனால் உண்மை என்னவென்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்மைச் சுற்றி என்ன என்ன நடந்துகிட்டுஇருக்கு. ஒரு ஆக்கப்பணி. இது யாருக்காகவும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்து சேரவேண்டிய ஒருபெருமை இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டுமே ஒருபெருமை இல்லை.

'இராமர் பாலம்' இதை எதை வைத்துகிட்டு எதிர்க்கிறீங்க? மதம். அதற்கு வந்து எதிர்ப்பாக மாற்றி நீங்கள் அதை உருவகமாக மாற்றும் விஷயம் என்ன? தலைவர் கலைஞர் அவர்கள் ஆனால் திரும்பத் திரும்ப பேசி இந்த ஒரு ஆக்கப்பூர்வமான ஒரு விஷயத்தை, இதை மாநிலத்தையே இந்த மக்களுக்கு வந்து சேர வேண்டிய சிறப்புகளை, செழுமைகளை எல்லாம் தடுக்கும் ஒரு விஷயம். ஒரு பொருளாதார அடிப்படையிலே நமக்கெல்லாம் எதற்காக இந்தப் போராட்டம்? எதற்காக இந்த மலர்ச்சிகள், மறுமலர்ச்சிகள். இதையெல்லாம் எதை நோக்கி பொருளாதாரத்தில் நாம் முன்னேற வேண்டும். பொருளாதாரத்தில் ஒரு மாற்றம் வரவேண்டும். நம்மப் பிள்ளைங்க படிக்கவேண்டும். நமக்கு ஒரு அடிப்படை வசதி வந்துசேரவேண்டும். இதுக்காகத்தானே இதையே அடித்து, ஒடித்து, நொறுக்கி விடுகிற செயல்தானே. இது சாதாரணமாக ஒரு மீன் பிடி கிராமமாக இருந்த சென்னை நகரம் இன்றைக்கு இவ்வளவு சிறப்பு பெற்று இருக்கிறது என்றால் இங்கு ஒரு துறைமுகம் உருவாக்கப்படுகிறது. ஆனால் இதை

எத்தனையோ துறைமுகங்கள் உருவாக்கக்கூடிய விஷயம் வந்து இந்த சேது சமுத்திர திட்டம் என்பது தமிழகத்தின் அத்தனை கரையோரப் பகுதிகளில் எத்தனையோ துறைமுகங்கள் சின்னதும், பெரிசுமாக. அதனைச் சுற்றி எத்தனை வளர்ச்சி, எத்தனை தொழிற்சாலை, எத்தனைப் பேருக்கு வேலை வாய்ப்பு, எத்தனைப் பேருக்கு கல்விக் கூடங்கள், மருத்துவ வசதிகள். இந்தப் பொருளாதாரத்தையே தமிழகத்தையே மாற்றக்கூடிய ஒரு திட்டம். அதை எதற்காக நீங்கள் எதிர்க்கிறீர்கள்.

அந்தப் பேரை வைத்துக்கொண்டு நீங்கள் எதிர்க்கிறீர்கள். ரிசர்வேஷன். இட ஒதுக்கீடு. இட ஒதுக்கீட்டால் படித்துவிட்டு, இட ஒதுக்கீட்டை பயன்படுத்தி ஒரு நல்ல வேலையிலே உட்கார்ந்துகிட்டு, கம்ப்யூட்டர் முன்னாடி உட்கார்ந்துகிட்டு, அந்தப் பிள்ளைகளையே டியூப் லைட்லே திரும்பி எதுக்கு இது. கிரிமிலேயர் எடு. பொருளாதார அடிப்படையிலே இதை கொடுக்க வேண்டாமா? இதுல என்ன நியாயம் இருக்கு? அப்படின்னு கேள்வி கேட்கிற அளவுக்கு நமக்கு அறிவு மழுங்கடிக்கப்பட்டுவிட்டது. அப்படி ஒரு காலகட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். இப்படி ஒன்று இரண்டு அல்ல எத்தனையோ விஷயங்கள். இந்தத் தருணத்திலே தான் நாம திராவிட இலக்கியத்தையும், திராவிட இயக்கத்தின் கருத்துக்களையும் மீண்டும் எடுத்துச் சீர்தூக்கி, மறு வாசிப்பு செய்ய வேண்டிய ஒரு கால கட்டத்தில் இருக்கிறோம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இதை எல்லாம் விட்டுட்டு, இதை எல்லாம் தாண்டி நாம் வந்த பாதை என்ன என்பதை மறந்துவிட்டோம் என்றால் நாம் போக வேண்டிய தூரம் ரொம்ப ரொம்பத் தள்ளி போய்விடும். போய்ச் சேரவே முடியாது.

ஏன்னா? இதை நாம் இன்றைக்கு ஒதுக்கினோம் என்றால் தில்லை அம்பலம் நிச்சயமாகத் தீட்டாகும் என்று அவர்கள் சொல்லுவார்கள். ஏன்னா? எத்தனை ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு தேவதாசிப் பெண் கட்டிய ஒரு கோயிலில், அங்க நிகழ்த்தப்படும் ஒரு நிகழ்ச்சியில், திருவையாறு அங்கு தமிழிலே பாடக் கூடாது. பாடினால் மேடை தீட்டாகிடும் அப்படின்னு சொல்லி, அந்த மேடையைக் கழுவிவிட்டு அங்கு அடுத்தப்பாடல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதைத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் கூட வந்து தீட்டாயிடுது அப்படின்னு தலையங்கம் ஒன்று எழுதி, பெரியார் அவர்களாலேயே பாராட்டு பெறுகிறார்கள். இப்படி ஒரு அந்த மாதிரி சம்பவங்கள், அந்த மாதிரி நிகழ்வுகள் மீண்டும் போயிடுச்சு என்று கூட நாம் சொல்ல முடியாது. மீண்டும் உருவாகும் என்று கூட வெளிப்படையாக நடக்கும். ஏன்னா? நாங்கள் படைப்பாளிகள். அதாவது திராவிட இயக்கப் படைப்பாளிகள் மேலே ஒரு பெரிய குற்றச்சாட்டு. சில நாட்கள் முன்னாடிகூட இளங்கோவன் அவர்கள் என்னுடன் பேசிக்கொண்டிருந்தபோது சொன்னார்கள். ஜெயமோகன் அவர்கள் எழுதினார், நீங்கள் யாராவது வாய் திறந்தீர்களா? என்று. அன்றைக்கு வரைக்கும் நினைச்சேன். இதை வந்து நாம பெரிசு பண்ணக்கூடாது. உதாசீனப்படுத்த வேண்டும். இவரைப்போய் ஒரு பெருசா வளர்த்துவிடக்கூடாது நம்ம எதிர்ப்பால்.

அதனால நாம ஒதுக்கிடணும் அப்படின்னு நினைத்து எத்தனையோ பேர். அத்தனைப் பேரும் வாயை மூடிகிட்டு இருந்தோம். ஆனால் ஒவ்வொரு தடவையும் நாம வாயை மூடிகிட்டு இருந்தப்போ நாம மழுங்கிட்டோம். கத்தி முனை உடைந்து போய்விட்டது. அப்படிங்கிற தைரியம் அவர்களுக்கு வருகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஒரு எழுத்தாளன் மனதில் உன்னதங்களை எழுத வேண்டும். அதில இருக்கிற அவலங்களை எழுதவேண்டிய ஒரு எழுத்தாளன். எம்.ஜி.ஆர். அவர்களோடு நமக்கு ஆயிரம் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால் கழுத்தில் குண்டடிப்பட்டு, அதனால் ஏற்படும் ஊனத்தையும் தாண்டி ஒரு மனிதன் இந்தச் சமூகத்தில் ஜெயித்துக் காட்டுகிறார். திரைப்படங்களில் தொடர்ந்து பணிபுரிகிறார் என்றால் அதற்கு நாம் தலை வணங்க வேண்டும். ஆனால் ஒரு ஊனத்தைக் கொச்சைப்படுத்தி, அவர் பேசும் விதத்தை கிண்டல் செய்து எழுதுகிறான் என்றால் அந்த மனிதனை நாம் மனிதனாகக் கூட கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது. அதைத் தாண்டி பெரியாரை அவர் ஏத்துக்கலையாம். நீ எதற்கு ஏத்துக்கணும்? ஏன்னா? நாங்கள் எல்லாம் ஏத்துக்கிட்டதாலே தான் இன்றைக்கு இந்த நிலைமையிலே இருக்கிறோம். ஆனால் சற்று அவரை ஒதுக்கி வைத்துவிட்டதால் தான் உங்களால் இன்றைக்கு எழுத முடிகிறது. அதையும் வெட்கம் கெட்டு நாங்கள் படித்துக்கொண்டு அமைதியாக இருக்கிறோம். அதனால் தயவுசெய்து இன்றைக்குத் துவங்கி இருக்கும் இந்த நிகழ்ச்சி என்பது தொடர்ந்து பல இடங்களிலும், அத்தனை ஊர்களிலும் நடைபெற வேண்டிய ஒன்று. இளைஞர்களிடம் எடுத்துக்கொண்டு செல்லப்பட வேண்டிய ஒன்று என்பதைக் கூறி, இல்லையென்றால், நாம் நம்முடைய சுயமரியாதையை நிச்சயமாகத் தொலைத்தவர்களாக, நம்ம எதிர்காலத்தைத் தொலைத்தவர்களாக மாறிவிடுவோம். அதைத் தான் நாம் எதிர்காலத் தலைமுறைக்கு விட்டுச் செல்வோம் என்பதைக் கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

# 28.7.2007 அன்று தியாகராய நகரில் நடைபெற்ற நாட்டுப்புறக் கலைவிழாவில்...

நாட்டுப்புறக் கலைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற முனைப்பு பல ஆண்டுகளாக கலா ரசிகர்களிடையே இருந்து வந்துகொண்டுதான் இருக்கிறது. அதற்கானப் பல முயற்சிகளை அவர்கள் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் அந்தக் கலைஞர்களை, அவர்களது வாழ்க்கையை, அந்த அடித்தட்டு மக்களை அன்றாடம் அவதியுறும் அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் இதுவரை பலருக்கு இருந்ததே இல்லை. அந்த ஒரு விஷயத்தைச் செயல்படுத்த அமைக்கப்பட்டிருக்கும் இந்த நல வாரியத்திற்கு எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளும் அதே நேரத்தில் இதைச் செய்திருக்கும் தமிழக அரசுக்கும், முதல்வருக்கும் உங்களோடு சேர்ந்து எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாகவே இந்த நாட்டுப்புறக் கலைக்கு மற்ற கலைகளைப் போல் அங்கீகாரமோ, கௌரவமோ கிடைப்பதே இல்லை. இந்தக் கலைகள் மக்களுடைய கலைகள் அடித்தட்டு மக்களால் பாதுகாக்கப்பட்ட கலைகள். எந்த இடத்திற்கு இந்தக் கலைகள் போனாலும் அவர்களது வாழ்க்கையை உள்வாங்கிக் கொண்டு, அவர்களது வலிகளை உள்வாங்கிக்கொண்டு அதை வெளிப்படுத்தும் கலைகளாகவே இவை இருந்து இருக்கின்றன. நாட்டுப்புறப் பாடல்களை எடுத்துக்கொண்டால் இப்ப சின்னப்பொண்ணு பாடின பாடல்களில், அந்த மக்களுடைய வாழ்க்கை, அந்த மக்களுடைய வலிகள், அந்த மக்களுடைய போராட்டங்கள் இதையெல்லலாம் தெளிவாகப் பார்க்கலாம். இப்ப கானா பாடல்களைப் பார்த்திங்கன்னா அந்த மக்கள் நகர்ப்புறத்தைச் சேர்ந்த வலிகள், அவர்களது போராட்டங்கள், அவர்கள் தொலைத்த வாழ்க்கை, அவர்களது ஏக்கங்கள் இதையெல்லாம் மிகத் தெளிவாகப் பதிவு செய்யும் கலை இது. சமீபத்தில் மலேசிய நாட்டு நாட்டுப்புற இசையைப் பற்றி, பாடல்களைப் பற்றி ஒரு புத்தகம் வெளிவந்தது. அதில் இங்கிருந்து போன தமிழர்கள் அங்கு ரப்பர் தோட்டங்களில் எத்தனைக் கண்ணீரும், செந்நீரும் சிந்தி வாழ்க்கையை ஓட்டவேண்டி இருந்தது என்பதைப் பற்றி அத்தனை அற்புதமானப் பதிவுகள் அந்தப் பாடல்களில் நாம் பார்க்கமுடியும். அந்தக் கங்காணி, வெள்ளைக்காரர்கள், இவர்கள் ஒரு ஐந்து நிமிடம் தாமதமாக வந்தால் காலையிலே தாங்க வேண்டிய வலிகள் எத்தனை? அடிகள் எத்தனை? இதையெல்லாம் சரித்திரத்தைவிட மிக அழகாக, தெளிவாக அந்தப் பாடல்கள் பதிவு செய்திருக்கின்றன. இப்படி ஒரு காலத்தின் பெட்டகமாக மக்களின் வாழ்க்கையின் பெட்டகமாக இதை எல்லாம் வலித்துக்கொண்டு, தன்னுள் வைத்திருக்கும் இந்தக் கலைகளை நாம் சரியாக புரிந்துகொள்ளாமல், அதற்குரிய அங்கீகாரத்தைத் தராமல், அந்தக் கலைஞர்களுக்கு உரிய மரியாதையைத் தராமல் இருப்பது நாம் நம்மைப் பற்றியே வெட்கி தலைகுனிய வேண்டிய ஒன்றாக இருக்கிறது. இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். வெளிநாடுகளைப் பற்றி நிறைய பேசுகிறோம். வெளிநாடுகளில் இப்ப பிளம்மிங்கோ அப்படிங்கிறது கூட ஒரு நாட்டுப்புறக் கலைதான். அந்தக் கலைஞர்கள் கூட உலகம் பூரா அங்கீகரிக்கப்படுகின்றார்கள். மரியாதை செய்யப்படுகின்றார்கள். அந்தக் கலைஞர்கள் யாரும் அடுத்த வேளை கஞ்சிக்கு அவதிப்பட்டுக் கொண்டிருக்கவில்லை. நாட்டுப்புறக் கலைஞர்கள் தான் அவர்கள். ஆனால் நல்ல வண்டிகள் இருக்கிறது. நல்ல வாழ்க்கை முறை இருக்கிறது. வீடுகளில் வசதியாக இருக்கிறார்கள். அவர்களது பிள்ளைகள் படிக்கிறார்கள். அந்தப் பிள்ளைகளின் கனவுகளை நிறைவேற்றக்கூடிய ஒரு வாழ்க்கை முறை அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் நமக்கு அங்கீகாரம் கிடைக்க, சில கலைஞர்களை எடுத்துக்கொண்டீர்கள் என்று கூறினால் கூட பிளைன்ல (Plain) ஏறி அவங்க அமெரிக்காவுக்கு போறாங்க, இல்ல பிரான்சுக்குப் போறாங்க, இஸ்ரேலுக்குக் கூட இப்ப சமீபத்தில் போய்விட்டு வந்தாங்க. அதுல ஏறிப்போய் ஒரு நல்ல நட்சத்திர விடுதியிலே தங்கி நிகழ்ச்சிகளை செய்துவிட்டு, திரும்பி வந்து அதே கிராமத்தில் விளக்கு இல்லாத, சாலைகள் இல்லாத வாழ்க்கையை வாழவேண்டி இருக்கிறது. தன் கனவுகளை எல்லாம் கசக்கிக்கொண்டு வாழ வேண்டி இருக்கிறது. அந்த நிலை மாற வேண்டும். அதற்கு இந்த நலவாரியம் நிச்சயம் ஆவன செய்யவேண்டும் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.



# 06.12.2008 அன்று சர்.பிட்டி.தியாகராயர் கலையரங்கில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவில்...

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவினை ஒட்டி ஏற்பாடு செய்திருக்கக்கூடிய இந்த 3 நாள் நிகழ்ச்சிகளுக்கு முதலில் எனது பாராட்டுக்களை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சில ஆண்டுகளுக்கு முன் இயல் இசை நாடக மன்றம் என்றால் என்ன? அவர்கள் செய்யக்கூடிய பணிகள் என்ன? என்பதை நாம் அநேகம் பேருக்குத் தெரியாத ஒரு காலக் கட்டம் இருந்திருக்கிறது. நமது மதிப்பிற்குரிய திரு.இராம.நாராயணன் அவர்களும், கவிஞர் இளையபாரதி அவர்களும் அதில் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு தொடர்ந்து பல நிகழ்ச்சிகளை மக்களுக்கு எதைப்பற்றி எல்லாம் விழிப்புணர்வு அவசியமோ அத்தகைய நிகழ்ச்சிகளை அவர்கள் செய்துகாட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது பணிகளுக்கு நான் எனது வாழ்த்துக்களை உங்களின் சார்பாக இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

இன்று ஒரு மிக முக்கியமான பதிவாகப் பேரறிஞர் அண்ணா அவர்களோடு தான் இருந்ததின் நினைவுகளை ஒரு புத்தகமாக எழுதி, அவர்களது அன்பிற்குப் பாத்திரமான கவிஞர் கருணானந்தம் அவர்கள் எழுதிய அந்தப் புத்தகத்தை, 'அண்ணா சில நினைவுகள்' என்ற புத்தகத்தை இன்று இயல் இசை நாடக மன்றம் வெளியிடுகிறது. இந்தப் புத்தகத்தை வெளியிட என் தந்தை அனையப் பேராசிரியர் அவர்கள், இந்தத் திராவிட இயக்கத்தின் தூண்களில் ஒருவராக இருக்கக்கூடிய பேராசிரியர் அவர்கள், திராவிட இயக்கத்தின் சரித்திரத்தில் ஒரு முக்கியமான அங்கமாக இருக்கக்கூடியவர்கள், இந்தச் சமூக மாற்றத்தின் சிற்பிகளில் மிகச் சிறந்த ஒருவரான பேராசிரியர் அவர்கள் வந்திருப்பது என்பது சாலச் சிறந்தது. அவர்களது கையால் இந்தப் புத்தகத்தை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு எனக்கு வழங்கி இருக்கக்கூடிய இந்த இயல் இசை நாடக மன்றத்திற்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கவிஞர் கருணானந்தம் அவர்கள், அவர்களுடைய நினைவுகளைப் பதிவு செய்த புத்தகத்தை இன்று நாம் வெளியிட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தப் புத்தகத்தின் முதல் பதிவு 86-ஆம் ஆண்டு வந்திருக்கிறது. இந்தப் புத்தகத்தின் இரண்டாம் பதிப்பு இன்று வெளியிடப்படுகிறது. அவரது நினைவுகளை, அண்ணாவைப் பற்றி பகிர்ந்துகொண்டு இந்த நினைவுகளை இங்கு நாம் படிக்கும் சந்தர்ப்பத்தை எண்ணி இருக்கும் இந்தத் தருவாயில், அவர்களைப் பற்றிய எனது நினைவுகளை நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். எனது பள்ளிப் பருவத்தில், பெரும்பாலான எனது விடுமுறை நாட்களும், வார இறுதி நாட்களும் இங்கு இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்திருக்கும் ராணி அக்கா அவர்களோடு, அவர்களது குடும்பத்தாரோடு தான் கழிந்திருக்கிறது. அவர்கள் கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் ஒரு வீட்டில் இருந்தார்கள். எத்தனையோ நாட்களை நான் அவர்களோடு தான் கழித்திருக்கிறேன். ஒரு தாய்மாமனிடம் ஒரு பிள்ளை எந்த அளவுக்கு உரிமையோடு சண்டை போட்டு இதை வாங்கித் தா, அதை வாங்கித் தா என்று கேட்குமோ அந்த அளவுக்கு உரிமையோடு கருணானந்தம் மாமா அவர்களிடம் நான் தெருவில் போகும் இனிப்புகளையும், ஐஸ்கிரீம் இவற்றையெல்லாம் கேட்டு சண்டை போட்டிருக்கிறேன். அவரும் வாங்கிக் கொடுத்துவிட்டு வீட்டிற்கு கொண்டு வந்து அம்மாவிடம் பல நாட்கள் திட்டு வாங்கியிருக்கிறார். இப்படி உறவுகள், இரத்த உறவுகள் என்பதைக் கடந்து இந்த இயக்கமே ஒரு உறவாக, இந்த இயக்கத்தில் இருந்தவர்கள் உண்மையான உறவுகள் என்று வளர்ந்த, வளர்க்கப்பட்ட ஒரு இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். தலைவர்கள், தங்கள் தொண்டர்களை எத்தனையோ பேர்களைக் கண்டு விழித்திருக்கிறார்கள். தொண்டர்கள் தலைவர்களை எப்படி எல்லாமோ அழைத்திருக்கிறார்கள். பாராட்டியிருக்கிறார்கள்.

ஆனால் தன் தொண்டர்களை, தம்பி என்று அழைத்து ஒரு குடும்பப் பாசத்திற்குள் அடக்கி வைத்துக்கொண்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். இன்று தலைவர் கலைஞர் அவர்கள் பேசும்போது உடன்பிறப்பே என்று தொண்டர்களை அழைக்கும்போது அந்தக் கரவொலியும், அந்த மகிழ்ச்சிப் பெருக்கும் நம் காதுகளை எல்லாம் ரீங்காரிக்கச் செய்யும்போது அந்த உணர்வு தான் ஒவ்வொரு தொண்டனுக்கும் ஏற்படுத்தப்படுகிறது என்பதை நாம் மறுக்க முடியாது. தலைவர் கலைஞர் அவர்களின் கவிதை வரிகளில், எத்தனையோ பேர்களில் உன்னை அழைத்திருக்கலாம். அறிஞர் என்று அழைத்திருக்கலாம். நடிகன் என்று அழைத்திருக்கலாம். முதலமைச்சர் என்று அழைத்திருக்கலாம் என்று அடுக்கிக்கொண்டே வந்து இது அத்தனையும் வேண்டாமென்று இது அத்தனையும் அண்ணன் என்ற அந்த பெயரில் அடங்கிவிட்டது என்று அந்தக் கவிதை வரிகளில் உறவுகள் எப்படி இருந்தது இந்த இயக்கம் என்பது ஒரு குடும்பமாகத் தான் பாவிக்கப்பட்டது. அந்த உணர்வை ஏற்படுத்தியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள், அந்த உணர்வு என்பது எப்படி தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது என்பதை நாம் காண முடியும். இங்கு பேசும்போது சொன்னார்கள். ராணி அக்கா அவர்களின் கணவர் இங்கு வந்திருக்கிறார்கள். இன்றைக்குத் தலைவர் கலைஞர்கிட்ட உதவியாளராக, செயலாளராக இருக்கக்கூடியவர் அவர் தான் திரு.இராஜரத்தினம் அவர்கள். அந்த உறவு அது. வழிவழியாக இந்த இயக்கத்தில் இருக்கும் தொடர்பு இன்றும் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களைத் தன் நம்பிக்கைக்கு உரியவர்களாகத் தன் அருகில்

2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா

இருக்கக்கூடியவர்களாகப் பாவிக்கக்கூடிய அந்த உறவு என்பது வழிவழியான அந்தத் தொடர்பு அது திராவிட முன்னேற்றக் கழகத்தில் மட்டுமே நாம் காணக்கூடிய ஒரு உறவு. அந்தக் குடும்பப் பாசம், அந்த அன்பு என்பது எல்லாவற்றையும் தாண்டிய ஒன்றாக அது உருவாக்கித் தந்தார் பேறிஞர் அண்ணா அவர்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. இந்தப் புத்தகத்தைப் படிக்கும்போது நமக்கே பேறிஞர் அண்ணா எப்படியெல்லாம் எளிமையான மனிதராக, எவ்வளவு எளிதில் அணுகிவிடக்கூடிய ஒரு மனிதராக அவர் மேடை ஏறும்போது ஒரு ஆர்ப்பரிக்கக்கூடியப் பேச்சாளராக இருந்திருக்கிறார். ஒரு தலைமுறையைச் சேர்ந்த இளைஞர்களை எல்லாம் தன் பக்கம் திருப்பிக்கொள்ளக்கூடிய ஒருவராக, ஒரு ஆக்ரோஷமிக்க ஒரு தலைவராக இருந்திருக்கிறார். ஆனால், அப்படிப்பட்ட ஒரு தலைவர் எப்படி மிக எளிமையான, மிக இயல்பான மனிதராக இருந்திருக்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ளும்போது ஒரு உண்மையான தலைவரின் முகம் அது தான். ஒரு உண்மையான தலைவரின் இதயம் அதுவாகத் தான் இருக்க முடியும் என்பதை நாம் உணர்ந்துகொள்ளலாம்.

ஒரு புத்தகத்தில் நான் படித்தபோது, திரு வேழவேந்தன் அவர்களின் திருமணத்திற்கு திரு அண்ணா அவர்கள் செல்ல வேண்டும். நேரமாகிக்கொண்டே இருந்தது. அவர்கள் எப்போதும் நேரம் கடந்து தான் பல நிகழ்ச்சிகளுக்கு வருபவர் என்பது பலரும் தெரிந்துவைத்திருந்த ஒரு விஷயம். அதனாலே முதல்ல கொஞ்ச நேரம் யாரும் இதை பெரிசாக அலட்டிக்கொள்ளவில்லை. நேரமாகிக்கொண்டே இருந்தபோது இன்னும் வரவில்லையே என்ற ஒரு பரபரப்பு அங்கு அப்பிக்கொண்டது. அப்போது ஒரு லாரி அந்தத் திருமண வீட்டின் வாசலில் வந்து நிற்கிறது. அந்த லாரி கதவைத் திறந்துகொண்டு அண்ணா அவர்கள் இறங்குகிறார்கள். எல்லாருக்கும் என்ன நடந்தது என்றே புரியவில்லை. சென்னை நகரத்திலிருந்து வண்டியிலே வந்து சேரவேண்டிய, காரிலே வந்து சேர வேண்டிய அண்ணா அவர்கள் லாரியிலே வந்திருக்கும்போது என்னவென்றே புரியவில்லை. அவர்கள் அதைப் பற்றியும் கவலைப்படாமல் சொல்லுகிறார். வண்டி வழியிலே வந்து ரிப்பேர் ஆயிடுச்சுய்யா. அதனாலே வழியிலே வந்த லாரியிலே ஏறிகிட்டு நான் வந்தேன். இதை இன்று நாம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாத ஒரு நிகழ்வாக ஒரு உயர்வாக இது இருக்கிறது என்றால் அந்த மனிதரின் எளிமை என்னவென்று நாம் புரிந்துகொள்ள முடியும்.

அந்த எளிய மனது ஒரு தொண்டனின் வீட்டு திருமணத்துக்கு போகவேண்டும். அதற்காகத் தான் பட வேண்டிய எந்தச் சிரமமாக இருந்தாலும் அதைப் பற்றி கவலைப்படவில்லை என்ற மனது நம்மை வியக்க வைக்கிறது.

ஒருமுறை அவர்கள் காஞ்சிபுரத்திற்கு அருகில் ஒரு பள்ளிக்கூட நிகழ்ச்சிக்காக போய்க்கொண்டிருக்கிறார். கூட வரவர் அண்ணா அவர்கள் முதல்வராக ஆகிவிட்டார். அதனாலே போறப்ப சொல்றாங்க, இந்த வழியிலே வந்து சில வறட்டுத் தலைவர்கள் நிற்பார்கள். கையிலே வந்து ஒரு அரை முழம் சாமந்திப் பூவை வச்சிக்கிட்டு, அதை விட நீட்டா கையிலே மனுவை வச்சிக்கிட்டு அவங்க காத்துகிட்டு இருப்பாங்க. அங்க எல்லாம் வண்டியை நிறுத்தாதே. நேரா பள்ளிக்கூடத்திற்கு போ. ஏன்னா நேரமாயிடுச்சு என்று. அப்ப அண்ணா சொல்கிறார் வாகன ஓட்டியிடம். அவர்கள் தான் அந்த வறட்டுத் தலைவர்கள் தான் ஏகாதிபத்தியத்தைக் கையில் வைத்துக்கொண்டு இருந்தவர்களாக அந்த மனப்போக்குக் கொண்டவர்களாக இருந்த காங்கிரஸ்காரர்களைத் தூக்கி எறிந்துவிட்டு இன்று சாமானியர்களான நம்மளைக் கொண்டு வந்து இந்த இடத்தில் வைத்திருக்கிறார்கள். அவர்களை நாம் உதாசீனம் செய்தால் அவர்களுக்காக நாம் வண்டியை நிறுத்தாவிட்டால் இன்று எந்தப் பதவியை வைத்துக்கொண்டு அந்த நிகழ்ச்சிக்கு போக வேண்டுமோ, பறந்துகொண்டிருக்கிறோமோ அந்தப் பதவியிலிருந்து தூக்கி எறிவார்கள். அதனால் முதலில் அவருக்கு மரியாதை கொடுங்கள் என்று ஆணித்தரமாக கூறக்கூடிய ஒரு தலைவராக இருந்தவர்கள் அவர்கள்.

ஒரு முறை அண்ணா அவர்களிடம் இன்றைக்கும் நாம் வியக்கக்கூடிய ஒரு விஷயம் ஒன்று. அடுத்தத் தலைமுறைத் தலைவர்களை அவர் எப்படி வளர்த்தெடுத்தார். அவர்களிடம் இருந்த திறமைகளை அவர் எப்படி பாதுகாத்து, அந்தச் சிறப்புகளை வெளிக்கொணர்ந்து வந்தார் என்பது ஒரு தலைவருக்கு இருக்க வேண்டிய மிகச் சிறந்த ஒரு குணமாகக் கருத வேண்டும். ஏனென்றால் நம்முடைய கருத்துக்கள், நம்முடைய கொள்கைகள் என்பது நம்மோடு நின்று போகக்கூடிய ஒன்றாக மாறிவிடக் கூடாது. நம்மைத் தாண்டி அடுத்தத் தலைமுறைக்கு அந்தக் கருத்துக்களை, அந்தத் தீப்பந்தங்களை, நம்ம மனத்திலே உதிக்கின்ற அந்தக் கருத்துத் தீப்பந்தங்களைத் தூக்கிக்கொண்டு ஓட அடுத்தத் தலைமுறையின் அவசியம் என்ன என்பதை அறிந்து வைத்திருக்கக்கூடிய ஒரு தலைவராக அவர்கள் இருந்தார். அதனாலே தனக்குப் பின்னால் இருந்த தோழர்கள், தனக்கடுத்த நிலையில் இருந்த தோழர்கள், அவர்களது பேச்சுக்களை ரசிக்கக்கூடியவர்களாக, அவர்கள் வாங்கக்கூடிய கைத்தட்டல்களை மிகவும் அகமகிழ்ந்து கேட்கக்கூடியவராக அவர்கள் இருந்திருக்கிறார். ஒரு முறை ஒரு இடைத்தேர்தலை முடித்துவிட்டு கும்பகோணம் அருகில் ஒருபொதுக் கூட்டம் நடக்கப் போகிறது. தலைவர் கலைஞர் அவர்கள் அந்தப் பொதுக்கூட்டத்திற்கு போய்க்கொண்டிருக்கிறார். ஒரு பாராட்டுவிழாக் கூட்டம் அது. அப்ப எல்லாம் செல்போன் எல்லாம் கிடையாது. உடனுக்குடன் செய்திகளை பரிமாறிக்கொள்ள முடியாது. அண்ணா அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது அந்தத் தேர்தல்ல நாம வெற்றி பெற்றுவிட்டோம் என்று. அப்ப அந்தப் பொதுக்கூட்டத்திற்குத் தலைவர் கலைஞர் அவர்கள் வண்டியில் சென்று கொண்டிருக்கிறார்கள்.

கும்பகோணத்துக்கு அருகில் ஒருதெருவைத் தாண்டி போய்க் கொண்டிருக்கும்போது ஒருவர் நடந்து போய்க் கொண்டிருக்கிறார்; இரண்டு மூன்று பேர்கூட. வண்டியை நிறுத்திவிட்டு என்னண்ணே நீங்க இங்க போய்க் கொண்டிருக்கிறீர்கள். இல்லை இல்லை பரிமளத்துக்கு பெண் பார்க்க வந்தேன். நீ இங்க எங்கய்யா வந்தே என்று கேட்ருக்காங்க. இல்லை இல்லை பொதுக்கூட்டம் இருக்கு. சரி சரி. நாங்கள் பொண்ணு பார்க்கப் போறோம். நீ கூட வந்துட்டு அதுக்கப்புறம் பொதுக்கூட்டத்திற்கு போ என்று. அந்த உறவு, தனது வீட்டில் நடக்கும் ஒருநிகழ்ச்சிக்குத் தன் தொண்டனை எவ்வளவு எளிதாக அழைத்துக்கொண்டு போகக் கூடிய அந்த

மனது, இருந்து அழைத்துக்கிட்டுப் போய் பொண்ணு பார்த்துமுடித்துவிட்டு, எல்லாம் ஆன பிறகு தலைவர் கலைஞர் அவர்கள் கிளம்புகிறார்கள். எங்கப்போற அப்படின்னவுடனே பொதுக்கூட்டத்திற்கு சொன்னனே அண்ணே. அப்படின்னா நானும்கூட வரன்யா. தலைவர் அவர்கள் அதிர்ந்துவிட்டார்கள். நீங்க எப்படி வர முடியும் அப்படின்னு. ஏன்னா, இல்ல போஸ்டர் அடிக்கல. ஒன்னும் பண்ணல. உங்க பேரெல்லாம் போடலியேன்ன. அதனாலே என்னய்யா பரவால. உன் பொதுக்கூட்டம் தானே. நான் வந்தால் என்ன? எனக்கு ஆசையாக இருக்கிறது நானும் வருகிறேன் என்று சொல்லக்கூடிய அந்த மனது. ஆனால் பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் வந்து தன் தம்பி பாராட்டப்படுவதை, அந்த இடைத்தேர்தல் வெற்றிக்கு தன் தம்பி பாராட்டப்படுவதை அங்கே அமர்ந்து ரசித்து கேட்கக்கூடிய ஒரு மனது இருந்த தலைவர் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள். பலமுறை அவர்கள் இந்தப் பயணங்கள் என்பது மிக சுவாரஸ்யமான ஒன்றாக இருக்கும் என்று சொல்வார்கள். அப்படி வண்டியிலே போய்கிட்டு இருக்கிறப்ப அண்ணே இந்த மாதிரி கேட்டிருக்காங்க. இலக்கியங்களைப் பற்றி பேச்சு வரும்போது அகம் என்றால் என்ன? புறம் என்றால் என்ன? அப்படின்னு. புறம் என்றால் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளக்கூடியது. அகம் என்றால் பகிர்ந்துகொள்ள முடியாதது என்று மிக எளிமையான அகம், புறம் என்ற அந்த மிக ஆழமான விரிந்த ஒன்றை மிக எளிமையான வார்த்தைகளில் அவர் விளக்கியிருக்கிறார்.

இப்படி அவர்களோடு இருக்கக்கூடிய அந்தக் காலக்கட்டம் என்பது அவர்களோடு இருந்த அத்தனைத் தொண்டர்களுக்கும் அது ஒரு பெரிய கொண்டாட்டமாக இருந்திருக்கிறது என்பதை இந்தப் புத்தகத்தை நாம் படிக்கும்போது தெரிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது. ஒரு மாநாட்டுக்கு கருணாநந்தம் மாமா அவர்கள் போகிறார்கள். அங்கே போய்ப் பார்க்கும்போது அண்ணா நினைக்கிறாங்க. பெரிய அந்த வாயில் எப்படி அலங்கரிக்கப்பட வேண்டும் என்பதை அவர் ஒரு கேன்வாஸ் ஷீட்டைக் கொண்டு வந்து பனை மரங்களை நட்டு, அந்த கேன்வாஸ் ஷீட்களை வந்து பல வண்ணங்களைத் தெளித்து உருவாக்க வேண்டும் அப்படின்னு விரும்புறாங்க. ஆனால் அதை எப்படி பண்றது என்று தெரியல. அண்ணா அவர்களே பிரஷ்ஷை கையிலே எடுத்து வந்து வண்ணங்களைத் தெளித்து இப்படி பண்ணனும். அப்படின்னு சொல்லிக் கொடுக்கிறாங்க. அதற்கப்புறம் வந்து ஒரு மாசம் கஷ்டப்பட்டு கருணாநந்தம் மாமா அவர்கள் அதைச்செய்து முடிக்கிறார். முடிச்ச பிறகு ரொம்ப நாளைக்கு வந்து கலைஞர் வீட்ல இருந்து ஓய்வு எடுக்கிற அளவுக்கு எனக்கு கைவலி ஏற்பட்டது. அதை இந்தப் புத்தகத்தில் பதிவு செய்கிறார். எவ்வளவு ஈடுபாடு. ஒரு மாநாடு நடத்துவது என்றால், அந்த மாநாட்டுக்குத் தாங்களே இறங்கி நின்று பெயின்ட் அடிக்கிறதிலிருந்து கம்பம் நடுவதிலிருந்து, கொடி கட்டுவதிலிருந்து கட்சித் தொண்டர்களே, அடுத்த நிலை தலைவர்களே அங்கே முன் நின்று அதை செய்யக்கூடிய அந்த உணர்வு, அந்த ஈடுபாடு, இப்படிப்பட்ட விஷயத்தை இந்தப் புத்தகம் நிறைய நாம் படிக்க முடிகிறது.

அவர்களுக்குள்ள இருந்த அந்த நெகிழ்ச்சியான உறவு இந்தப் புத்தகத்தின் முதல் பக்கத்திலேயே அண்ணா அவர்கள் கேட்கிறார், கவிஞரைப்பார்த்து ஏய்யா நீயும் இந்த ஆஸ்பத்திரியிலே இன்னொரு பெட்ல நான் வந்து புக் பண்ணட்டுமா? நீ எங்கே நடக்கிறது என்றால் தலைவர் கலைஞர் அவர்கள் வண்டியிலே போகும்போது ஒரு பெரிய விபத்து ஏற்படுகிறது. தலைவர் கலைஞர் அவர்களின் முகத்தில் எல்லாம் கண்ணாடித் துகள்கள் குத்திக்கொண்டு ஒரு ஆபத்தான நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். கூட வந்த வாகன ஓட்டி அடிப்பட்டிருக்கிறார். இப்படி நிறைய பேர்வந்து அடிப்பட்டிருக்கிறார்கள். ஆனால் கவிஞர் அவர்களுக்கு காலில் சிறு சிராய்ப்பு. ஆனால் அந்த வலியைக் கூட அவர் பொறுத்துக் கொள்வாரா மாட்டாரா என்று தெரிந்துகொள்வதற்காக. இல்லன்னா அதுக்கு வைத்தியம் பார்க்காமல் விட்டுவிடுவாரோ என்ற கவலையோடு, கரிசனத்தோடு, அக்கறையோடு அண்ணா அவர்கள் நீயும் வந்து இந்த ஆஸ்பத்திரியில் சேர்ந்து சிகிச்சை பண்ணிக்கோயா அப்படிங்கிற அக்கறையோடு தொடங்குவதுதான் இந்தப் புத்தகம். இப்படி மனதை நெகிழவைக்கக்கூடிய எத்தனையோ பதிவுகளைத் தாங்கியது தான் இந்தப் புத்தகம். ஏன்னா ஒரு சமூகத்தையே மாற்றிடக்கூடிய ஒரு தலைவர், இந்தச் சமூகத்திலே மனிதர்களாகக் கூட பாவிக்கப்படாத இவர்களுக்காகக் குரல் கொடுத்தத் தலைவர்கள், மூட நம்பிக்கையை எதிர்த்து குரல் கொடுத்தத் தலைவர்கள், இந்தச் சமூகத்தின் அநீதிகளை எதிர்த்து குரல் கொடுத்தத் தலைவர்கள், அந்த ஆக்ரோஷமான போராட்டங்களை எல்லாம் எதிர்கொண்டார்கள். அவர்களின் இன்னொரு பக்கத்தை அந்த இளகிய மனதை, அந்த இளகிய மனது இருக்கும்போதுதான் தன்னைச் சுற்றியிருப்பவர்களைப் பற்றி கரிசனப்படக்கூடிய அந்த மனசு, தன்னைச் சுற்றி இருப்பவர்களுக்காக அக்கறைப்படக்கூடிய அந்த மனசு, அவர்களுக்காக இளகக்கூடிய அந்த மனசு இருக்கும்போதுதான் அவர்கள் இந்தச் சமூகத்தைப் பற்றி அக்கறைப்பட முடியும். கவலைப்படமுடியும். ஏனென்றால், ஆறடுக்கு மாளிகையில், பெரிய சுவர்களை, அரண்களை கட்டிக்கொண்டு, அந்த பளபளப்பான பங்களாக்களில், சொகுசு கார்களில் இல்லையென்றால், நீலகிரி, ஊட்டி, குன்னூர் போன்ற இடங்களில், தூர தேசங்களில் 3 மாதம் போய் அஞ்ஞாத வாசம் செய்து கொண்டிருக்கக்கூடிய தலைவர்களுக்கு அந்த மனது வாய்க்காது. மக்களைப் பற்றி புரிந்துகொள்ளக்கூடிய சந்தர்ப்பமும், சாத்தியமும் இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மக்களோடு இருப்பவர்கள், மக்களைப் புரிந்துகொள்ளக்கூடியவர்கள், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டவர்கள்தான் இந்த நாட்டை ஆளமுடியும். அவர்கள் மட்டும் தான் நமது தலைவர்களாக, இந்தச் சமூகத்தை மாற்றம் செய்யக்கூடிய தலைவர்களாக, வரமுடியும் என்பதை தெரிவித்துக்கொண்டு வாய்ப்பிற்கு நன்றி. வணக்கம்.

# கலைகளை ரசிப்போம்

## இறையன்பு

இலக்கியம் நம்மை இயங்கிடச்செய்யும்;
கலங்கிடும் பொழுது துலங்கிடத் தூண்டும்.
கலைகள் நம்மை சிறந்திடச் செய்யும்;
மலைகள் தம்மை உருகிடச் செய்யும்;
ஓவியம் உயிரில் ஊக்கம் அளிக்கும்;
காவிய வரிகள் கற்பனை குவிக்கும்.

சிற்பம் கற்கின் சிந்தனை செழிக்கும்.
அல்லவை அகற்ற நல்லவை பிறக்கும்.
ஓவியம் பயில கவனம் குவியும்.
இனியவை இணைய புதியவை பிறக்கும்.
வண்ணம் எண்ணம் இரண்டும் சேர,
சுண்ணம் உயிரைப் பூசிக்கொள்ளும்.
நடனந் தன்னில் உடலைக் கரைக்க,
கடவுட் தன்மை உணரக்கிடக்கும்.
இசையில் இதயம் நனையும் நேரம்,
அசையும் தென்றல் அதுவாய் மாறும்.
உலகம் தன்னில் கலைகள் இன்றின்
கலகம் ஒன்றே நிரந்தரமாகும்.
விருப்பமின்றி கலைகளை அழித்தால்
கருப்புவெள்ளை உலகம் அடைவோம்.

இலக்கியத்திலே இயற்கையுண்டு;
மயக்க வைக்கும் நயங்களுண்டு;
மலைக்கச் செய்யும் அழகியலுண்டு;
மணக்கச் செய்யும் உவமையுமுண்டு;
தவறை இழைத்த தரணியாள்வோர்,
அவரைக் காயாய் அறுந்து வீழ்வார்.
வாய்மை போற்றி வாழ்ந்த மனிதர்,
தூய்மைத் தூணாய் நாளும் வாழ்வார்.
அறங்கள் காப்போர் அழிவதுமில்லை,
மறங்கள் வாய்த்தோர் மடிவதுமில்லை,
சிரங்கள் தாழ்ந்தோர் நிலைப்பதுமில்லை,
இரந்து வாழ்வோர் இறந்து வாழ்வோர்.
நெறிகளைக் கற்க இலக்கியம் உதவும்.
அறிகிற பொழுதே அவயங்கள் புலரும்.

சொற்திறன் கற்க இலக்கியம் உண்டு;
சொற்பங்கள் குறைய கவிதைகள் உண்டு;
கற்பனை விரிய புனைவியல் உண்டு;
கற்பினை அறிய மரபியல் உண்டு;
நீதியை உணர்த்திடும் காவியம் உண்டு.
சாதியை உதிர்த்திட நாவல்கள் உண்டு.
வெகுநாள் வளரும் அபவாதம்,
அகலச் செய்யும் ரசவாதம்,
இலக்கியத்தாலே இயலும்.
பாத்திரம் மெருகேற்றும் பண்டத்தின் ருசியை;
காத்திருப்பது அதிகரிக்கும் உண்பவர் பசியை.
தேநீர் ருசிக்கும் கண்ணாடிக் குவளையில்;
தேனோ இனிக்கும் கையில் ருசிக்கையில்;
ரசமும் சுவைக்கும் வாழை இலைதனில்;
வசமாய் இலக்கியம் வாசித்து மகிழ்ந்திட,
வாசிக்கும் மனமே பாத்திரம் ஆகும்.
தாகம் இருந்து படிக்கிறபோது,
வேகம் படிப்பில் விரைந்து சேரும்.
பக்கம் பத்தியாய் தவழத் தொடங்கும்;
அக்கம் பக்கம் கவனம் குறையும்;
புத்தகம் உலகாய் மாறிடத் தொடங்கும்;
சத்தங்கள் செவிக்குள் சங்கீதமாகும்.





நாடகம் என்பது நயமிகு ஊடகம்
மேடையில் மலரும் மேன்மைக் காவியம்
திரைத்துறைக்கதுவே என்றும் தாயகம்
வரைமுறை வடித்த பண்புச் சேயகம்
துன்பியல் நாடகம் படிப்பினைத் தந்திடும்
இன்பியல் கண்டு நகைச்சுவை வந்திடும்
மயிரிழைத் தவறால் உயிரினை இழந்தவர்
கதையினை நாடகம் கழன்றிடச் செய்யும்
நாடகம் காந்தியை மகாத்மாவாய் மாற்றும்
ஊடுருவி உள்ளே மென்மையை விதைக்கும்.

உளியில் உயிரை உருக்கித் தேய்த்து,
வலிகள் தம்மை வழித்து எறிந்து,
சிலைகள் செய்த சிற்பிகளாலே,
கலைகள் நிறைந்த தொன்மைகள் பெற்றோம்.
பெயரைப் பொறித்து பெருமை தேடாத,
துயரைத் தாங்கி தூண்களை வடித்தார்.
சிற்பம் என்பது கல்லில் கவிதை;
கற்கள் மேடையில் உளியின் நடனம்;
இதிகாசக் காட்சிகள் கருப்பொருள் ஆயின;
சதிகாரர் படையால் பலவற்றை இழந்தோம்.
இருப்பவை இத்துணை என்றால் முன்பு,
இருந்தவை எத்துணை என்பதை எண்ணிட,
பெருமிதம் ஒருபுறம் வருத்தம் மறுபுறம்,
திறமைகள் பற்றிய திண்மையும் நிறைவுறும்.

தன்னை உணர விண்ணை நோக்கித்
தாமரைப் பாதங்கள் தாவிடச் செய்யும்,
நடனமாடும் கலைஞர் மறைந்து
நடனமாகும் விசித்திரம் விளையும்,
அபிநயம் காண்போம் நந்நயம் கொண்ட
கலைநயம் காண்போம்; நம்மை மறப்போம்.
புருவங்கள் அசைகையில் புவியே அசையும்
கருவங்கள் அகன்றிட புவியீர்ப்பு மறையும்.
காற்றில் ஆடும் ஜாலங்கள் நடக்கும்,
காலம் போற்றும் கோலங்கள் தெறிக்கும்.
பேரண்ட நடனம் மேடையில் நிகழும்.
பேரன்பு கொண்டவர் இதயங்கள் நிரம்பும்.
நாட்டுப் புறத்திலும் நாட்டிட இயலும்.
செவ்வியல் நடனமும் சிகரம் தொடலாம்.
பொய்க்கால் குதிரைக்கு மெய்க்கால் முளைக்கும்.
காவடிக் கலைஞரும் திருமுடிக் காண்பார்.
கரகம் சுழல விழிகள் சுழலும்.
திரளும் கூட்டம் திகட்டாமல் மகிழும்.



கட்டடக்கலையில் புதுமைகள் செய்தார்,
பட்டடக்கல்லில் புரந்திட்ட ஆலயம்,
கையாலாகாதார் வழிபடும் தலங்களை,
உடைத்துச் சிதைத்தே மகிழ்ச்சியடைந்தார்.
ஒவ்வொரு கோயிலும் ஒவ்வொரு விதமாய்
செவ்விய கலைகளின் அருங்காட்சி ஆயிரம்.
ஆத்திகருக்குக் கருவறை போதும்;
நாத்திகர் மகிழ்ந்திட பிரகாரம் முழுதும்.
அர்ப்பணிப்பதனை ஆலயம் உணர்த்திடும்.
நிற்பது உழைப்பொன்றே என விளித்திடும்.

2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா

மொட்டுகள் மலரக் கட்டுரை உதவும்.
சிட்டுகள் போல் சிறகுகள் விரியும்.
சுதந்திர உணர்வை ஊட்டிய கட்டுரை,
தந்திர ஆட்சியை ஓட்டிய கட்டுரை,
அடிமைத்தனத்தை அகற்றிய எழுத்து,
குடியுரிமை கிடைத்திட மெதுவாய் எழுந்து,
இனத்தை உயர்த்திப்பிடித்திட்ட பொழுது,
மனமே கைதட்டல் அளித்தது அழுது!

இருப்பவை உரைப்பவை ஓவியமல்ல;
புகைப்படம் போதும் தூரிகை எதற்கு?
வரைபடம் போன்ற ஓவியம் மாறி
மனப்படம் கொண்ட சித்திரம் வந்தது;
பார்க்கும் மனத்தின் ஆழம் அறிந்து,
சேர்க்கும் கருத்துகள் பலவிதம் தெளிந்து,
காட்சிகள் நம்மை ஆட்சிகள் செய்யும்,
பூடகமாக நாடகம் நெய்யும்.
மெல்லிய இதயம் துல்லியம் உணர்ந்து,
மென்மை அடைய மேதினி சிறக்கும்.
மூளையில் உதிப்பது சுவரொட்டி போல;
அத்தகு சித்திரம் பத்திரப்படுத்தும்
நிலமனைக் கிரயப் பத்திரம் போல.
ஓவியம் என்பது ஒப்பனையல்ல;
ஒப்புக்குச் செய்யும் வித்தையுமல்ல;
தவம்போல் நிகழ்த்தும் வேள்வியாகும்.
தவறிட நிகழ்ந்தால் தோல்வியாகும்.

கலைகளைப் பட்டியல் இடுவது கடினம்-
வாசற்கோலமும் ஓவியமாகும்-
மார்கழிப் பிள்ளையார் சிற்பமுமாகும்;
பூவைத் தொடுப்பதும் கலையாய் மாறும்.
கருத்துள்ள கடிதமும் இலக்கியமாகும்.
ருசியாய் சமைப்பதும் கலையேயாகும்.
அலங்காரத்திலும் அதுஅரங்கமேறும்.

அறிவியல் கொண்டு கலைகளை வளர்ப்போம்!
செறிவுடன் வாழ்வை நுகர்ந்திடக் கற்போம்!
அன்பையும் பண்பையும் சரிவரக் கலந்து!
படைத்திடுவோம் நல்லிலக்கிய விருந்து!



# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

## புதிய பரிமாணம் - ஏ.எஸ்.பன்னீர்செல்வன்

**Culture is a Basic Need.**
- Prince Claus Foundation.

சர்வதேச அளவில் கலை பண்பாட்டுத்துறையில் மிகவும் சிறப்பாகவும், புதிய பாதைகளை வகுப்பதில் முதலிடத்தை வகிப்பதாகவும் இருக்கும் அமைப்பு நெதர்லாந்து நாட்டின் பிரின்ஸ் க்ளாஸ் பௌண்டேஷன். மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள், கல்வி, சுகாதாரம், வாழ்விடம், உணவு போலவே எல்லா மக்களுக்கும் கலாச்சாரம் ஒரு அன்றாடத் தேவை என்பதைத் தீர்க்கமான ஆய்வுகள் மூலம் நிலை நாட்டிய இந்த அமைப்பு, சிறப்பாகச் செயல்படும் கலை பண்பாட்டுக்களமே மக்களின் முழுமையான வாழ்க்கைக்கு ஒரு அளவுகோல் என்று வாதிட்டு வருகிறது.

பிரின்ஸ் க்ளாஸ் பௌண்டேஷனின் கருத்துகள் செயல்வடிவம் பெரும் இடமாக நம்முடைய தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் கடந்த மூன்று வருடங்களில் புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது. கலை மற்றும் இலக்கிய வடிவங்களுக்கு மக்கள் மீது எவ்வளவு அக்கறை இருந்தாலும், கலாச்சாரச் சூழலில் இவை ஏதோ ஒரு வகையில் மேட்டுக்குடி மக்களின் ஆதிக்கத்திற்குள் சிக்கிக்கொண்டு பொதுமக்களின் தினசரி வாழ்க்கையின் ஒரு அங்கமாக இருக்க முடியாமல் அந்நியப்படும் யதார்த்தம் உலக முழுவதிலும் உண்டு. அதிலும், சோவியத் யூனியன் சிதறிய பிறகு ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள், அரசியல் மாற்றங்கள் கலை மற்றும் பண்பாட்டு விழுமியங்கள் ஒரு சந்தைப்பொருளாகச் சுருக்கும் முயற்சிக்கு வலுசேர்ப்பதாக அமைந்துவிட்டன. இசை, நாடகம், எழுத்து, கவிதை, ஓவியம், சிற்பம், நடனம் என அனைத்து படைப்புகளும் பொருளாதார லாபம் தரக்கூடிய ஒரு நிலையில் இருந்தால்தான் அங்கீகாரம் என்கிற ஒரு அவலச் சூழல் உருவானபோது, இவற்றை சந்தைப் பொருளாதாரத்தின் கொடூரப் பிடியிலிருந்து மீட்டு பொதுத் தளத்தில் முழுமையான வீர்யத்துடன் இசை, இயல், நாடகம் செயல்படக்கூடிய வாய்ப்பு தமிழகத்தில் ஏற்படக் காரணம், 2006- முதல் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் செயல்படும் விதம்தான்.

2006க்குப்பின், 2006க்குமுன் என்று தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் செயல்பாடுகளை நாம் இயல்பாக பிரித்துப் பார்த்து, இந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள முக்கிய மாற்றங்களைப் பதிவு செய்வது ஒரு வரலாற்றுக் கடமை.

கவிஞர் கனிமொழி ஒரு முறை குறிப்பிட்டதுபோல் 2006க்கு முன் இந்த மன்றம் ஒரு சீக்ரட் சொசைட்டிப்போல்தான் செயல்பட்டு வந்தது. கலைமாமணி விருது வழங்குவது தவிர முக்கியமாக இது பெரிய சாதனைகளை எம்.ஜி.ஆர்.முதல் அமைச்சரான காலம் தொட்டு நிகழ்த்தாமல் இருந்தது என்பது ஒரு உண்மை. நடுவில் வந்த கலைஞர் ஆட்சியில் இந்த நிலையை மாற்றி புதிய பாதைக்கு வழி வகுத்துச் செயல்பட முயற்சிகள் நடைபெற்றன. ஆனால் ஆட்சி மாற்றம் இந்த மன்றத்தின் செயல்பாடுகளை மீண்டும் சுருங்கச் செய்ய, இந்தச் சூழலும் நிலை கடந்த 25 வருடங்கள் தொடர்ந்தது. ஆனால், 2006ல் கலைஞர் மீண்டும் பதவி ஏற்றவுடன் இராம.நாராயணன் அவர்களையும், கவிஞர் இளையபாரதி அவர்களையும் இந்த மன்றத்திற்கு பொறுப்பாக அமர்த்தி, மாற்றங்களை மிகவும் வேகமாகக் கொண்டுவரும் முயற்சிக்கு வழி வகுத்தார்.

"கலை பண்பாட்டுத் துறை தனியாரிடம் சென்றால் வணிக உலகத்தின் ஒரு அங்கமாகச் சுருங்கிவிடும்; அரசு வசம் இருந்தால் ஆளும் கட்சியின் பிரச்சாரக் கருவியாக மாறிவிடும்." என்பது ஒரு பொதுவான கருத்து. கடந்த காலச் செயல்பாடுகள் இந்தக் கருத்துக்கு வலுசேர்ப்பதாகத்தான் இருந்தன. ஆனால்,



2006க்குப் பிறகு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் செயல்படும் முறை இந்தக் கருத்தை நிராகரிக்க பெரிய அளவில் உதவி இருக்கிறது. கலை இலக்கிய கலாச்சாரக் களம் என்பது "Nation of Commons and Public Sphare" என்கிற தத்துவார்த்தத் தளத்தில் இயங்க தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வழிவகுத்தது.

சுமார் 10,000 கலைஞர்கள் தங்கள் படைப்புலகத்தின் ஒரு வெளியீட்டுக் கருவியாக இந்த அரசு அமைப்பை ஆவலுடன் எதிர்நோக்கும் புதிய வாய்ப்பை இந்த மூன்று ஆண்டுகளில் உருவாக்கித் தந்துள்ள நிகழ்வு பெரும் பாராட்டுதலுக்குரிய விஷயமாகும்.

இயல் இசை நாடக வளர்ச்சிக்கு இந்த மன்றம் சமீபத்தில் மேற்கொண்ட முயற்சிகளை ஐந்து வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, பாரம்பரியம் மற்றும் நவீனக் கலை வடிவங்களுக்கு பெருந்திரளான மக்கள் முன்பு நிகழ்த்தப்பட களம் அமைத்துக்கொடுப்பது. இதில் முற்போக்கு ரீதியான கருத்துக்களை - படைப்பாளியின் அரசியல் சார்புகளை மீறி - தமிழ் மொழியின் வளமைக்கு அந்தப் படைப்பு துணையாகயிருக்கிறதா என்கிற ஒரே ஒரு அடிப்படையில் பலருக்கு மேடை வாய்ப்புகளை ஏற்படுத்துகிற புதிய தடத்தைக் காட்டியுள்ளது தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம். இன்குலாப் நாடக விழா, மு.ராமசாமியின் தோழர் பெரியார் ஆகிய நாடகங்களை அரசு எந்திரத்தின் ஒரு பகுதியான தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நடத்திய விதம், அரசு அமைப்பு என்றால் ஆளும் கட்சிக்குப் பிரச்சாரம் என்கிற பொதுவான குற்றச்சாட்டை அர்த்தமற்றதாக மாற்றிவிட்டது.



இரண்டு, "முன்னம் பழமைக்கும், பின்னைப் புதுமைக்கும்" என்கிற தமிழ் வாதத்திற்கு ஏற்ப கருத்தரங்கங்கள் நிகழ்த்தி, நம்முடைய வரலாறு என்ன, நம்முடைய படைப்புகள் ஒவ்வொரு காலத்திலும் எப்படி இருந்தன, இதன் வளர்ச்சி என்ன, எவ்வாறு மாற்றங்கள் நிகழ்ந்தன என்பதை இளம் தலைமுறையினர் சுலபமாக அறிந்துகொள்ள வழி வகுத்தது.

மூன்று, தரமான புத்தகங்களை மீள் பதிப்பு செய்வதின் மூலம் -வாசிப்பு என்பது பற்றிய பிரக்ஞையை அனைவரும் பெற - நூல்கள் பற்றி பூரண அறிமுகம் கொள்ள, இந்த மன்றம் பல முயற்சிகளை எடுத்து வருகிறது. உதாரணமாக, பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவாக இந்த மன்றத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்வுகளில் கவிஞர் கருணானந்தம் எழுதிய அற்புதமான நூல் வெளியீடு, முக்கிய எழுத்தாளர்கள் பலர் மறுவாசிப்பில் அண்ணாவின் படைப்பு எப்படி புதிய அர்த்தங்களைத் தருகிறது என்பதை விவரித்த விதம்; நாடகத்துடன் குறும்படங்கள், இதன்ஊடே வில்லிசை என்கிற பாரம்பரிய தமிழ்க் கலை என்ற கலையின் பரந்த வெளியை ஒரு இடத்தில் அனைவரும் புரிந்துகொள்ளும் விதத்தில் செயல்படுத்தியதைக் கூறலாம்.

நான்கு, சங்கமம் கலாச்சார நிகழ்வுகள் உடன் இணைந்து நடைபெறும் தமிழ் சங்கமம் நிகழ்வுகள். 1927 முதல் சென்னையில் மார்கழி மாதத்தில் இசை விழா கொண்டாடப்படுகிறது. ஆனால், இவை திறந்த கலாச்சார அமர்வு இல்லை. இதில் தமிழ் இசைக்கு நிகழ்ந்த அவலத்தைப் பற்றி கடந்த நூற்றாண்டுத் தமிழ்நாட்டு வரலாறு அறிந்தவர்களுக்கு நாம் புதிதாக கூற ஒன்றுமில்லை.

சென்னை சங்கத்தின் மிக முக்கியமான பங்களிப்பு என்பது கலை, கலாச்சார நிகழ்வுகள் என்பது ஏதோ உயர்குடியினருக்கு மட்டும் சொந்தமானது இல்லை. அனைவரும் தங்களுடைய கலை வடிவங்களை மற்றவர்களுக்கு எடுத்துக்காட்ட உருவாக்கப்பட்ட ஒரு பிரமாண்டமான திறந்தவெளி அமைப்புதான் இது. படைப்பாளி / பங்கேற்போர் என்கிற இருமை நிலையை உடைத்து, அனைவரும் இணைந்து கலையின் வீச்சை உணர வைக்கும் முயற்சி இது.

## இந்த ஐந்து தளங்கள் என்ன?

**ஒன்று:** நகர்ப்புற வாழ்க்கையில் கிராமத்து கலாச்சார விழுமியங்கள் தொலைந்துவிட்டது என்கிற ஒரு நிலை ஏற்பட்டுள்ள சூழலில், கலாச்சார விழுமியங்களை எங்கிருந்தாலும் வளர்க்கமுடியும் என்கிற நம்பிக்கையை அளித்ததுதான் சென்னை சங்கமத்தின் முதல் வெற்றி. இதில் பல்வேறு ஜனநாயகக் கூறுகள் அடங்கியுள்ளன. ராஜாஜிபோல் “குலத்தொழில் செய், கிராமத்தை விட்டு வெளியில் வராதே, நவீன வளர்ச்சியில் உனக்கு பங்கு இல்லை” என்றெல்லாம் சங்கமம் கூறவில்லை. மாறாக, கடந்த 40-50 வருடங்களாக நாம் பெற்ற வளர்ச்சிக்கு விலையாக நம்முடைய கலைகளை விட்டுவிட வேண்டிய அவசியமில்லை. நவீன வாழ்க்கையும், நம் கலைகளும் ஒன்றோடு ஒன்றாக இணைந்திருக்க முடியும். கலைஞர்கள் போதுமான அளவிற்கு பார்வையாளர்கள் கிடைத்தால் கலைகளை வாழவைக்கும் சித்து விளையாட்டை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்பதைச் சங்கமம் மீண்டும் ஒருமுறை நமக்கு உணர்த்துகிறது.

**இரண்டு:** கலையின் வளர்ச்சியும் ஒரு மகரந்தச் சேர்க்கைபோல்தான். ஒவ்வொரு கலைவடிவமும் மற்றொரு கலை வடிவத்திடமிருந்து சில கூறுகளைப் பெற்று, புதிய வடிவங்கள் தொடர்ந்து உருவாகி கலாச்சார ஆறு வற்றாத ஜீவநதிபோல் செல்லக் காரணமாக இருக்கிறது. சங்கமத்தில் பலதரப்பட்ட கலைஞர்கள் மற்ற கலைஞர்கள் கையாளும் உத்திகளையும், வடிவம் சார்ந்த... உள்ளடக்கம் சார்ந்த வெளிப்பாடுகளையும் ஒரே இடத்தில் கிடைக்கச் செய்த நல்ல வாய்ப்புதான் சென்னை சங்கமம்.

**மூன்று :** இதனை ஒரு திறந்தவிழாவாக நடத்துவதன்மூலம் “வேர்களை இழந்துவிட்டோம், நம்முடைய சிறப்புகளைத் தொலைத்துவிட்டோம். நம்முடைய இளைய தலைமுறைக்கு கிராமியக் கலைகளின் சிறப்பு பற்றி என்ன தெரியும்’ என்று பொதுவான ஒப்பாரி வாய்களுக்கு ஓய்வு கொடுத்துள்ளது சென்னை சங்கமம்.

**நான்கு:** நகரத்தின் இணைப்புப் பாலமாக உருவாக்கி, தனித்தனித் தீவுகளாக நகர வாழ்க்கை நம்மை மாற்றிவிட்டது என்கிற நிலையை, விழா எடுத்து அனைவரையும் அழைத்து - இது தீவுகளின் கூட்டணி அல்ல- ஒரு மொழி பேசும் மக்களின் ஒட்டுமொத்த வெளிப்பாடு என்கிற எதிர்நிலை. இழந்துவிட்டோம் என்று குறை கூறுவதைத் தவிர்த்து, பெற்றுவிட்டோம் என்கிற நிறைவை நோக்கிய பயணத்தின் வெளிப்பாடு.

**ஐந்து:** சென்னை சங்கமம் பொதுவாக அனைவரையும் மீண்டும் நம் கலாச்சார ஊற்றுக்கண்கள் மீது ஆர்வம்கொள்ளச்செய்யும் முயற்சி என்றால், அதில் தமிழ்ச்சங்கமம் அடுத்த கட்டத்தில் செயல்படும் ஒரு முயற்சி, கலை, கலாச்சார வெளிப்பாடுகளைத் தீவிர ஆராய்ச்சிக்கு உட்படுத்தும் முயற்சியில் பெருவாரியான மக்களை ஈர்க்கும் முயற்சி இது. சுமார் 60 மணிநேரம் புத்தகங்கள் பற்றியும், எழுத்தின் போக்குகள் பற்றியும், விமர்சன மரபுகள் பற்றியும், கவிதை மரபுகள் மற்றும் இயல், இசை, நாடகத்தின் வெவ்வேறு பரிமாணங்களை நகரின் முக்கிய அரங்கம் ஒன்றில் பரிமாறிக்கொள்வது, புதிதாக கலை உலகிற்கு வரும் ஒவ்வொரு படைப்பாளிக்கும் கிடைத்த மாபெரும் வரப்பிரசாதம் ஆகும். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஒரு புதிய பயிற்சிக்களமாகவும், திரைத்துறையை மேலும் சீராக வளர்க்கும் ஒரு Incubator ஆகவும் மாறியுள்ளது. 1970களில் புதிய சினிமாவிற்கான இடமாக பூனாவில் உள்ள பிலிம் ஆர்க்கைஸ் எனப்படும் சினிமா காப்பகமும், தேசிய திரைப்பட வளர்ச்சிக்கழகம் எனப்படும் NFDC யும் செயல்பட்டன. தமிழ் சூழலைப் பொருத்தவரையில் இந்த வருட இறுதியிலிருந்து தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் Archives மற்றும் NFDC ஆக திகழப் போகிறது. சுமார் 3000 முக்கியத் திரைப்படங்களை மன்றத்தின் கலைஞர் அரங்கத்தில் இளையபாரதியின் முயற்சியால் சேகரிக்கப்பட்டுள்ளன. அனைத்து வசதிகள் உடைய குளிர்சாதனம் பொருத்தப்பட்ட அரங்கத்தில், திரைப்படத்துறை மீது ஆர்வம் உடையவராக இருந்தாலும் இந்தப் படங்களைப் பார்க்கமுடியும். 3000 ஆக இருக்கும் இந்தப் படங்களின் எண்ணிக்கையை 10,000 ஆக மாற்றும் முயற்சியில் இளையபாரதி இறங்கி இருக்கிறார் என்பதையும் இங்கு பதிவு செய்வது அவசியம். அடுத்ததாக, முக்கியமான கலாச்சார வரலாறுகளை கலை அம்சம் மிகுந்த குறும்படங்களாகத் தயாரிக்கவும் மன்றம் முடிவுசெய்து உள்ளது. இதுவே மன்றத்தை நாம் புதிய NFDC என்று அழைக்கக் காரணம். முதல் முயற்சியாக, தமிழ் இசைப்பற்றிய ஆவணப்படத்தை மன்றம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. சுமார் 2,500 வருட பாரம்பரியமிக்க தமிழ் இசை உலக இசைக்குக் கிடைத்த பெரும் கொடை என்பதை இந்தப் படம் நிறுவுவதுடன் நில்லாமல், இந்தச் செழுமையான மரபு அடுத்தத் தலைமுறையினரின் வாழ்க்கைக்கும் பொலிவு சேர்க்கும் என்பதில் எந்தக் கருத்து வேறுபாடுமில்லை.





திரு **இராம.நாராயணன்**
தலைவர்



கவிஞர் **இளையபாரதி**
உறுப்பினர் - செயலாளர்



திரு **வெ. இறையன்பு** இ.ஆ.ப.
துணைத்தலைவர்



திரு **ப.அ. மணி** இ.வ.ப.
பொருளாளர்

# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

**கலை பண்பாட்டுத் துறை**

பொன்னி, 31, பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை, சென்னை - 600 028. போன் : 044-2493 7471

## மன்றப் பொறுப்பாளர்கள்

| | |
|---|---|
| தலைவர் | திரு இராம. நாராயணன் |
| துணைத்தலைவர் | முனைவர் திரு வெ. இறையன்பு இ.ஆ.ப. |
| பொருளாளர் | திரு ப.அ. மணி இ.வ.ப. |
| உறுப்பினர்-செயலாளர் | கவிஞர் திரு இளையபாரதி |
| நிதித்துறை இணைச் செயலாளர் | திரு அ.ப. அண்ணாதுரை |

## மன்றப் பொதுக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| பேராசிரியை | திருமதி சாரதா நம்பி ஆரூரன் |
| கவிஞர் | திரு ஈரோடு தமிழன்பன் |
| கவிஞர் | திரு சுப்பு ஆறுமுகம் |
| பேராசிரியர் | திரு ஆர்.வி. கிருஷ்ணன் |
| | திரு க. திருநாவுக்கரசு |
| | திருவாளப்புத்தூர் திரு டி.ஏ. கலியமூர்த்தி |
| | திருமதி நித்யஸ்ரீ மகாதேவன் |
| | திருமதி ஸ்ரீப்ரியா |
| | திரு குமரிமுத்து |
| | திருப்பாம்புரம் திரு சோ. சண்முகசுந்தரம் |
| | திரு என்.எஸ். வரதராஜன் |
| | திரு எஸ். சவுண்டப்பன் |
| | திரு வழுவூர் வி. ரவி |
| | திரு ஆர்.டி.எஸ். நெடுமாறன் |
| | திரு கே.என். காளை |
| | திருமதி இர. முத்தரசி |
| | திருமதி சுதா ரகுநாதன் |

## மன்ற அலுவலர்கள்

| | |
|---|---|
| நிருவாக அலுவலர் | திரு ச. இராமசாமி |
| உதவிச் செயலாளர் | திரு நா. ஜெயகுமார் |
| கண்காணிப்பாளர் | திரு க.கி. ஜானகிராமன் |
| தேர்வுநிலை சுருக்கெழுத்து-தட்டச்சர் | திரு இரா. ஜனார்த்தனம் |
| உதவியாளர் | திருமதி கு. பாகீரதி |
| உதவியாளர் | திரு சு. மந்திரமூர்த்தி |
| இளநிலை உதவியாளர் | திருமதி வெ. புவனேசுவரி |
| தட்டச்சர் | திரு சு. லிங்கேசன் |
| பதிவுரு எழுத்தர் | திரு ஆ. ஜோசப் ராஜ் |
| ஒருங்கிணைப்பாளர் | திரு சி. பாலகிருஷ்ணன் |





# டாக்டர் கலைஞர் அவர்களின் சிலப்பதிகார நாடகத்தைப் பற்றி டாக்டர். பேரறிஞர் அண்ணா அவர்கள் பொன்னுரை

சேரமான் தம்பி சிலப்பதிகாரத்தை-என் தம்பி கருணாநிதி-தனது 'வளமிகு செழுந் தமிழ்ச் சொல்திறத்தால்' நாடகமாகத் தருவது பொருத்தமானதே. கருணாநிதியின் - தமிழ் ஆளுந்திறன், பாத்திரங்களைப் படைக்கும் ஆற்றல் ஊரும் உலகமும் அறிந்தது; அறிந்து மகிழ்ந்தது; மகிழ்ந்து பாராட்டியது. அத்திறன்-சிலப்பதிகாரத்தை அவர் நாடக உருவில், ஆக்குவதற்குரிய உரிமையைத் தருகிறது. அக்காவியத்தின் உயர் தரத்தை அப்படியே வைத்துக்கொண்டு சில நிகழ்ச்சிகளை மாற்றியிருக்கிறார். நம்மால் விளக்கமளிக்க முடியாதது போலவும், நமக்குத் தேவையில்லாதது போலவும் தோன்றுகின்ற சம்பவங்கள் சிலவற்றிற்குக் காரண காரியத் தொடர்புடையதும் நம்பத் தக்கதுமான மாற்றங்களைச் செய்திருக்கிறார்.

கருணாநிதி எழுதியுள்ள இந்நாடக நூலில் கிரேக்க வணிகன் எனும் பாத்திரம் வருகிறது. கோவலனை மாதவி தன் மாளிக்கைக்கு அழைத்துச் செல்லும் காட்சிக்கு அந்தப் பாத்திரம் ஒரு சாதனமாக -கருவியாக அமைகிறது.

இது கோவலனின் செயலுக்குப் பொருத்தமான விளக்கமாகும்.

கோவலன் மகிழ்ச்சியும்-களியாட்டமும் வேண்டி மாதவி வீட்டிற்குச் செல்லவில்லை.

தமிழ்நாட்டின் பெயரைக் காக்க - தமிழ் அணங்கு, ஒரு கிரேக்கக் கிழவனின் கைப்பிடியில் விழாமலிருக்க கோவலன் செயற்பட்டதாக அக்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

"தாங்கள் ஏன் ஒருமுறை மாதவியைச் சந்தித்து - அடைய முடியாத பொருளைப் பற்றி ஏங்காதே என அறிவுரை கூறி அவள் மனத்தை மாற்றக்கூடாது?"

-இது மாதவி இல்லம் போக விரும்பாத கோவலனிடம் கண்ணகி விடுத்த வேண்டுகோள்! மாதவியின் அழகு தரும் நெற்றி மயக்கத்தால் எழுந்த உணர்ச்சிப் பிழம்பல்ல - கோவலனை மாதவியிடம் சேர்த்தது!

கோவலன் மாதவியிடம் கலையின் குறைவில்லா நிறையுருவைக் கண்டான்; வேறொன்றையுமல்ல!

கோவலன் தானே உருவாக்கிக்கொள்ளாத சூழ்நிலைதான் கோவலனை மாதவி இல்லத்திற்கு அழைத்துச் சென்றது.

அவன் அறிவுரை கூற அங்கு சென்றான். ஆனால் இசை மயமான புது வாழ்வின் துணைவனாக அங்கே இருந்துவிட்டான்.

இன்னொரு முக்கியமான மாறுதல்; சிலப்பதிகாரத்தில் கண்டுள்ள ஒரு நிகழ்ச்சியில் கருணாநிதியால் சிறப்புமிகு முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

சிலப்பதிகாரம் தரும் விளக்கப்படி அரண்மனையின் தலைமைப் பொற்கொல்லர்தான் உண்மையான குற்றவாளி என்பது அறிந்த ஒன்று. இதனால் - இப்பழியால் பொற்கொல்லர் சமுதாயத்தின் சுயமரியாதையே பாதிக்கப்படும் உணர்வு ஏற்படுகிறது.

இளங்கோவடிகளுக்கு அத்தகு உள்நோக்கம் இருந்ததென யாரும் கூறிட முடியாதெனினும், அந்தப் பொற்கொல்லர் சமுதாயம் முழுமையுமே பெரியதொரு வெறுப்பை ஏற்க வேண்டியிருக்கிறது. இந்த வெறுப்பைப் - பழியைக் கருணாநிதி துடைத்தெறிந்தார். பல்வேறு சமூகங்களுக்கிடையேயுள்ள நல்லெண்ண - நல்லுறவில் அசைக்க முடியாத நம்பிக்கையுடையவராதலால், இப்பழியைத் துடைத்துவிட விரும்பினார். அவரது எழுத்தோவியத்தில் போற்றத்தகும் முறையில் அந்த நற்பணியைச் செய்தார்.



பொற்கொல்லர் அல்ல- பாண்டிய நெடுஞ்செழியனின் அரண்மனைக் காவலன் ஒருவன்தான் உண்மையான குற்றவாளி என இந்நூலில் குறிக்கப்படுகிறது.

சமூகநீதிக்காக இந்த மாற்றம் செய்யப்பட்டது. இத்தகைய மாற்றங்களைப் பழம்பெரும் இலக்கியங்களில் செய்வது மிகமிக நியாயமானது; தேவையானது! இந்த மாற்றம் மிகச் சிறந்த நோக்கோடு செய்யப்படுகிறது.

இந்த மாற்றத்தைப் பாராட்டி - வாழ்த்தியவர்கள்- பழி கூறப்பட்ட அந்தச் சமுதாயத்தினர் மட்டுமல்ல; பழம்பெரும் இலக்கியங்களை நவீன முறையில் தருபவர்களும் வாழ்த்தியுள்ளனர்; பாராட்டியுள்ளனர்!

இந்த மாற்றம் தவிர - இக்காப்பியத்தின் முழு உருவம் - உரைநடையில் பாராட்டத்தகும் வழியில் அமைக்கப்பட்டிருக்கிறது.

சிலப்பதிகாரத்தின் இலக்கிய எழிலோ உருவோ சிதையாவண்ணம் - சிலம்பில் காணும் செந்தமிழ் இனிமை- இளங்கோ தந்த இன்றமிழ் இனிமை மாற்றுக் குறையாது இந்நூலில் இருப்பது மெச்சத் தகுந்தது!

சிலப்பதிகாரத்தின் முதற்பகுதி ஒரு இளைஞரின் காதல் வாழ்வு கதையாயிருக்கிறது. அதன் பிற்பகுதி உயர்ந்துயர்ந்த -நம் நெஞ்சப் பெருமூச்சை உருவாக்குவதாய் அமைகிறது.

2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா



## கோவலன் தலை கொய்யப்பட்டபோது – கடுங்கோபம் கொண்டெழுந்த கண்ணகியைச் சித்தரித்த கருணாநிதி, உணர்ச்சி இமயத்திற்கு மேலும் மேலும் எழுகிறார்.

நிகழ்ச்சிகள் வேகமாய் நடைபோடுகின்றன; நாடகத் திருப்பங்கள் வந்து சேர்கின்றன.

மாதவியின் பேரழகில் மூழ்கியிருந்தவன், தான் ஒரு அறிமுகமற்றவனாய்த் தனக்கே தென்படுகிறான்.

ஒப்புயர்வற்ற காதற்கூடமாய் எந்த இல்லம் இருந்ததோ– அது வெட்கத்திற்குரிய வெற்றிடமாய்த் தோன்றியது.

அவன் திரும்புகிறான் – தெளிவுள்ளவனாய் திரவியமற்றவனாய் – கண்ணகிக்கு இழைத்த அநீதிபற்றி உணர்ந்தவனாய் – உள்ளம் நொந்தவனாய் வருத்தம் கொண்டவனாய் – பாதியில் துவண்டு போன நல்வாழ்வைத் துவக்கும் ஒரே நோக்கம் உடையவனாய் – புதுவாழ்வைக் காணும் துடிப்புள்ளவனாய்! அந்தப் புதுவாழ்வு கண்ணகி தவிர வேறு யார் தரமுடியும்?

கண்ணகியை மீண்டும் கோவலன் அடையும் காட்சியைக் காணும்போது – மகிழ்ச்சிக் கண்ணீரும் நம்பிக்கையும் முந்திக்கொண்டு வரும்!

கண்ணகி பொறுத்திருந்து காத்தது வீண்போகவில்லை!

இதோ–கோவலன் மீண்டும் அவளிடம் வருகிறான்; இன்ப வாழ்வைக் காண– இல்லம் காண!

மீண்டும் அவர்கள் இல்லம் ஒளிபெறும்; மகிழ்ச்சித் துள்ளும்!

மீண்டும் மகிழ்ச்சிப் பிணைப்பும்; இணைப்பும்; இனிமைச் சிரிப்பும் தோன்றும்; ஒளியிழந்து கிடந்த மாளிகையில் – இருளும், மிரளும் தனிமையும் சூழ்ந்த மாளிகையில் மீண்டும் ஒளி!

இதோ கோவலன் வந்துவிட்டான்–காதல் எனும் மணி விளக்கேற்ற!

கண்ணீர் இனித் தேவையில்லை கண்ணகி! கடும் வேதனை இனியில்லை!

புன்சிரிப்புக் காட்டு; புவிமகிழச் சிரித்திடு; ஆனந்தம் மேலிட – ஆடிடு நடனம்!

யாரை நீ இழந்தாயோ – அவனை நீ பெற்றுவிட்டாய்! தனிமையில் – கொடுமையில் இனியும் நீ இருக்க வேண்டியதில்லை. இதோ வந்து விட்டான் கோவலன்.

–இத்தகைய நம்பிக்கையோடும் –நல்லுணர்வோடும் – ஏன் – ஆனந்தக் களிப்பிலும் கோவலனின் வருகையை நாம் வரவேற்கிறோம். ஆனால்.....!

கோவலன் தலை கொய்யப்பட்டபோது – கடுங்கோபம் கொண்டெழுந்த கண்ணகியைச் சித்தரித்த கருணாநிதி, உணர்ச்சி இமயத்திற்கு மேலும் மேலும் எழுகிறார்.

எந்தப் பெண்தான் – தன் கணவனின் சாவைத் தாங்கிட முடியும்? எந்தப் பெண்தான் தன் கொழுநனுக்கு இழைத்திட்ட கொடுமையை – இழிவைத் தாங்கிட முடியும்?

இதோ – கோவலன் தலையிழந்து – தவறாகக் குற்றம் சாட்டப்பட்டு – அவசரத்தில் நீதி வழங்கப்பட்டு – கல்லாக்களிமகன் ஒருவனால் கொல்லப்பட்டு கிடக்கிறான்.

ஆனால், ஆதரவற்ற ஒரு பெண்ணான கண்ணகியால் என்ன செய்யமுடியும்? இச்செயலுக்கு அரசர்குடிப் பிறந்த மன்னனே பொறுப்பு!

செயல் தவறானது; ஆனால் செய்தவன் சாதாரண மனிதனல்ல; கடும் வலியும் – கற்றறிந்த நெஞ்சுங்கொண்ட பாண்டியன் உத்திரவிட்டு நிகழ்ந்த செயல் இது!

ஏன்? எப்படி?

இக்கேள்விகள் கண்ணகி முன் எழுந்தன; அவளது கோபக்கனல் அனைவரையும் உலுக்கி விடுகிறது! அவள், இழந்ததை நினைத்து வருந்திட–வாளாயிருக்க மறுத்தாள்!

கோவலன் மீது பழிப் பெயர் ஏறிட அனுமதிக்க மறுத்தாள்! “இல்லை! இல்லை! இந்நிலத்தில் நீதி நிலைத்திட வேண்டும்! நீதி– அதை நான் பெற்றே தீருவேன்!”– இடி முழக்கமென முழக்கினாள். கொலு மண்டபம் நோக்கி நடைபோட்டாள், நீதி கேட்டுப் பெற!

தனது வாதங்களை முன் வைத்தாள் கண்ணகி! அவளது எழுச்சி மிகு பேச்சையும் எச்சரிக்கையும் மு.க.எடுத்துரைக்கும்போது மயிர்க்கூச்செறிகிறது.

கண்ணகியோடு தாமும் சேர்ந்து அவள் காட்டும் சினத்திலும்– பழிப்பிலும், குற்றம் சாட்டுதலிலும், எழுச்சியிலும் பங்கு கொண்டு பாராளும் மன்னன் முன் வாதாட வேண்டும் என்ற உணர்வை– உள்ளத்து எழுச்சியை அந்தக் காட்சி உருவாக்கி விடுகிறது.

வெடிக்கிறது எரிமலை– கொந்தளிக்கிறது கடல்–

**நூல் முழுவதும் கருணாநிதி, ஒரு காவியப் படைப்பிற்குத் தேவையான செழுஞ்சொல்லோட்டத்தை-சீரிய-அழகு அமைப்பை உருவாக்கித் தருகிறார்.**

கூந்தல் மலர் இழந்த கைம்பெண் நீதி தேவதையாக மாறுகிறாள்.

"மன்னனா நீ! ஏ! பாண்டியனே!

மன்னனும் நீயல்ல; வளநாடும் உன்னுடையதல்ல!"

-என்று முழங்குகிறாள் பத்தினித் தெய்வம். அனைத்தும் அடக்கி-ஆத்திரம் வெளிப்படுகிறது!

இத்தகு காட்சியை உணர்ச்சி உருவோடு அமைப்பது ஒரு எழுத்தாளனுக்கு எளிதான காரியமல்ல! ஆனால் கருணாநிதி யாரையும் விஞ்சுகின்ற அளவில் வெற்றி கொண்டுள்ளார், தான் ஒரு ஒப்புவமையற்ற நடையழகு காட்டும் எழுத்தாளர் என்பதால்!

"பேசுங்கள்- கொவ்வைக் கனிவாய் திறந்து பேசுங்கள்-அத்தான். ஒருமுறை பேசுங்கள்-அத்தான். ஒருமுறை பேசுங்கள் அத்தான். உங்கள் கண்ணகி வந்திருக்கிறேன் பேசுங்கள். அத்தான் பேசுங்கள்-உங்கள் கண்ணகி வந்திருக்கிறேன்!"

கண்ணீர் கடலென ஓட அவள் புலம்புகிறாள், புலம்புகிறாள்!

ஆனால் பதில் ஏதும் இல்லை! கோவலன் கூடாகிவிட்டான்.

"நீங்கள் பேசவேண்டாம்; உங்களுக்காக இந்த உலகத்தையே பேசச் செய்கிறேன்."

-என்று கூறிய கண்ணகி உலகத்தையே பேச வைத்தாள்; அவன் காலத்து உலகை மட்டுமல்ல; நிகழப்போகும் காலத்து உலகையெல்லாம் பேச வைத்தாள்!

நூல் முழுவதும் கருணாநிதி, ஒரு காவியப் படைப்பிற்குத் தேவையான செழுஞ்சொல்லோட்டத்தை-சீரிய-அழகு அமைப்பை உருவாக்கித் தருகிறார்.

மு.கருணாநிதியின் இந் நாடகமே ஒரு சிலம்பு! இளங்கோவடிகளின் ஆதங்கம் அதில் இருக்கிறது, இந்தப் புகழ்மிக்க எழுத்தாளரின் (கருணாநிதியின்) ஆற்றலும் இதில் அபரிதமான அளவுக்கு இருக்கிறது.

சிலப்பதிகாரம்-காலத்தையும் கடந்த கருத்தமைதி கொண்டது. அதன் போதனை- தமிழ் நாட்டில் மட்டும் முடங்கிக் கிடப்பதல்ல!

அது- வையகம் முழுமைக்கும் உரிய பாடம்! இத்தகைய உயர் தரமுள்ள காவியம், உலகமகா காவியங்களில் ஒன்றெனக் கருதப்படவேண்டும்.

இந்நாடக நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது இக்காலத்தின் தேவையாகும். இதற்குப் பொறுப்பான ஆசிரியர் நமது போற்றுதலுக்கும் பாராட்டிற்குமுரியவர். திரு.டி.ஜி.நாராயணசாமி நூலின் கருத்தழகிற்கும், கருணாநிதியின் நடையழகிற்கும் ஏற்ப மொழிபெயர்த்துள்ளார்.

இந்நாடக நூல் வெளிக்கொணர்வதன்மூலம் தம்பி கருணாநிதி தமிழ் இலக்கியத்திற்கு நற்பணி ஆற்றியுள்ளார்.

இந்நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பைக் கொண்டுவந்ததன் மூலம், சிலப்பதிகாரம் வழியாய் இளங்கோவடிகள் தந்த உணர்வும்- உயர்ந்த செய்தியும், தமிழகத்தைவிடப் பெரிதான உலகிற்குப் பரவ வழி ஏற்பட்டிருக்கிறது.

இந்தப் பரந்த உலகிற்கு நாம் ஏதாவது உன்னதப் பொருளைத் தரமுடியும்-எனில் அது நமது தமிழ்க் காவியங்களே!-ஐம்பெருங் காப்பியங்களே! அதிலும் அரிதாய்ப் புகழ் ஒளிவிடும் சிலப்பதிகாரமே!

இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் நீண்ட நாள் நினைப்பை -தேவையை நிறைவேற்றுகிறது. இந்நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பை வரவேற்பதில் நான் பெருமகிழ்வடைகிறேன்.

ஐயிரண்டு திசையிலும், நமதருமைத் தமிழ் நகர் தந்த மலர்க்குலத்தின் மணம் பரவி நிலவிடுக!

கீர்த்தி மிக்கது தமிழகம் - என்பதை உலகம் உணர்ந்திடட்டும்!

வாழ்க தமிழ்! வாழ்க தமிழகம்!!

2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா



தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் கலைஞர் ஆட்சி தொடங்கியதிலிருந்து, புது முறுக்கோடு ஏறுநடை போடுகிறது. இதன் தலைவராக, பிரபல இயக்குநரும், படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவரும், திராவிடர் இயக்கப் பிரமுகர்களில் ஒருவருமான மானமிகு இராம.நாராயணன் அவர்களையும், செயலாளராக மானமிகு கவிஞர் இளையபாரதி அவர்களையும் நியமித்து, தக்காரை செயற்குழுவில் இடம்பெறச் செய்தது முதல்வர் கலைஞரின் செயற்கரிய சாதனைதான். தமிழ் இன உணர்வும், மொழி உணர்வும் பண்பாட்டுப் பாதுகாப்பும் அதன் செயலாக்கங்கள் முக்கியமாக இடம் பெறத் தவறுவதில்லை.

**விடுதலை**

DECCAN Chronicle



# State to make film on 'Tamil trinity'

By B. KOLAPPAN

**Chennai, May 24:** Chief minister M. Karunanidhi has given the green signal to the Tamil Nadu Iyal Isai Nataka Mantram to go ahead with the production of a documentary on the lives of well known Tamil composers Muthuthandavar, Arunachala Kavirayar and Marimuthaa Pillai.

Known as the "Tamil Trinity", these three composers had lived long before the Carnatic Trinity of Thiyagaraja, Muthusamy Dikshitar and Shyama Sastrigal. They are also known as the Sirkazhi Trinity as they were born in this small town in Nagapattinam.

The period of Muthuthandavar is not clearly known. though historians believe that he had lived around 1500 A.D.. Marimuthaa Pillai lived between 1712 and 1787 A.D.while Arunachala Kavirayar is said to have lived in the period 1711-1778 A.D.

Culture and tourism secretary Mr V. Iraianbu said the government had accepted in principle the proposal to make a documentary on the Tamil Trinity. "We need to prepare the script for the documentaries. It will then be scrutinised by a committee of experts. After that the production will begin," he said.

Iyal Isai Nataka Mantram member secretary Mr Ilyabharathi said the chief minister was keen on the project. "Besides Tamil Trinity, we are planning to produce documentaries depicting the lives of outstanding musicians like nagaswaram wizard Thiruvavaduthurai Rajarathinam Pillai," he said. The government had already made an announcement on this in the Assembly.

The problem with singing the compositions of the Tamil Trinity is that there are no standardised tunes for them, unlike in the case of the Carnatic Trinity, who had themselves set the ragas for their *keerthanas*.

Eminent musicologist Mr B.M Sundaram, however, says that the Tamil Trinity also had specific ragas in mind but those ragas were not properly passed on to the next generation.

"Noted flute maestro late Thirupampuram Swaminatha Pillai set the tune for around 60 songs of Muthuthandavar but not everyone follows the pattern. Likewise late Ariyakudi Ramanuja Iyengar composed the music for many of the Arunachala Kavirayar compositions. But he never followed the ragas set by Sirkazhai brothers Kothandarama Iyer and Venkatrama Iyer," he said.

Some musicologists argue that the compositions of the Tamil Trinity have no original tunes, as they were only composers and did not have adequate knowledge of music. They concede that probably Muthuthandavar, who was born in a family of musicians, could have set the tunes, but the other two, who had no musical lineage, could have confined themselves to writing the *keerthanas*.

· MONDAY, OCTOBER 26, 2009 ·

THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

# Government plans a documentary on Tamil musical tradition

## Tamil Nadu Iyal Isai Nataka Mantram entrusted with the task

B .Kolappan

- Rs.5 lakh has been allotted for the project
- To be shot in temples where the Trinity sang

**CHENNAI:** The Tamil Nadu government has decided to make a documentary, retracing the Tamil musical tradition from Sirkazhi Moovar, known as Tamil Trinity, to nagaswaram legend Thiruvavaduthurai N.Rajarathinam Pillai.

Tamil Nadu Iyal Isai Nataka Mantram has been entrusted with the task of making the film and Rs.5 lakh has been allotted for the project.

"The script is ready. It is based on the book 'Carnataka Sangeethathin Aadi Mummorthikal,' penned by Mu. Arunachalam Pillai," said poet Ilayabharathi, member-secretary of the Mantram, who has hands-on experience in filmmaking.

An expert committee comprising T.S.Letchappa Pillai and S. Premila Gurumurthy was appointed to study the project and it has approved the script.

The period of the Tamil Trinity – Muthuthandavar (1600-), Arunachala Kavirayar (1711-1778) and Marimutha Pillai (1712-1787) was much before time of the Carnatic Trinity – Thiyagaraja Swamigal, Muthuswami Dikshitar and Shyama Shastri. But the documentary would not confine itself to these three Tamil composers. "It will reflect the Tamil music tradition, drawing essentially from Sangam literature, classical tradition, bhakti movement, especially Thevaram, Thiruvachagam singing," said the order issued by the Tourism and Culture Department.

Mr Ilayabharathi said the the 40-minute documentary would articulate the views of Rajaji, Kalki, T.K.Chidambaranatha Mudaliar and subsequently the contribution of Dravidian leader such as C.N.Annadurai and Chief Minister M. Karunanidhi.

"In making the film I would like to follow the approach of Mani Kaul, who produced a documentary on famous singer Siddheswari Devi," said Mr.Ilayabharathi, who made Chief Minister M. Karunanidhi's Thenpandi Singam into a television serial.

It is going to be shot in temples where the Trinity had sung their compositions and in places they visited. Well known musicians would participate in the effort and sing the compositions of the Trinity.

Besides the documentary, Iyal Isai Nataka Mantram has plans to preserve recordings of great maestros of yesteryears, now available in spool.

2007க்கான
கலைமாமணி
விருது
வழங்கும் விழா





(1909 - 1969)
© Dec 08
Mohan Das Vadakara










# அறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா














2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா

# வில்லுப்பாட்டில் அறிஞர் அண்ணாவின் கதை










# திருப்பாம்புரம் சண்முகசுந்தரம் வழங்கிய தமிழ் இசை விழா














2007க்கான
கலைமாமணி
விருது
வழங்கும் விழா

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர்

# என். சுரேஷ்ராஜன் தொடக்கி வைத்த

# இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் திட்டம்



















2007க்கான
கலைமாமணி
விருது
வழங்கும் விழா



# தேவாரம் பாடினால் தில்லையம்பலம் தீட்டாகுமா?

(கருத்தரங்கம்)









## மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்

# எ.வ.வேலு அவர்கள் தலைமையில்

# தெருக்கூத்துத் திருவிழா









2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா

## மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்

# பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில்

# மார்ச் 8 மட்டும் அல்ல (மகளிர் கவியரங்கம்)

















2007க்கான
கலைமாமணி
விருது
வழங்கும் விழா

# பிரமிளா குருமூர்த்தியின்
# தேவார திருவருட்பா இசைவிழா









## தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர்

## திருமதி. **பூங்கோதை** அவர்கள் தலைமையில்

# சௌமியா குரலில் மகாகவி பாரதி விழா









2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா

# ஜீவா நூற்றாண்டு விழா















2007க்கான
கலைமாமணி
விருது
வழங்கும் விழா

# திராவிட இயக்கப் படைப்பாளிகளில் சிலர்...

## கருத்தரங்கம்-1

### தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், டி.கே.சீனிவாசன், குத்தூசி குருசாமி ஆகியோரைப் பற்றிய கருத்தரங்கம்


















2007க்கான
கலைமாமணி
விருது
வழங்கும் விழா

# இஞ்சிக்குடியின் நாதசுரத் திருவிழா















2007க்கான
கலைமாமணி
விருது
வழங்கும் விழா

கலைபண்பாட்டுத் துறை செயலாளர்

திரு. **வெ.இறையன்பு** தலைமையில்

# சீர்காழி சிவசிதம்பரத்தின் தமிழ் இசைவிழா














2007க்கான
கலைமாமணி
விருது
வழங்கும் விழா

மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்

# தங்கம் தென்னரசு அவர்கள் தலைமையில்

# தவில் நாதசுரக் கலைவிழா




















2007க்கான
கலைமாமணி
விருது
வழங்கும் விழா





# கலைஞரின் 'புறநானூற்றுத் தாய்' கவிதை நாடகம்







2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா

# காரைக்கால் அம்மையார் கவிதை நாடகம்



















2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா

# கலைஞரின் 'பச்சைக்கிளி' கவிதை நாடகம்






# ‘காகித ஓடம் கடல் அலைமீது...’ கலைஞரின் திரைப்படப் பாடல்கள் நாட்டிய வடிவில்







2007க்கான
கலைமாமணி
விருது
வழங்கும் விழா

# இயல் இசை நாடக மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகத்தில் ஒரு காட்சி








# நாகூரானின் கானா கலை நிகழ்ச்சி







2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா

# 2007 ஆம் ஆண்டுக்கான கலைமாமணி விருது பெறும் கலைஞர்கள்



## இயல்

| | |
|---|---|
| ஆ.மாதவன் | சிறுகதை-நாவல் ஆசிரியர் |
| சிற்பி பாலசுப்பிரமணியம் | கவிஞர் |
| ஆண்டாள் பிரியதர்ஷினி | கவிஞர் |
| முனைவர். அ. மறைமலையான் | எழுத்தாளர் |
| சரோஜ் நாராயணசுவாமி | செய்தி வாசிப்பாளர் |
| முனைவர். பெரு. மதியழகன் | இலக்கிய ஆய்வாளர் |
| முனைவர். சரளா ராஜகோபாலன் | இலக்கிய ஆய்வாளர் |
| முனைவர். அவ்வை நடராஜன் | தமிழ் அறிஞர் |
| எஸ். மாசிலாமணி | பேச்சாளர் |
| சுகி.சிவம் | சமய சொற்பொழிவாளர் |

## இசை

| | |
|---|---|
| சீர்காழி ஆர். ஜெயராமன் | இசை ஆசிரியர் |
| எம்.எஸ். முத்தப்ப பாகவதர் | இசை ஆசிரியர் |
| மகாராஜபுரம் எஸ். சீனிவாசன் | குரலிசைக் கலைஞர் |
| ஆண்டாங்கோவில் வீ.செ. சிவகுமார் | குரலிசைக் கலைஞர் |
| வெ. தாயன்பன் | இசையமைப்பாளர் |
| எம்பார் எஸ். கண்ணன் | வயலின் கலைஞர் |
| வழுவூர் ரவி | மிருதங்கக் கலைஞர் |
| ஏ. டிரம்ஸ் சிவமணி | டிரம்ஸ் கலைஞர் |
| முனைவர். எஸ். சதாசிவன் | இறையருட் பாடகர் |
| வீரமணி ராஜு | இறையருட் பாடகர் |
| வி.சா. குருசாமி தேசிகர் | இயற்கலை பண்பாட்டுக் கலைஞர் |
| திருமெய்ஞானம் டி.வி. ராஜகோபால் பிள்ளை | நாதசுரக் கலைஞர் |
| எஸ்.வி. மீனாட்சி சுந்தரம் | நாதசுரக் கலைஞர் |
| தலைச்சங்காடு டி.எம். ராமநாதன் | தவில் கலைஞர் |
| சேந்தமங்கலம் ஆ. மணிகண்டன் | தவில் கலைஞர் |

## நாட்டியம்

| | |
|---|---|
| ஷைலஜா | பரத நாட்டிய ஆசிரியர் |
| ஸ்வேதா கோபாலன் | பரத நாட்டியக் கலைஞர் |
| சங்கீதா கபிலன் | பரத நாட்டியக் கலைஞர் |
| கயல்விழி கபிலன் | பரத நாட்டியக் கலைஞர் |
| ஐஸ்வர்யா ரஜினிகாந்த் தனுஷ் | பரத நாட்டியக் கலைஞர் |
| ஜாகீர் உசேன் | பரத நாட்டியக் கலைஞர் |
| வசந்தா வைகுந்த் | நாட்டிய-நாடகக் கலைஞர் |

## நாடகம்

| | |
|---|---|
| கே.என்.ஆர். ராஜாமணி | நாடக நடிகை |
| முனைவர். மு.இராமசாமி | நாடக ஆசிரியர் |
| கூத்துப்பட்டறை ந. முத்துசாமி | நாடகத் தயாரிப்பாளர் |
| வி.ஓய். தாஸ் | நாடக அரங்க அமைப்பாளர் |

## திரைப்படம்

| | |
|---|---|
| அபிராமி ராமநாதன் | தயாரிப்பாளர் |
| சேரன் | இயக்குநர் |
| சுந்தர்.சி | நடிகர் |
| பரத் | நடிகர் |
| மீரா ஜாஸ்மின் | நடிகை |
| நயன்தாரா | நடிகை |
| அசின் | நடிகை |
| மா.பசுபதி | குணச்சித்திர நடிகர் |
| ஷோபனா | குணச்சித்திர நடிகை |
| ஆர். வையாபுரி | நகைச்சுவை நடிகர் |
| முனைவர். பி. சரோஜா தேவி | பழம்பெரும் நடிகை |
| கே. வேதம்புதிது கண்ணன் | வசனகர்த்தா |
| ஹாரீஸ் ஜெயராஜ் | இசையமைப்பாளர் |
| ஆர்.டி. ராஜசேகர் | ஒளிப்பதிவாளர் |
| பி. கிருஷ்ணமூர்த்தி | கலை இயக்குநர் |
| சித்ரா சுவாமிநாதன் | புகைப்படக் கலைஞர் |
| நவீனன் | பத்திரிகையாளர் |

## இசை நாடகம்

| | |
|---|---|
| சி. டேவிட் | மிருதங்கக் கலைஞர் |
| செம்பை ச. அர்சுனன் | ஆர்மோனியக் கலைஞர் |

## கிராமியக் கலை

| | |
|---|---|
| ஆர். விசுவநாதன் | தெருக்கூத்துக் கலைஞர் |
| அ. சங்கரபாண்டியன் | காவடியாட்டக் கலைஞர் |
| ந. வேலவன் சங்கீதா | வில்லுப்பாட்டுக் கலைஞர் |
| பொ. கைலாசமூர்த்தி | ஒயிலாட்டக் கலைஞர் |
| துறையூர் சா. முத்துக்குமார் | காளியாட்டக் கலைஞர் |

## சின்னத்திரை

| | |
|---|---|
| சுந்தர் கே. விஜயன் | இயக்குநர் |
| வே. திருச்செல்வம் | இயக்குநர் |
| பாஸ்கர் சக்தி | கதை வசனகர்த்தா |
| வி.பி. அபிஷேக் | நடிகர் |
| அனுஹாசன் | நடிகை |
| தெ. அமர சிகாமணி | குணச்சித்திர நடிகர் |
| மா. தேவிப்பிரியா | நடிகை |
| எம்.எம். ரெங்கசாமி | ஒளிப்பதிவாளர் |
| ரமேஷ் பிரபா | நிகழ்ச்சி தயாரிப்பாளர் |

## ஓவியம்

| | |
|---|---|
| என். சீனிவாசன் | ஓவியர் |

## பண்பாட்டுக் கலை பரப்புநர்

அரிமா கோ. மணிலால்

## பொற்கிழி

| | |
|---|---|
| டி.என். கிருஷ்ணன் | நாடக நடிகர் |
| என்.எஸ். வரதராசன் | இசை நாடகப் பாடலாசிரியர் |
| டி.சி. சுந்திரமூர்த்தி | புரவியாட்டக் கலைஞர் |

## சிறந்த நாடகக் குழு

| | |
|---|---|
| கலைச்செல்வம் சாம்பு | சிறந்த கலை நிறுவனம் ஸ்ரீ சங்கர நாராயண சபா, ஆடுதுறை |
| மா.இரா. பஞ்சநதம் | தமிழிசை மன்றம், திருவையாறு |

செ.ம.தொ துறை
10 டிச 2009
சென்னை-600 002



# 2007 கலைமாமணி விருது பெறும் கலைஞர்கள் பற்றிய குறிப்புகள்







## ஆ. மாதவன்

சிறுகதை / நாவலாசிரியர்

தமிழ்ச் சிறுகதையிலும், நாவலிலும் மிக முக்கியமான சாதனைகளைப் புரிந்த படைப்பாளி ஆ.மாதவன், 1949ஆம் ஆண்டு 'பொன்னி' இதழில் 'பூவும் காயுமான சில நினைவுகள்' என்ற படைப்பை எழுதி இலக்கிய உலகில் பிரவேசித்தவர். ஆரம்ப கால முரசொலியில் தொடர்ந்து எழுதி வந்தவர். சமீபத்தில் ஆஸ்கார் விருது பெற்ற 'பிங்கி ஸ்மைல்' என்ற ஆவணப் படத்தின் உதட்டுப்பிளவு பற்றிய கதையை ஒத்த படைப்பை 1974இல் வெளியான 'புனலும் மணலும்' என்ற நாவலிலேயே எழுதியவர். 'கிருஷ்ணப்பருந்து', 'தூவானம்' போன்றவை இவரின் குறிப்பிடத்தக்க நாவல்களில் சில. சமீபத்தில் இவருடைய மொத்த சிறுகதைகளின் தொகுப்பு 'ஆ.மாதவன் கதைகள்' என்ற பெயரில் தமிழினி வெளியீடாக வந்துள்ளது. இலக்கியத்திற்காகத் தரப்படும் எந்த மிக உயர்ந்த பரிசையும் பெறத்தக்க ஆ.மாதவனை, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் அரசு 'கலைமாமணி' விருது வழங்கி கௌரவிக்கிறது.

M.R.A.35 ஓட்டுக்கால் தெரு,
கைதமுக்குபேட்டை அஞ்சல், திருவனந்தபுரம் - 695028.
தொலைபேசி: 0471-2572555



## சிற்பி பாலசுப்பிரமணியம்

கவிஞர்

2000 வருட பாரம்பரியமிக்க தமிழ்க் கவிதையில் இருபதாம் நூற்றாண்டு கண்ட கவிஞர்களுள் முக்கியமானவர் சிற்பி. மரபுக் கவிதையிலும், புதுக்கவிதையிலுமாக 15 கவிதை நூல்களையும், ஒரு கவிதை நாடகத்தையும், 14 உரைநடை நூல்களையும், 8 மொழிபெயர்ப்புகளையும், சுமார் 75க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் படைத்தளித்த படைப்பாளி. 2002ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடெமி விருதை இவருடைய 'ஒரு கிராமத்து நதி' என்ற கவிதை நூல் பெற்றது. மகாகவி உள்ளூர் விருது உட்பட 25 பரிசுகளுக்கு மேல் பெற்றிருக்கக்கூடிய இவருடைய குறிப்பிடத்தக்க கவிதை நூல்கள் 'சர்பயாகம்', 'மௌன மயக்கங்கள்', 'பூஜ்ஜியங்களின் சங்கிலி'. தற்போது சாகித்ய அகாடெமியின் தமிழ் ஆலோசனைக் குழுவில் ஒருங்கிணைப்பாளராக உள்ளார். தன் பெயரில் சிற்பி அறக்கட்டளை என்ற ஒன்றை அமைத்து ஆண்டுதோறும் கவிஞர்களுக்குப் பரிசு வழங்கி வருகிறார். 1936 இல் பிறந்த சிற்பி தன்னுடைய முதல் கவிதை நூலான 'நிலவுப்பூ' என்ற நூலை 1963 இல் வெளியிட்டார். 61 நூல்களை எழுதியுள்ள சிற்பியின் சமீபத்திய நூல் 'தொண்டில் கனிந்த தூயன்'.

தமிழரசு அலுவலகம்
செ.ம.தொ துறை
10 டிச 2009
சென்னை-600 002

எண். 106, அழகப்பா குடியிருப்பு,
வெங்கடேசா காலனி, பொள்ளாச்சி 642001,
தொலைபேசி: 04259-22467 செல்: 9443029736.



## ஆண்டாள் பிரியதர்ஷினி

கவிஞர்

இன்று தொடர்ந்து எழுதி வரும் பெண் கவிஞர்களில் குறிப்பிடத்தக்க கவிஞராகத் திகழ்பவர், கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை என இதுவரை 26 நூல்களை எழுதியிருக்கும் இவர் கவியரங்கங்களிலும் தன்னுடைய முத்திரையைச் சமீப காலமாகப் பதித்து வருகிறார். திரைப்படப் பாடல்கள் எழுதுவதிலும் ஆர்வமுள்ள இவர், சென்னைத் தொலைக்காட்சியின் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக வெகுவாக அறியப்பட்டவர். கவிஞர் வைரமுத்து அளிக்கின்ற 'கவிஞர் திருநாள் விருது' உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்றிருப்பவர்.

167/6, கோல்டன் ஜூப்ளி அடுக்ககம், பாடிக்குப்பம் சாலை,
அண்ணா நகர், சென்னை - 600 040.
தொலைபேசி-26157044, செல் 9444017044.



## முனைவர் அ. மறைமலையான்

எழுத்தாளர்

'பேரறிஞர் அண்ணாவின் பெருவாழ்வு' என்ற நூலை எழுதி, எழுத்துலகில் பிரபலமாக அறிமுகமான மறைமலையான், சிறுகதை, நெடுங்கதை, நாடகம், கவிதை என 65க்கும் அதிகமான நூல்களின் ஆசிரியர். 'போர்வாள்' உள்ளிட்ட பல்வேறு நாளிதழ்களில் பணியாற்றிய அனுபவம் கொண்ட இவர், தமிழக அரசின் 'பாவேந்தர் பாரதிதாசன் விருது' உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர்.

12/12, தாசுதீன்கான் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி: 044-28524653, செல்: 9940502403.



## முனைவர் பெரு மதியழகன்

இலக்கிய ஆய்வாளர்

கல்வியியல் நூல்கள், பாட நூல்கள், அறிவியல் நூல்கள் மற்றும் ஆராய்ச்சி நூல்கள், பயண நூல்கள், சுய முன்னேற்ற நூல்கள் என 60க்கும் மேற்பட்ட நூல்களையும் 250க்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதியுள்ள இவர், தமிழக அரசின் சிறந்த எழுத்தாளருக்கான விருதைப் பெற்றவர்.

தொழில் முனைவோர் துறை,
சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, வேப்பேரி, சென்னை - 600 007.
தொலைபேசி: 25381506 செல்: 9443728122



## முனைவர் சரளா இராஜகோபாலன்

இலக்கிய ஆய்வாளர்

1966 இல் எழுதத் தொடங்கிய இவர், இதுவரை 71 நூல்களை எழுதி சிறந்த நூலுக்கான தமிழக அரசின் பரிசு, பாவேந்தர் பாரதிதாசன் விருது, பாரதியார் விருது, ஔவையார் விருது, கம்பன் விருது என 25 விருதுகளுக்கு மேல் பெற்றுள்ள நாடறிந்த நல்ல பேச்சாளர். ஆய்வாளர். 34 ஆண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றி, பல்வேறு மாணவ மணிகளை உருவாக்கிய பெருமை பெற்றவர்.

4, ப.எண் 63, டாக்டர் ரங்கா சாலை, சென்னை - 600 018
தொலைபேசி: 24996611 செல்: 9841730702



## சரோஜ் நாராயணசாமி

செய்தி வாசிப்பாளர்

ஒலிபரப்புத் துறையில் 40 ஆண்டுகால அனுபவமும், ஒலிபரப்பு அமைச்சகத்தைச் சேர்ந்த திரைப்படப் பிரிவில் பல ஆவணப் படங்களைத் தமிழில் மொழிபெயர்த்த அனுபவமும் உள்ளவர்இவர். சாட்டிலைட் தொலைக்காட்சிகளும், எப்.எம்.ரேடியோக்களும் வருவதற்கு முன்பு அகில இந்திய வானொலி மட்டுமே நம்முடைய செய்தி ஊடகமாக இருந்த காலகட்டத்தில், தமிழர்களுக்கு மிகவும் அறிமுகமானது இவருடைய குரல். பப்ளிகேஷன் டிவிஷனுக்காக சில நூல்களை மொழி பெயர்த்திருக்கிறார்.

கல்பதரு ஸர்மோனி பிளாட் எண் 42, 4வது மாடி,
சியான் (கிழக்கு) எம்.டி.என்.எல்.ஆபீஸ் அருகில்,
சியான் (கிழக்கு) மும்பை - 400022
தொலைபேசி: 022-24095282 செல்: 9819147637.



## எஸ். மாசிலாமணி

பேச்சாளர்

1989இல் உடல் ஊனத்தை வெற்றி கொண்டதற்காக முன்னாள் இந்திய ஜனாதிபதி ஆர்.வெங்கட்ராமன் அவர்களிடம் விருது பெற்றவர். 'வீரமாமுனிவர் பேச்சாளர் பேரவை' என்ற அமைப்பை உருவாக்கி, ஏராளமான பேச்சாளர்களை உருவாக்கியப் பேச்சாளர். வளைகுடா நாடுகளின் தமிழ்ச் சங்கங்களிலெல்லாம் தமிழ் முழக்கம் செய்தவர்.

264 சைமன் நகர், நாகர்கோவில் 629 004
தொலைபேசி: 04652-223372 செல்: 9443607159



## டாக்டர் அவ்வை நடராஜன்

**தமிழறிஞர்**

சங்க இலக்கியங்களில் அறிமுகமான ஏழு அவ்வைகளுக்குப் பிறகு சமகாலத்தில் நமக்கு அறிமுகமான அவ்வைகள் இருவர். அதில் ஒருவர் அவ்வை துரைசாமி பிள்ளை. இன்னொருவர் அவரின் மைந்தரான டாக்டர் அவ்வை நடராஜன். கடந்த 40 ஆண்டுகளாகத் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் தன் செந்தமிழால், இசை போன்ற இனிய பேச்சால் எண்ணற்ற இதயங்களை ஈர்த்தவர். கவிப்பேரரசு வைரமுத்து போன்ற எத்தனையோ கவிஞர்களின் முன்னேற்றத்திற்கு பின்னே வேராக விளங்கியவர். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் போன்ற எண்ணற்றப் பதவிகளை தன் ஆளுமையால் அலங்கரித்த அவ்வை நடராஜனின் பணி இப்போதும் தொடர்கிறது, தமிழக அரசு நடத்த இருக்கின்ற உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டின் துணைத்தலைவராக.

தாரகை 82 அண்ணாநகர் (கிழக்கு)
ஜே-பிளாக் சென்னை - 600 102.
தொலைபேசி: 26269950 செல்: 9841019950



## வி.சா. குருசாமி தேசிகர்

**இயற்கலைப் பண்பாட்டுக் கலைஞர்**

தருமபுரம் ஆதினத்தைச் சேர்ந்த திருமுறை கலாநிதி ஆர்.வேலாயுத ஓதுவார், நீ.சோமசுந்தரம் பிள்ளை, எம்.ஆறுமுக தேசிகர், உ.வே.சாமிநாத அய்யரிடம் பயின்ற மகாவித்வான் பத்மஸ்ரீ ச.தண்டபாணி தேசிகர், பெரும்புலவர் பு.சி.புன்னை வனநாத முதலியார் ஆகியோரிடமும் தவத்திரு குன்றக்குடி அடிகளார், தவத்திரு தருமை ஆதினம். ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம் ஆகியோரிடமும் இலக்கண, இலக்கியப் பயிற்சிகளைப் பெற்றுத் தேறி, தருமை ஆதினப் பல்கலைக் கல்லூரியில் பேராசிரியராக 13 ஆண்டுகள் பணிபுரிந்து, பின் முதல்வராகி, சுமார் 800 தமிழ்ப் புலவர்களை உருவாக்கிய தகைமைக்கு உரியவர். 'திருமுறை சைவ மாமணி', 'திருவாசக உரைமணி' என 12 பட்டங்களுக்கு மேல் பெற்றுள்ள இவர் 500க்கும் மேற்பட்ட தமிழ்த் திருமணங்களை நடத்திவைத்த பெருமைக்குரியவர். தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற 275 தலங்களுக்குச் சென்று வரலாறுகளைத் திரட்டி, அத்தலத் திருப்பதிகங்களின் கருத்துரை ஆகியவற்றுடன் 275க்கும் மேற்பட்ட தேவார தல வரலாற்றுச் சிறப்பு நூல்களைப் படைத்துள்ளார். முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட தமிழகப் புலவர் குழுவின் உறுப்பினரும் ஆவார்.

15/8, மூன்றாவது குறுக்குத் தெரு,
லால்பகதூர் நகர், மயிலாடுதுறை - 609001
தொலைபேசி: 04364 222037
செல்: 9443388297.









## சீர்காழி ஆர்.ஜெயராமன்

இசை ஆசிரியர்

சங்கீத பூஷணம் சாத்தூர் ஏ.ஜி.சுப்பிரமணிய அய்யரிடம் இசை பயின்ற சீர்காழி ஆர்.ஜெயராமன் 1960 முதல் இசைப் பணியாற்றி வருபவர். இசையாசிரியராக கடந்த 30 ஆண்டுகளாக 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளை உருவாக்கியவர். காஞ்சி காமகோடி பீடத்தின் வாழ்நாள் சாதனையாளர் உட்பட 10க்கும் மேற்பட்ட விருதுகள் பெற்றுள்ள இவர், மயிலை தியாகராஜ சங்கீத வித்வத் சமாஜத்தில் தலைவராக சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலஷ்மி குடியிருப்பு
பு.எண்.4, வேலாயுத ராஜா தெரு, ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை - 600 028. செல்: 9380559431



## எம்.எஸ். முத்தப்ப பாகவதர்

இசை ஆசிரியர்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், ப.ஜீவானந்தம், பெருந்தலைவர் காமராஜர் ஆகியோர் முன்னிலையில் பாடி, பாராட்டப்பெற்ற இவர் பிறந்த ஆண்டு 1923. இப்போது அவருக்கு வயது 85. பன்னிரண்டு வயதில் இசைக்கலைஞராக அறிமுகமாகி, திருச்சியில் சமரச சன்மார்க்க சங்கீத வித்யா சாலையை நிறுவி, 'தேமதுர தமிழிசைக் கீர்த்தனைகள்' என்ற நூலை எழுதி வெளியிட்டு சுத்தானந்த பாரதியாரால் 'இசைமணி' என்ற பட்டத்தையும் பெற்றவர்.

146, மெயின் ரோடு, மறவன் குடியிருப்பு,
நாகர்கோவில் -629002.
தொலைபேசி: 04652-264899 செல்: 9443087061



## ஆண்டாங்கோவில் வீ.செ. சிவகுமார்

குரலிசைக் கலைஞர்

திருவாரூர் மாவட்டம் ஆண்டாங்கோவில் என்ற திருத்தலத்தில் பாரம்பரிய இசைக் குடும்பத்தில் பிறந்த நாதசுர இசை மேதை ஏ.வி.செல்வரத்தினத்தின் மகன் ஏ.வி.எஸ்.சிவகுமார், 5 வயது முதல் தன் தந்தையிடம் இசை பயின்று 15 வயது முதல் பாடிவரும் இவர் மலேசியா, சிங்கப்பூர் போன்ற பல்வேறு நாடுகளில் இசை நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார். தற்போது தமிழ்நாடு இசைக் கல்லூரியில் குரலிசை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார்.

20/43, டாக்டர் ரங்கா சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004
தொலைபேசி: 2466 0006 செல்: 9444959034.

## மகாராஜபுரம் எஸ். சீனிவாசன்

குரலிசைக் கலைஞர்



மகாராஜபுரம் எஸ்.சீனிவாசனுக்கு யாருக்குமில்லாத பெருமைகள் உண்டு. ஒன்று அவருடைய தாத்தா 'சங்கீத கலாநிதி' ஸ்ரீ மகாராஜபுரம் விசுவநாதய்யர் என்பது. மற்றொன்று அவர் மகாராஜபுரம் சந்தானத்தின் மகன். இப்படி குடும்பச் சூழலினாலேயே இசையால் ஆசீர்வதிக்கப்பட்ட இவர், தன் முதல் நிகழ்ச்சியை அரங்கேற்றியது 1986 இல். மியூசிக் அகாடெமி, தமிழிசைச் சங்கம் போன்ற பல அரங்குகளில் பாடிய இவர், சென்னைத் தொலைக்காட்சி மற்றும் வானொலியில் 'ஏ கிரேடு' கலைஞர். பல உலக நாடுகளின் இசை அரங்குகளில் பாடிய அனுபவம் பெற்றவர்.

ப.எண்.12, பு.எண்.8, சிவஞானம் ரோடு,
தி.நகர், சென்னை-600017. தொலைபேசி: 24336504

## வெ. தாயன்பன்

இசையமைப்பாளர்



9வது வயதிலேயே மதுரை மீனாட்சியம்மன் கோவிலில், தன் இசையை அரங்கேற்றிய தாயன்பன், சுயமாக சில மேற்கத்திய இசை நூல்களைப் படித்து, தன் இசை ஞானத்தை வளர்த்துக்கொண்டு 'பல்லவி' என்ற இசைக்குழுவின் மூலமாக 5000க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார். இவர் வானொலி, தொலைக்காட்சி, பிலிம் டிவிஷன் ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்ற இசை அமைப்பாளர். 'அன்று பெய்த மழையில்' உட்பட தமிழ், தெலுங்கு, கன்னடம், கொங்கணி என எட்டுத் திரைப்படங்களுக்கு பணியாற்றியவர். இவருடைய இசையமைப்பின்போது இவருடன் பணியாற்றிய கலைஞர்களில் குறிப்பிடத்தக்கவர் இன்று தமிழர்களுக்கு இரண்டு ஆஸ்கார் விருதுகளைப் பெற்றுத் தந்த ஏ.ஆர்.ரகுமான் ஆவார். 1975 மார்ச் 16இல் குமாரி விஜயாவை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் திருமணம் செய்துகொண்ட தாயன்பன், மகாகவி பாரதியார், புரட்சிக்கவி பாரதிதாசன், கவிஞர் கனிமொழி ஆகியோரின் கவிதைகளுக்கும் இசையமைத்திருக்கிறார். மெல்லிசை உலகில் புகழ்பெற்ற விஜயா தாயன்பன் இவருடைய துணைவியார் என்பது குறிப்பிடத்தக்கது.

ப.எண் 16, புஎண் 10, போயஸ் சாலை முதல் தெரு,
வன்னிய தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி: 24349748
செல்: 9444049748.

2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா



## எம்பார் எஸ்.கண்ணன்

வயலின் கலைஞர்



பாரதியார் பாடலைப் பாடித் தன் பள்ளிப் பருவத்தில் முதல் பரிசைப் பெற்ற எம்பார் கண்ணன், இசைச் சூழலில் பிறந்து வளர்ந்தவர். இவரின் அப்பா அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழிசைக் கல்லூரியில் இசை பயின்று சங்கீத பூஷணம் பட்டம் பெற்றவர். வயலின் கலைஞர்கள் சுப்பண்ணா, திவாகர், விட்டல் ராமமூர்த்தி, கன்னியாகுமரி ஆகியோரிடம் கர்நாடக வயலின் இசையையும், மேற்கத்திய வயலின் இசையையும் கற்றுத் தேறி, தற்போது கன்னியாகுமரி அவர்களோடு இணைந்து வயலின் வாசித்து வருகிறார். மிருதங்க வித்வான் காரைக்குடி மணியின் சுருதிலயா குழுவிலும் பங்கேற்கும் இவர், இசைஞானி இளையராஜா, ஏ.ஆர்.ரகுமான், தேவா, வித்யாசாகர், யுவன்சங்கர் ராஜா ஆகியோரின் திரைப்படங்களிலும் பங்களித்து வருகிறார். நம்மாழ்வாரின் 11 பாசுரங்களுக்கு இசை அமைத்துள்ளார். கவிஞர் கனிமொழி ஒருங்கிணைக்கும் சென்னை சங்கமத்தில் தொடர்ந்து பங்கேற்கும் 2000க்கும் மேற்பட்ட கலைஞர்களில் இவரும் ஒருவர்.

17/25, சன் மற்றும் சேன்டு அபார்ட்மென்ட்ஸ்
4வது,சீவார்டு ரோடு, வால்மீகி நகர்,
திருவான்மியூர், சென்னை 600 041,
தொலைபேசி: 24405820, செல்: 9840382005.

## வழுவூர் வி.ரவி

மிருதங்கக் கலைஞர்



வழுவூருக்கு எத்தனையோ சிறப்புகள் உண்டு. அட்ட வீரட்டான சிவஸ்தலங்களுள் ஒன்று. கலைக்கும் நாட்டியத்திற்கும், சைவத்திற்கும் சிறப்பு பெற்றது. பத்மஸ்ரீ வழுவூர் ராமையா பிள்ளை, வயலின் மேதை பிடில் கோவிந்தராஜ பிள்ளை, சிதம்பரம் ஜெயராமன் பிள்ளை, தவில் மேதை முத்துவீர் பிள்ளை போன்ற பல கலை மேதைகளின் விளைநிலம்தான் வழுவூர். இந்த ஊரின் பெருமையை தன் பேரோடு சேர்த்து, பெருமை கொள்பவர் ரவி. கலைமாமணி வி.பி.ராஜேஸ்வரி, ரவியின் அத்தை. கலைமாமணி வி.பி.ராமதாஸ் இவரின் சித்தப்பா. இப்படி இசைச் சூழலில் வளர்ந்ததால் இசை மீது ஆர்வம் கொண்டு, சென்னை இசைக்கல்லூரியில் மிருதங்கம் பயின்று 'வாத்தியக் கலைமணி' பட்டத்தைப் பெற்றவர். மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் கோயிலில் அறங்காவல் குழு உறுப்பினராகவும் இருந்த அனுபவம் பெற்ற வழுவூர் ரவி, பாலமுரளிகிருஷ்ணா போன்ற பல கலைஞர்களின் நிகழ்ச்சியில் மிருதங்கம் வாசித்து, முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாமிடமிருந்து பரிசு பெற்றுள்ளார். கடந்த 17ஆண்டுகளாக 'அபூர்வ ராகம்' என்ற இதழை நடத்தி வரும் ரவி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினராவார். சிங்கப்பூர், மலேசியா. பிரான்ஸ். அமெரிக்கா போன்ற பல நாடுகளுக்கு இசை நிகழ்ச்சிகளுக்காக இவர் பயணம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜி-5, சிவராமன் தெரு, மந்தைவெளி, சென்னை-600028
தொலைபேசி: 24953616 செல்: 9444019728



## டிரம்ஸ் ஏ. சிவமணி

**டிரம்ஸ் கலைஞர்**

உலகப்புகழ் பெற்ற ஒரு தமிழ் இசைக்கலைஞர். இசைஞானி இளையராஜா, ஏ.ஆர்.ரகுமான், எம்.எஸ்.விசுவநாதன், எஸ்.பி.பாலசுப்ரமணியம், ஹரிகரன் போன்ற இந்தியாவின் முன்னணி இசையமைப்பாளர்களோடு இணைந்துப் பணியாற்றி, எண்ணற்ற இசைக் கோலங்களை வழங்கியுள்ள சிவமணி, உலகம் முழுவதும் தன் இசையால் பயணித்து வியாபித்திருப்பவர். சென்னை சங்கமத்தின்போது சிவமணி வாசித்த இசையில் நெகிழ்ந்த முதல்வர் கலைஞர், இவரை வானளாவப் பாராட்டி மகிழ்ந்தார். நெல்சன் மண்டேலா முதல் அப்துல் கலாம் வரை இவரைக் கொண்டாடுகிறார்கள்.

2004, ஏ விங். ஒபேக்ராய் கார்டன்ஸ்,
கண்டிவளி (கிழக்கு) தாகூர் கிராமம், மும்பை -400 101.
தொலைபேசி: 022-28871119 செல்: 09820292443.



## சுகிசிவம்

**சமய சொற்பொழிவாளர்**

சொல்லின் செல்வர், செந்தமிழ்த் தென்றல், சொல்வேந்தர் என்றெல்லாம் கொண்டாடப்படும் சுகிசிவம் நாடறிந்த நல்ல தமிழ்ப் பேச்சாளர். சைவ சமயம் பற்றிய நூல்களோடு 'வெற்றி நிச்சயம்', 'சிந்தனை முத்துக்கள்', 'படிக்கவா ஜெயிக்கவா', 'உணவே உயிரே' என ஏராளமான தன்னம்பிக்கையூட்டுகின்ற வாழ்வியல் நூல்களையும் எழுதியுள்ள இவரின் பல படைப்புகள் குறுந்தகடுகளாகவும் ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்றவை. இலக்கிய மற்றும் சமய சொற்பொழிவுக்காகவே உலகம் முழுவதையும் சுற்றிவந்த இவர் ஒரு வழக்கறிஞரும்கூட.

131/9, ஜனனி பிளாட்ஸ், டி.டி.கே.சாலை,
ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி: 24984177 செல்: 9842284984.



## டாக்டர் எஸ்.சதாசிவன்

**இறையருட் பாடகர்**

சிறு வயதிலிருந்தே ஆன்மீகத்தில் பற்றுகொண்டு சைவ சித்தாந்த கழகத்தின் வகுப்புகளில் கலந்துகொண்டு, தேவார, திருவாசகப் பாடல்களைப் பாடியதோடு, 'சைவ நெறி திரட்டு' என்ற நூலையும் வெளியிட்டவர். 1500 நிகழ்ச்சிகளுக்கு மேலாக தேவார, திருவாசகங்கள் இசை நிகழ்வுகளை நிகழ்த்தியவர்.

74-ஏ, 'பாரத் இல்லம்', இருளப்பபுரம்,
நாகர்கோவில் - 629002,
கன்னியாகுமரி மாவட்டம்,
தொலைபேசி: 04652-223947
செல்: 9442623947.





## வீரமணி ராஜு

இறையருட் பாடகர்

தன் ஏழு வயதில் பாடத் தொடங்கிய இவரது முதல் இசை நிகழ்ச்சி மயிலை நவசக்தி விநாயகர் கோவிலில் 1971 ஆம் ஆண்டு நடைபெற்றது. இதுவரை 5000க்கும் மேற்பட்ட இசைநிகழ்ச்சிகளை தமிழகம் மட்டுமின்றி சிங்கப்பூர், மலேசியா, மொரீஷியஸ் போன்ற நாடுகளில் நிகழ்த்தியுள்ளார். சுமார் 100 ஒலி நாடாக்களைப் பாடி வெளியிட்டுள்ளார். உலகப் பொதுமறையான திருக்குறள் முழுவதையும் இசை வடிவில் பாடியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

பி3, கிரஹலட்சுமி அபார்ட்மெண்ட்ஸ்,
40 கம்பர் தெரு, அபித் காலனி, ஆலந்தூர் ரோடு, சைதாப்பேட்டை,
சென்னை - 23811333. செல்: 9841068548.



## திருமெய்ஞானம் டி.வி. ராஜகோபால் பிள்ளை

நாதசுரக் கலைஞர்

17 வயது முதல் நாதசுர வித்வானாக விளங்கிவரும் டி.வி.ராஜகோபால் பிள்ளை, தொடர்ந்து 45 வருடங்களாக இசைத்துறையில் தன் பயணத்தை நடத்தி வருபவர். குளிக்கரை கே.எஸ்.பிச்சையப்பா, திருமெய்ஞானம் டி.பி.நடராஜ சுந்தரம், திருவிடைமருதூர் பி.எஸ்.வி.ராஜா ஆகிய பிரபலமான நாதசுர வித்வான்களோடு இணை நாதசுர வித்வானாக இசைப் பணியாற்றியுள்ள இவர், தமிழகம் மட்டுமல்லாது ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களிலும் நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். தமிழறிஞர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களால் 'நாதசுரப் புலவர்' என்றும், முன்னாள் மதுரை மடாதிபதியால் 'ஞானகான பானு' என்றும் பாராட்டப்பெற்றவர்.

மேல வீதி, சிறுபுலியூர் அஞ்சல், நன்னிலம் வட்டம்,
திருவாரூர் மாவட்டம்- 609 403.
தொலைபேசி: 04366-233385 செல்: 9942763777.



## எஸ்.வி. மீனாட்சிசுந்தரம்

நாதசுரக் கலைஞர்

12வது வயது முதல் உக்கடை சேது பிள்ளையிடம் இசைப்பயிற்சி பெற்று, பிறகு ஓங்கோல் ரங்கையாவிடமும் விரிவான இசைப்பயிற்சி பெற்று, அவருடன் தொடர்ந்து வாசித்து, பிறகு புகழ்பெற்ற நாதசுர வித்வான் ஷேக் சின்ன மௌலானாவுடனும் இணைந்து பல கச்சேரிகளில் வாசித்து, திருச்சி அகில இந்திய வானொலியின் 'ஏ கிரேடு' என்ற அங்கீகாரத்தையும் பெற்றவர். திருச்சி கலை பண்பாட்டுத்துறை நடத்திய விழாவில் 'கலைப்பேரொளி' பட்டம் பெற்றவர்.

7, அகிலாண்டேஸ்வரி நகர், லால்குடி-621601,
திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொலைபேசி: 0431-2542149



## தலைச்சங்காடு டி.எம்.ராமநாதன் — தவில் கலைஞர்

கலைமாமணி தவில் திருவிழந்தூர் ஏ.கே.வேணுகோபால் பிள்ளையின் மாணவரான இவர், நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், இ.கே.பிச்சைக்கண்ணு பிள்ளை, திருவெண்காடு டி.பி.சுப்பிரமணிய பிள்ளை, வண்டிக்காரத் தெரு மணி, மாமுண்டியா பிள்ளை, திருச்சேறை டி.வி.எஸ்.சிவசுப்ரமணியம், மதுரை எம்.பி.என்.சேதுராமன்-பொன்னுசாமி சகோதரர்கள், இஞ்சிக்குடி இ.எம்.சுப்ரமணியம், திருப்பாம்புரம் சகோதரர்கள், ஏ.கே.சி.நடராஜன் ஆகிய முன்னணி நாதசுரக் கலைஞர்களுக்கு தவில் வாசித்துள்ளார். சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்றுவந்துள்ள இவர், இங்கிலாந்து நாட்டின் எலிசபத் ராணியாலும் பாராட்டப் பெற்றவர்.

தலைச்சங்காடு அஞ்சல், தரங்கம்பாடி வட்டம்
நாகப்பட்டினம் மாவட்டம் 609 107
தொலைபேசி: 04364-280462 செல்: 9444247653.



## சேந்தமங்கலம் ஆ.மணிகண்டன் — தவில் கலைஞர்

நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் குழுவில் தொடர்ந்து பத்து ஆண்டுகள் தவில் வாசித்துள்ள இவர், ஷேக் சின்ன மௌலானா, மதுரை எம்.பி..என்.சேதுராமன், ஏ.கே.சி.நடராஜன், கத்ரி கோபால்நாத், போன்ற கலைஞர்களோடு இணைந்து சிறப்புத் தவில் வாசித்தவர். வலங்கைமான் சண்முகசுந்தரம், வலையபட்டி ஏ.ஆர்.சுப்ரமணியம், அரித்துவாரமங்கலம் ஏ.கே.பழனிவேல், திருவாளப்புத்தூர் டி.ஏ.கலியமூர்த்தி ஆகியோருடன் சிறப்புத் தவில் வாசித்த அனுபவமும் பெற்றவர். நாமகிரிப்பேட்டை கிருஷ்ணனுடனும், வலையபட்டி சுப்ரமணியத்துடனும் இணைந்து சில ஒலி நாடாக்களை வழங்கியிருக்கிறார். தற்போது தமிழக அரசின் சேலம் மாவட்ட அரசு இசைப்பள்ளியில் தவில் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.

34, முதலியார் தெரு, சேந்தமங்கலம்-637409, நாமக்கல் மாவட்டம்,
தொலைபேசி: 04286-271159 செல்: 9443539772.

## ஷைலஜா

பரதநாட்டிய ஆசிரியர்



பரதநாட்டிய ஆசிரியை கே.ஜே.சரசாவிடம் 18 ஆண்டு கால பரதநாட்டியப் பயிற்சியும், வேம்பட்டி சின்ன சத்யத்திடம் 15 ஆண்டுகால குச்சுப்புடி நடன பயிற்சியும் பெற்றுள்ள ஷைலஜா, இன்று பரதநாட்டியத் துறையில் மிகவும் புகழ்பெற்ற குறிப்பிடத் தகுந்த ஒரு கலைஞராவார். நாட்டியத்திற்காக ஜெர்மனி, அமெரிக்கா, கனடா, ஜப்பான் என்று உலகம் முழுவதும் சுற்றி வந்திருக்கும் இவர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் எழுதிய புகழ்பெற்ற கவிதையான 'புறநானூற்றுத் தாய்' என்ற நெடுங்கவிதையையும், 'பச்சைக்கிளி' என்ற அழகிய கவிதையையும் நாட்டிய நாடகமாக வழங்கி ரசிகர்களின் மனதைக் கொள்ளை கொண்டவர். 'அபிநய அரசி', 'நாட்டியப் பைரவி', 'சிறந்த நாட்டியக் கலைஞருக்கான விருது' என சுமார் 20க்கும் மேற்பட்ட பட்டங்களையும், மியூசிக் அகாடெமி, கிருஷ்ணகான சபா போன்ற முக்கியமான கலை நிறுவனங்களின் மூலம் பெற்றவர்.

புஎண்.7, ப.எண்.3, ஸ்ரீராம் காலனி, ஆழ்வார்பேட்டை, சென்னை-600 018.
தொலைபேசி: 42110994 செல்: 9962052882.

## சங்கீதா கபிலன்-கயல்விழி கபிலன்

பரதநாட்டிய சகோதரிகள்





ராகினி-பத்மினி சகோதரிகளைப் போல நாட்டியத் துறைக்கு வந்திருக்கும் சங்கீதா-கயல்விழி சகோதரிகள், கிருஷ்ணகுமாரி நரேந்திரனின் மாணவிகள். சிதம்பரம் நாட்டியாஞ்சலியிலும், திருவையாறு நாட்டிய விழாவிலும் பங்கேற்ற அனுபவம் உள்ள இவர்கள், 'கருணைக்கடல்' 'கந்தவேல்', 'வெங்கடாத்ரி வைபவம்', 'ஸ்ரீ மகா கணபதி', 'சீதா கல்யாணம்' போன்ற பல்வேறு நாட்டிய நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றிருக்கிறார்கள். 2003இல், கொழும்புவில் நடைபெற்ற இந்து மாநாட்டிலும் தங்களுடைய நிகழ்ச்சியை நடத்தியதோடு, அமெரிக்காவிலும் தங்களது பரதநாட்டிய நிகழ்ச்சிளை நிகழ்த்தி, 'நிருத்யகலா சேவ நிருதா' போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ள இவர்களைக் கலையுலகம் 'கபிலன் சகோதரிகள்' என்றே அழைக்கிறது.

13/19, லெய்த் கேஸ்டல் தெற்கு தெரு, சாந்தோம்,
சென்னை 600 028.
தொலைபேசி: 2461 1706
செல்: 9840788848



## ஸ்வேதா கோபாலன்

பரதநாட்டியக் கலைஞர்

நாட்டிய உலகின் ஜாம்பவான் வழுவூர் சாம்ராஜிடம் முறைப்படி பரதம் பயின்று இந்தியாவிலும், சர்வதேச அரங்குகளிலும் பல நாட்டிய இசை நிகழ்ச்சிகளை நிகழ்த்தியதோடு, முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாமின் முன்னிலையிலும், பரதக் கலையை நிகழ்த்தி பாராட்டப்பெற்றவர். மிகச் சின்ன வயதிலேயே மத்திய அரசின் கலாச்சார அமைச்சகத்தின் இளங்கலைஞர் உதவித் தொகை பெற்ற பெருமைக்குரியவர். வழுவூர், பந்தநல்லூர் பாணியினை தன் பாணியாகக் கொண்ட இவருடைய குரு மாலதி டாம்னிக். சமீபத்தில் இவர் நடத்திய நாட்டிய நிகழ்ச்சி 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி'.

டி-83/பி, 29வது குறுக்குத்தெரு, கலாஷேத்ரா காலனி, பெசன்ட் நகர்,
சென்னை - 600 090. தொலைபேசி: 24917677 செல்: 9884066886



## ஐஸ்வர்யா ரஜினிகாந்த் தனுஷ்

பரதநாட்டியக் கலைஞர்

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் மகள் என்ற அடையாளத்தோடு சொல்லப்படுகிற ஐஸ்வர்யா, ரஜினிகாந்த் அவர்களின் மகள் என்ற அடையாளத்தையும் மீறி, பரதநாட்டிய ரசிகர்களிடம் ஒரு தேர்ந்த பரதநாட்டியக் கலைஞர் என்ற பெயரைப் பெற்றிருப்பவர். மீனாட்சி சித்தரஞ்சனிடம் கடந்த 13 வருடங்களாக பரதக் கலையைப் பயின்று, அதனைப் பந்தநல்லூர் பாணியில் அரங்கேற்றி வருபவர். சிதம்பரம் நாட்டியாஞ்சலி விழா மட்டுமல்லாது, சென்னையில் டிசம்பரில் நடக்கும் இசைவிழாக் காலங்களில், தொடர்ந்து பல்வேறு அரங்குகளில் நிகழ்ச்சிகளை வழங்கி வருபவர். மதுரை மற்றும் திருச்சி இயல் இசை நாடக மன்றம் மற்றும் பாரத் கலாச்சார் நாட்டிய நிகழ்ச்சிகளிலும் தொடர்ந்து பங்கேற்று வருபவர்.

18, ராகவ வீரா அவென்யூ, போயஸ் கார்டன், சென்னை - 600 086.
தொலைபேசி: 42101982 செல்: 9940255555.



## ஜாகீர் உசேன்

பரதநாட்டியக் கலைஞர்

சித்ரா விஸ்வேஸ்வரனிடமும், கிருஷ்ணவேணி இலட்சுமணனிடமும் பரதக் கலையைக் கற்று கொண்ட இவர், பிறப்பால் இஸ்லாமியராக இருந்தாலும். மகாபாரதம், இராமாயணம், பாஞ்சாலி சபதம் போன்ற இதிகாசங்களில் ஆழ்ந்து சில நாட்டிய நாடகங்களைத் தயாரித்தவர். பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளில் பரதநாட்டியத்தை நிகழ்த்தியுள்ள இவர் உருவாக்கிய நாட்டியப் படைப்புகளில் சில 'கடையேழு வள்ளல்கள்', 'சீதாயாணம்', இசைஞானி இளையராஜா கர்நாடக இசைப்பாடல்களுக்காக அமைந்த நடன அமைப்பான ராஜ லகரி.

10, புஷ்ப நகர், முதல் தெரு,
நுங்கம்பாக்கம்,
சென்னை - 600 034,
செல்: 9884097473.



## வசந்தா வைகுந்த்

நாட்டிய நாடகக் கலைஞர்



நாட்டியம் எனது உயிர். இந்தக் கலையை உலகம் முழுவதும் பரப்புவதற்காக எனது வாழ்க்கையை அர்ப்பணித்துவிட்டேன். ஒவ்வொரு ஆண்டும் இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் அமெரிக்க நாடுகளில் எனது நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறேன் என்று கூறும் வசந்தா வைகுந்த்துக்கு பூர்வீகம் திருநெல்வேலி மாவட்டம். ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி கலாலயம் குப்பையா பிள்ளை, வழுவூர் ராமையா பிள்ளை, சித்ரா விஸ்வேஸ்வரன் ஆகியோரிடம் நாட்டியம் பயின்று இதுவரை 100க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை நிகழ்த்தியுள்ளார். சிவசக்தி என்ற நாட்டியப் பள்ளியையும் நடத்தி வருபவர், 'நாட்டியத்தில் ஆன்மீகம்' என்ற நூலின் ஆசிரியரான இவருக்கு அமெரிக்க நாட்டில் உள்ள 'டுப்ட்' பல்கலைக்கழகம் 'கலாவிதூஷி' என்ற பட்டத்தை வழங்கியுள்ளது. 'கங்கையின் நாகரீகம்', 'சக்தி எங்கே', 'பிரபஞ்சத்தின் இசைவு' போன்றவை இவருடைய நாட்டியத் தயாரிப்புகளில் சில.

க/பெ.வைகுந்த், சாத் பவன் குரூப்,
பி.ஓ.பி.3168, ருவீ-112,
சுல்தானேட் ஆப் ஓமன்.
செல்: 0096899316885



## முனைவர் மு.ராமசாமி
நாடக ஆசிரியர்

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நாடகத்துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வரும் இவர், நவீன நாடகத்திற்காக 'நிஜ நாடக இயக்கம்' என்ற அமைப்பை மதுரையில் உருவாக்கி, தீவிரமாக உழைத்து வருபவர். 'ஸ்பார்ட்டகஸ்', 'கலகக்காரர் பெரியார்', 'துக்கிர அவலம்', 'கலிலியோ' போன்றவை இவருடைய இயக்கத்திலும் தயாரிப்பிலும் உருவான நாடகங்களில் சில. கலைஞரின் 'தென்பாண்டிச் சிங்கம்' என்ற வரலாற்றுத் தொடரில் 'வல்லத்தரையன்' என்ற முக்கியமான பாத்திரத்தை ஏற்று நடித்து, அனைவரின் கவனத்தையும் ஈர்த்தவர். இந்தத் தொலைக்காட்சித் தொடரின் படப்பிடிப்பின்போது நடிகர் நாசருடன் ஏற்பட்ட நட்பினால் 'தேவதை', 'மாயன்' போன்ற திரைப்படங்களில் நடித்து, தொடர்ந்து 'கன்னத்தில் முத்தமிட்டால்', 'பருத்திவீரன்' போன்ற பல்வேறு திரைப்படங்களிலும் 'மதுரை' என்ற தொலைக்காட்சித் தொடரிலும் நடித்து நன்கு பிரபலமானவர்.
1978 முதல் நாடக ஆய்விலும் ஈடுபட்டு வரும் இவர், இருபதுக்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர்.'பாபாசி வழங்கும் 'கலைஞர் கருணாநிதி பொற்கிழி விருது' உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள இவர், ஏராளமான பயிற்சிப் பட்டறைகளிலும் பங்கேற்றவர்.

நாடகத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை - 613005.
செல்: 9443044124



## கூத்துப்பட்டறை ந. முத்துசாமி
நாடகத் தயாரிப்பாளர்

செம்பனார்கோவிலுக்குப் போவது எப்படி? என்ற மிகச் சிறந்த சிறுகதையை எழுதி 'நீர்மை' என்ற சிறுகதை தொகுப்பின் மூலம் இலக்கிய உலகத்திலும், நவீன நாடக உலகத்திலும் பேசப்படுகின்ற ஒரு பெயர் ந.முத்துசாமி. இன்றைய நவீன இலக்கியவாதிகளால் கொண்டாடப்படும் ந.முத்துசாமி, தன் துவக்கக் காலத்தில் அறிஞர் அண்ணாவின் எழுத்துக்களாலும், தலைவர் கலைஞரின் வசனங்களாலும் ஈர்க்கப்பட்டதாக ஒரு நேர்காணலில் கூறியிருக்கிறார். சிறுகதை எழுத்தாளராகத் தன் இயக்கத்தைத் துவங்கிய ந.முத்துசாமி பின்னர், தன்னை முழுக்க முழுக்க நாடகத்திற்காகவும், தெருக்கூத்து போன்ற பாரம்பரியக் கலைவடிவங்களின் திசையிலும் பயணப்படத் துவங்கினார். நவீன நாடகத்திற்காகக் 'கூத்துப்பட்டறை' என்ற ஒரு அமைப்பை உருவாக்கி, ஏராளமான கலைஞர்களை உருவாக்கியுள்ளார். 'கூத்துப்பட்டறை' நவீன நாடகத் தளத்திலும் வலுவான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. ந.முத்துசாமிக்கு 1999-2000க்கான 'சங்கீத நாடக அகாதெமி' விருதும், 2005இல் தமிழக அரசின் சிறுகதைகளுக்கான விருதும், 2007இல் நாடகத்திற்கான 'பொதிகை' விருதும் 2009இல் கலைஞரின் பொற்கிழி விருதும் பெற்றுள்ளார்.

1/70,வைகாசி தெரு, சின்மயா நகர்,
ஸ்டேஜ்-2, விருகம்பாக்கம்,
சென்னை - 600 092.
தொலைபேசி: 2479 6940.

2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா



## வி.ஓய்.தாஸ்

**நாடக அரங்க அமைப்பாளர்**

1948 லிருந்து நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை, என்.எஸ்.கே.நாடக மன்றம், சிவாஜி நாடக மன்றம், டி.கே.எஸ்.நாடகக் குழு போன்ற பல்வேறு நாடகக் குழுக்களின் அரங்க அமைப்பாளராகத் தொடர்ந்து 59 ஆண்டுகளாகப் பணியாற்றி வந்தவர். நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் ‘சிவாஜி நாடக மன்றத்தில்’ 17 ஆண்டுகள் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

1, முதல் குறுக்குத் தெரு,
காமராஜ் நகர்,
பெருங்குடி, சென்னை - 600 096.
செல்: 9283737225.



## கே.என்.ஆர்.ராஜாமணி

**நாடக நடிகை**

கேசவன் ருக்மணி தம்பதியருக்கு மகளாகப் பிறந்த இவர், 1947ஆம் வருடம் ‘ஸ்ரீதேவி நாடக சபா’வில் சேர்ந்து நடிக்க ஆரம்பித்தார். ஸ்ரீதேவி நாடக சபாவின் தலைவர் கே.என்.ரத்தினம் இவரது கணவர். இந்த நாடக சபாவில்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் ‘மந்திரிகுமாரி’, ‘பராசக்தி’, ‘ஒரே முத்தம்’ போன்ற புகழ்பெற்ற நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. இந்த நாடகங்களில் எல்லாம் முக்கிய வேடங்களில் இவர் நடித்திருக்கிறார். சுமார் 50 ஆண்டுகால நாடகமேடை அனுபவமுள்ள இவர் மதுரை, திருச்சி வானொலி நாடகங்களிலும் நடித்து வருகிறார். தென்னிந்திய நடிகர் சங்கம் இவருக்கு ‘கலைச்செல்வம்’ விருது வழங்கி கௌரவித்துள்ளது.

ஸ்ரீதேவி நாடக சபா,
82-டி, பாரதியார் 1வது தெரு, திருநகர்,
மதுரை - 625006.
செல்: 9842539135.

## அபிராமி ராமநாதன்

திரைப்படத் தயாரிப்பாளர்



சென்னையில் உள்ள பிரபலமான அபிராமி திரையரங்குகளின் உரிமையாளரான அபிராமி ராமநாதன், தமிழக அரசின் 'ராஜா சாண்டோ விருது' உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்றவர். தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபையின் தலைவராகவும், உப தலைவராகவும், கௌரவ காரியதரிசியாகவும் இருந்தவர். திரைப்படங்களைத் தயாரிப்பதோடு, சின்னத்திரையிலும் கவனம் செலுத்தி, சில தொடர்களைத் தயாரித்து வருகிறார். 40 ஆண்டுகளுக்கும் மேலாக திரைப்பட விநியோகஸ்தராகவும் வெற்றிகரமாக விளங்கி வருகின்ற இவருக்குப் பொதுநலத் தொண்டிலும் மிகுந்த ஈடுபாடு உண்டு. ரோட்டரி கிளப்பில் இவர் கவர்னராகப் பதவி வகித்த காலத்தில் அரசுப் பள்ளிகளில் 200 வகுப்பறைகளும், பொது மருத்துவமனையில் 150 வார்டுகளும் புதுப்பிக்கப்பட்டன.

152, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கெல்லீஸ், சென்னை - 600 010.
தொலைபேசி: 2642 3377

## சுந்தர் சி.

திரைப்பட நடிகர்



1989 இல் இயக்குநர் மணிவண்ணனிடம் உதவி இயக்குநராக இணைந்து திரைப்படக் கலையைக் கற்றுக்கொண்ட இவர், 1995இல் 'முறைமாமன்' என்ற படத்தை இயக்கினார். 'உள்ளத்தை அள்ளித்தா', 'அருணாசலம்', 'அன்பே சிவம்' உட்பட 25 படங்களை இயக்கியுள்ளார், 'தலைநகரம்' என்ற படத்தின் மூலம் கதாநாயகனாகி, தற்போது பத்துக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்து தன் முத்திரையைப் பதித்து வருபவர்.

2, லீத் கேசல் தெற்குத் தெரு,
பட்டினபாக்கம், சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை - 600 028.
தொலைபேசி: 24959445
செல்: 9841411449

## பரத்

திரைப்பட நடிகர்



'பாய்ஸ்' திரைப்படத்தின் மூலம் அறிமுகமான பரத், இதுவரை 'காதல்', 'செல்லமே', 'பட்டியல்', 'வெயில்' என 20க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்திருக்கிறார்.

19/44, ஷெர்புதீன் தெரு,
சூளைமேடு,
சென்னை - 600 034,
செல்: 9841066456.





## மீரா ஜாஸ்மின்

திரைப்பட நடிகை

'சூத்ரதாரன்' என்ற மலையாளப் படத்தில் இயக்குநர் லோகிதா தாசால் அறிமுகப்படுத்தப்பட்ட மீரா ஜாஸ்மின் தமிழில் 'சண்டக்கோழி', 'ரன்' போன்ற படங்களால் நன்கு அறிமுகமானவர். 'ஒரே கடல்', 'ராஜ தந்திரம்' உட்பட 25க்கும் மேற்பட்ட தெலுங்கு, தமிழ், மலையாளப் படங்களில் நடித்துள்ளவர். 2004 சிறந்த நடிகைக்கான தேசிய விருது மற்றும் கேரள மாநிலத்தின் சிறந்த நடிகைக்கான விருது உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள மிகச்சிறந்த நடிகை. சமீபத்தில் இவர் நடித்துக்கொண்டிருக்கும் குறிப்பிடத்தகுந்த திரைப்படம் கலைஞரின் 'பெண் சிங்கம்'.

மே/பா.எஸ்.ஜெயராமன், மேலாளர், 4/24,விநாயகம் தெரு,
மந்தைவெளி, சென்னை - 600 028. செல்: 9940045944.



## நயன்தாரா

திரைப்பட நடிகை

டயனா மரியன் குரியன் என்ற பெயருக்குரிய நயன்தாரா 1984ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெங்களூருவில் பிறந்தார். குஜராத், டில்லி, கேரளா போன்ற மாநிலங்களில் கல்வி பயின்று 2003ஆம் ஆண்டு 'மனசினக்கரே' என்ற மலையாளத் திரைப்படத்தின் மூலம் திரையுலகில் பிரவேசித்து, 'ஐயா' என்ற திரைப்படத்தின் மூலம் தமிழில் அறிமுகமாகி, தற்போது தமிழ், தெலுங்கு, மலையாளம் என 25க்கும் மேற்பட்ட படங்களில் நடித்து ரசிகர்களை தன்வயப்படுத்தியவர்.

மே/பா.அஜீத், மேலாளர், டி-16, லேக்-வியூ அபார்ட்மென்ட்ஸ்.
அண்ணா ரோடு, பெருங்குடி, சென்னை - 600 096,
தொலைபேசி: 64554243 செல்: 944400096.



## அசின்

திரைப்பட நடிகை

அசின் தொட்டும் கால் என்ற பெயருக்குரிய அசின் அக்டோர் 26, 1985ஆம் ஆண்டு கேரளாவில் உள்ள கொச்சியில் பிறந்தவர். சத்தியன் அத்திக்காடு இயக்கிய 'நரேந்திரன் மக்கான்' என்ற மலையாளப் படத்தில் பிரவேசித்து, பின் தெலுங்குப் படங்களில் நடித்து அதற்குப் பின் 'எம்.குமரன் *S/O* மகாலட்சுமி' என்ற தமிழ்த் திரைப்படத்தில் அறிமுகமாகி, 'கஜினி' என்ற திரைப்படத்தின் மூலமாகப் பெரும்புகழ் பெற்று தற்போது இந்தி திரைப்பட உலகிலும், ஹாலிவுட் படங்களிலும் நடித்து வருபவர். 2003ஆம் ஆண்டுக்கான 'பிலிம்பேர்' விருதையும், 'சந்தோஷம்' விருதையும் பெற்றவர்.

2001, புளூ மௌன்டெய்ன், சாஸ்திரி நகர், லோகந்த்வாலா,
அந்தேரி மேற்கு, மும்பை - 53.
தொலைபேசி: 022-40166566 செல்: 09769943983



## மா. பசுபதி

திரைப்பட குணச்சித்திர நடிகர்

கூத்துப்பட்டறையில் பயிற்சி பெற்ற பசுபதி முதன்முதலாக காமிராவின் முன்பு நின்று நடித்தது கலைஞர் அவர்களின் 'தென்பாண்டிச் சிங்கம்' என்ற தொலைக்காட்சித் தொடருக்காக. தொடர்ந்து கமல் அவர்களால் 'மருதநாயகத்தில்' சிறப்பாக அறிமுகப்படுத்தப்பட்ட பசுபதி, 'விருமாண்டி', 'மும்பை எக்ஸ்பிரஸ்', 'கன்னத்தில் முத்தமிட்டால்' என 20க்கும் மேற்பட்ட தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாளத் திரைப்படங்களில் நடித்துள்ளார். 'ஈ' படத்தில் நடித்ததற்காக தமிழக அரசின் சிறந்த வில்லன் நடிகருக்கான விருதையும் 'பிலிம்பேர்' விருதையும், 'சிகா' விருதையும் பெற்றுள்ளார்.

'ஜெமினிஸ் ராகுல்' அபார்ட்மெண்ட்ஸ்.
102, ஜி-2, ரங்கராஜபுரம், 2வது தெரு, கார்ப்பரேஷன் காலனி,
சென்னை - 600 024. செல்: 9841091827



## ஷோபனா

திரைப்பட குணச்சித்திர நடிகை

மிகச் சிறந்த நடிகையாகவும். பரதநாட்டியக் கலைஞராகவும் அறியப்பட்டுள்ள நடிகை ஷோபனா, நாட்டியப் பேரொளி பத்மினியின் சகோதரரின் புதல்வி. 'எனக்குள் ஒருவன்' திரைப்படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகில் அறிமுகமாகி, ஏராளமான தமிழ், மலையாளப் படங்களில் நடித்துப் புகழ்பெற்றவர். 'பத்மஸ்ரீ' விருது உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்றிருக்கும் ஷோபனா, 'மணிச்சித்திரத்தாழ்' என்ற மலையாளத் திரைப்படத்திற்காக அகில இந்திய சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றவர். அமிதாப்பச்சன், ஏ.ஆர்.ரகுமான், மைக்கேல் ஜாக்சன் போன்ற முன்னணிக் கலைஞர்களோடு இணைந்து நாட்டிய நிகழ்ச்சிகளை நிகழ்த்தியுள்ளார். இவருடைய நாட்டியப் பள்ளியின் பெயர் கலார்பனா. இவருடைய பரதநாட்டிய குரு சித்ரா விஸ்வேஸ்வரன்.

15, ஸ்ரீமன் சீனிவாசன் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600018.
தொலைபேசி: 2498 1248 செல்: 9282401135.



## ஆர். வையாபுரி

திரைப்பட நகைச்சுவை நடிகர்

'இளையராகம்' திரைப்படத்தில் அறிமுகமான வையாபுரி நகைச்சுவை நடிகராக 'கருத்தம்மா', 'அன்பு மகன்', 'கடல் பூக்கள்', 'மும்பை எக்ஸ்பிரஸ்', 'வசூல் ராஜா எம்.பி.பி.எஸ்.', 'பம்மல் கே.சம்பந்தம்' என 125 திரைப்படங்களுக்கும் மேலாக நடித்துள்ள நகைச்சுவை நடிகர்.

73, அஷ்டலட்சுமி நகர்,
13வது தெரு, ஆலப்பாக்கம்,
சென்னை - 600 116.
தொலைபேசி: 2476 3090
செல்: 9444088807

2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா





## முனைவர் பி.சரோஜா தேவி

பழம்பெரும் திரைப்பட நடிகை

தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி என்று 200 திரைப்படங்களுக்கு மேல் நடித்துள்ள பி.சரோஜா தேவி, நான்கு மாநில விருதுகளையும் பலமுறை பெற்றுள்ளார். 1969ஆம் ஆண்டு, பத்மஸ்ரீ விருதையும், 1992இல் 'பத்மபூஷன்' விருதையும் பெற்றுள்ளார். இவர் எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், நாகேஸ்வர ராவ், என்.டி.ஆர்., திலீப் குமார் ஆகியோரோடு நடித்த பெருமைக்குரியவர். தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் டிரஸ்டியாகவும் இருந்தவர்.பெங்களூரு பல்கலைக்கழகம் இவருக்கு கவுரவ 'டாக்டர்' பட்டமும் தந்துள்ளது.

102, 11வது கிராஸ் தெரு, மல்லேஸ்வரம், பெங்களூரு - 560 003,
தொலைபேசி: 080-22342444 செல்: 09900197072



## கே.வேதம்புதிது கண்ணன்

திரைப்பட வசனகர்த்தா

சிறந்த நாடக ஆசிரியரான இவரின் 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்ற நாடகத்தைப் பார்த்த பாரதிராஜா, அதனை 'வேதம் புதிது' என்ற பெயரில் திரைப்படமாகத் தயாரித்து, இவரைக் கதை வசனகர்த்தாவாக அறிமுகப்படுத்தினார். 'இரவல் தந்தவன் கேட்கிறான்', 'சுப முகூர்த்த பத்திரிகை', 'மகளிர் மட்டும்', 'சுய தரிசனம்' ஆகியவை இவரது நாடகங்களில் சில. இவர் இயக்கியத் திரைப்படம் 'அமிர்தம்'. 'நிம்மதி உங்கள் சாய்ஸ்', 'அக்கா' போன்ற தொடர்களுக்கு வசனம் எழுதியுள்ள இவர், 'சுப முகூர்த்தம்', 'சிவா', 'காவல் கீதம்' ஆகிய திரைப்படங்களின் கதாசிரியராவார். 'உயர் நலம்', 'அன்னபூர்ணி' ஆகியவை கண்ணன் தற்போது படைத்து வரும் படைப்புகள்.

49/5, கண்ணதாசன் தெரு, தியாகராய நகர், சென்னை - 600 017,
தொலைபேசி: 24360444 செல்: 98849555664



## ஹாரிஸ் ஜெயராஜ்,

திரைப்பட இசையமைப்பாளர்

'மின்னலே' திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் இசையமைப்பாளராக அறிமுகமான ஹாரிஸ் ஜெயராஜ், தமிழ், தெலுங்கு, இந்தி என 40 திரைப்படங்களுக்கு மேலாக இசையமைத்திருக்கிறார். 'காக்க காக்க' திரைப்படத்திற்காகவும், 'அன்னியன்' திரைப்படத்திற்காகவும் இரண்டுமுறை தமிழக அரசின் விருதைப் பெற்றுள்ள இவர் மூன்று முறை 'பிலிம்பேர்' விருதுகளையும் பெற்றுள்ளார்.

ஏபி-1227,77-வது தெரு, 12-வது செக்டார்,
கே.கே.நகர் மேற்கு, சென்னை - 600078,
தொலைபேசி: 2489 5827 செல்: 9884029239.

## ஆர்.டி. ராஜசேகர்

திரைப்பட ஒளிப்பதிவாளர்



'கஜினி' திரைப்படத்திற்காக சென்ற ஆண்டின் சிறந்த ஒளிப்பதிவாளருக்கான விருதைப் பெற்றுள்ள ஆர்.டி.ராஜசேகர், தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறைக்கு அருகே உள்ள குத்தாலம் என்ற சிறிய கிராமத்தில் எளிய குடும்பத்தில் பிறந்து, சென்னை திரைப்படக் கல்லூரியில் ஒளிப்பதிவு பயின்று, தன்னுடைய கடினமான உழைப்பால் இன்று அகில இந்திய அளவில் குறிப்பிடத்தகுந்த இளம் ஒளிப்பதிவாளராகத் திகழ்கிறார். 'மின்னலே', 'காக்க காக்க', 'கஜினி', 'பீமா' உட்பட 14 திரைப்படங்களுக்கும், 200க்கும் மேற்பட்ட விளம்பரப் படங்களுக்கும் ஒளிப்பதிவாளராகப் பணியாற்றியுள்ளார். 'ஃபார் தி பீப்புள்' என்ற மலையாளத் திரைப்படம் பெற்ற வெற்றிக்கு இவருடைய ஒளிப்பதிவும் ஒரு காரணம்.

1, ஜெயின் அபார்ட்மெண்ட்ஸ்,
வேம்புலியம்மன் தெரு, கே.கே.நகர்,
சென்னை - 600 078.
தொலைபேசி: 2364 1300
செல்: 9444009506

## பி. கிருஷ்ணமூர்த்தி

திரைப்பட கலைஇயக்குநர்



மிகச் சிறந்த ஓவியராகவும், கலை இயக்குநராகவும் அறியப்படும் பி.கிருஷ்ணமூர்த்தி அமெரிக்கா, வியன்னா, தில்லி, பெங்களூரு, சென்னை எனப் பல்வேறு நகரங்களில் 1965 முதல் தொடர்ந்து ஓவியக் கண்காட்சிகளை நடத்தி வருகிறார். இந்தியாவின் பல்வேறு புகழ்பெற்ற கேலரிகளில் இவருடைய ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. 1965, 1966, 1977, 1978 ஆகிய ஆண்டுகளில், சென்னை 'லலித் கலா அகாடெமி' விருது உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். திரைப்படங்களில் கலை இயக்குநராகப் பணியாற்றியமைக்காகச் சிறந்த கலை இயக்குநருக்கான ஐந்து தேசிய விருதுகளையும், பத்துக்கும் மேற்பட்ட மாநில அரசுகளின் விருதுகளையும் பெற்றுள்ளார். பி.வி.கரந்த், பன்சி கவுல், ந.முத்துசாமி போன்ற நாடகக் கலைஞர்களோடு பணியாற்றியுள்ள இவர், சில நவீன நாடகங்களையும் இயக்கியுள்ளார். இவரின் பூர்வீகம் பூம்புகாருக்கு அருகில் உள்ள மேல பெரும்பள்ளம் என்ற காவிரிக் கரையின் கிராமமாகும்.

ப.எண்.3, பு.எண்.5, நியூ காலனி,
முதல் தெரு, ஆதம்பாக்கம்,
சென்னை - 600 088.
தொலைபேசி: 2245 6901
செல்: 9444733371

## சித்ரா சுவாமிநாதன்

**திரைப்பட புகைப்படக் கலைஞர்**



நாகராஜராவ் என்ற புகழ்பெற்ற புகைப்படக் கலைஞரிடம் புகைப்படக் கலையைக் கற்று, திறம்பட செயல்பட்டு வரும் சித்ரா சுவாமிநாதன், 1960 முதல் கலைத்துறையில் சிறந்த புகைப்படக் கலைஞராகப் பணிபுரிந்து அனைவரின் அன்புக்கும், பாசத்திற்கும் உரியவராகத் திகழ்ந்து வருகின்றார். இவர், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம், பெப்சி, தென்னிந்திய நடிகர் சங்கம் போன்ற அனைத்து அமைப்புகளின் நிகழ்வுகளையும் பதிவு செய்து வருகின்றார்.

12/29, 91-வது தெரு, அசோக் நகர், சென்னை - 600 083.
செல்: 9841321219.

## நவீனன்

**திரைப்படப் பத்திரிகையாளர்**



இன்று 88 வயதாகும் நவீனன் 55 ஆண்டு கால பத்திரிகை அனுபவத்திற்கு உரியவர். தியாகராஜ பாகவதரிலிருந்து இன்றைய தனுஷ் வரை பேட்டிக் கண்டு எழுதியுள்ள இவர், இசை, நாடகம், திரைப்படம் என 4000க்கும் மேலான படைப்புகளை விமர்சித்து எழுதியுள்ளார். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முதல்வர் கலைஞர், பெருந்தலைவர் காமராஜர் என மிக முக்கியமான தமிழகத்தின் தவப்புதல்வர்களைப் பேட்டி எடுத்த பெருமைக்குரியவர். இவர் எழுதியுள்ள நூல்களில் சில, 'அண்ணாவின் கதை', 'ஜி.டி.நாயுடுவின் கதை', 'கலைவாணரின் கதை', 'எஸ்.ஜி.கிட்டப்பாவின் கதை'.

56, பி.எஸ்.கே.நகர், ராஜபாளையம் - 626108,
செல்: 9944554655.

## சி. டேவிட்

**இசை நாடக மிருதங்கக் கலைஞர்**



மாயவரம் எம்.எஸ்.சுப்ரமணியம் அவர்களிடம் மிருதங்கம் பயின்ற சி.டேவிட், கே.ஜே.சரசா, பாலா நந்தகுமார் உட்பட பல கலைஞர்களின் பரதநாட்டிய நிகழ்ச்சிகளுக்கு மிருதங்கம் வாசித்துள்ளார். இவர், தமிழக அரசின் இசைக்கல்லூரியில் பணியாற்றி வருகிறார். 'மிருதங்க லய சிம்மம்' உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

த/பெ.வி.சின்னப்பன், 20/200,
1-பி நாயுடு தெரு, திருநகர், மதுரை - 625 006.
செல்: 9486374960.



## செம்பை ச. அர்சுனன்

**இசை நாடக ஆர்மோனியக் கலைஞர்**

நார்த்தாமலை முத்துலட்சுமி அம்மையாரிடம் 18 ஆண்டுகள் சங்கீதம் பயின்று நாடகத் துறையில் புலந்திரன், நாரதர் போன்ற வேடமிட்டு, பிறகு ஆர்மோனியம் மற்றும் வாய்ப்பாட்டுக் கலைஞராக இன்றுவரை சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக கலைப் பணியாற்றி வருவதோடு, சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களைப் பலதரப்பட்ட மாணவர்களிடம் கொண்டு சேர்க்கின்ற பணியைச் செய்து வரும் இவர் திருச்சி வானொலியில் 'பி ஹை கிரேடு' கலைஞர்.

155/9, அமீர் அபார்ட்மென்ட்ஸ், நியூ கோல்டன் நகர்,
திருவள்ளுவர் நகர் விரிவு, புதுக்கோட்டை - 622001. செல்: 9443185058

# கிராமியக் கலைத்துறை



## ஆர். விசுவநாதன்

**தெருக்கூத்துக் கலைஞர்**

தெருக்கூத்துக் கலைஞர், கிராமிய நாடக நடிகர், கதாசிரியர், நாடக ஆசிரியர், இயக்குநர் என பல பொறுப்புகளை வகிக்கும் இவர், 'ஸ்ரீ சக்தி விநாயக கட்டைக்கூத்து நிறுவனம்' என்ற அமைப்பை நிறுவி, 41 ஆண்டுகளாகப் பல்வேறு நாடகங்களைத் தயாரித்து வருபவர், பள்ளிப் பருவம் முதல் இந்தத் துறையில் ஈடுபாட்டோடு இருக்கும் இவர், 'தமிழ்நாடு கிராமிய நடிகர்கள் சங்கம்' எனும் அமைப்பின் தலைவராகக் கடந்த ஆறு ஆண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

2, மாளைய மேட்டுத்தெரு, உத்திரமேரூர் - 603406,
காஞ்சிபுரம் மாவட்டம். தொலைபேசி: 04112-272522 செல்: 9444835944



## முனைவர். அரிமா கோ.மணிலால்

**பண்பாட்டு கலை பரப்புநர்**

பல கலை அமைப்புகள் வழங்கிய 'சேவா ரத்னா விருது', 'அண்ணா விருது', 'டாக்டர் கலைஞர் விருது', 'அன்னை தெரசா விருது' என்று பல விருதுகளைப் பெற்றுள்ள கோ.மணிலால், சென்னை கலை இலக்கியப் பேரவை, உலக நட்புறவு மையம், சென்னை மாவட்ட அரிமா சங்கம் போன்ற அமைப்புகளின் தலைவரும் கூட. சமூக சேவைக்காகக் கௌரவ டாக்டர் பட்டம் இவருக்கு அமெரிக்கன் பல்கலைக்கழகம் வழங்கியுள்ளது. பல்வேறு கலை இலக்கிய நிகழ்ச்சிகளுக்கு புரவலராக இருக்கும் மணிலால், ரத்த தானம், கண் தானம், சாலைப் பாதுகாப்பு உள்ளிட்ட கையேடுகளையும் எழுதி அளித்துள்ளார்.

61/4, வி.ஜி.பி.வளாகம், முதல் தளம்,
முதல் அவென்யூ, அசோக் நகர்,
சென்னை - 600 083.
தொலைபேசி: 24747431
செல்: 9841023472



## அ. சங்கரபாண்டியன்

காவடியாட்டக் கலைஞர்

சங்கரபாண்டியன் அப்பா அனைஞ்சபெருமாள் ஒரு சிறந்த கொம்பாட்டக் கலைஞர். சங்கரபாண்டியனுக்கு 7 வயதாக இருக்கும்போதே இவரையும் கலை நிகழ்ச்சிக்கு உடன் அழைத்துச் செல்வார். அன்று முதல் இந்தக் கலைத் துறையில் தீவிரமாக இயங்கி வரும் சங்கரபாண்டி 1958, சனவரி 26 குடியரசு தினத்தன்று, அன்றைய பிரதமர் பண்டிதர் ஜவகர்லால் நேரு தலைமையில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியில், தன் தந்தையோடு சேர்ந்து இவரும் பங்கேற்றார். ஒரிசா, கேரளா, கர்நாடகா, உத்திரப்பிரதேசம் என பல மாநிலங்களுக்கும் சென்று கலை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ள சங்கரபாண்டியனைக் கவுரவித்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் சிறந்த 'கலை முதுமணி' விருதினை அளித்துள்ளார். வழுக்கைத் தலையில் வைத்த காவடி கீழே விழாதபடி சுழன்றுச் சுழன்று இவர் ஆடிய காவடியாட்ட நிகழ்ச்சியைக் கடந்த மூன்று ஆண்டுகளாகச் சென்னை மக்கள் கண்டுகளித்து வருகிறார்கள், சென்னை சங்கமத்தின் மூலமாக.

40/55, பஞ்சாயத்து போர்டு தெரு, அம்பாசமுத்திரம் - 627401.
திருநெல்வேலி மாவட்டம். செல்: 9600453763



## ந. வேலவன் சங்கீதா

வில்லுப்பாட்டுக் கலைஞர்

வில்லிசைக்குப் பேர் போன திருநெல்வேலி மாவட்டத்தில், குருவிகுளம் கிராமத்தைச் சேர்ந்த இந்த எளிய கலைஞர்களின் வில்லிசையில் பிறக்கிறது சிறு தெய்வ வழிபாட்டுக் கதைகளும், பட்டினத்தார், அருணகிரியார், இராமலிங்க சுவாமிகள், அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து என 30க்கும் மேற்பட்ட புராணங்களும், கதைகளும். வில்லிசைக்காக தான் பணியாற்றிய ஆசிரியர் பணியையே உதறிவிட்டு வந்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

108, சுந்தரர் தெரு, பார்வதி தியேட்டர் அருகில்,
திருநெல்வேலி டவுன் - 627006. செல்: 9789392097



## பொ. கைலாசமூர்த்தி

ஒயிலாட்டக் கலைஞர்

கடந்த 28 ஆண்டுகளுக்கு மேலாக ஒயிலாட்டத்திலும், நாட்டுப்புறப் பாடல்களிலும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, அந்தக் கலையை வளர்த்து வரும் பொ.கைலாசமூர்த்தி தன் 63வது வயதில், கலைமாமணிக்காக தான் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறார்.

80, அய்யலு தெரு, தூத்துக்குடி - 628001.
தொலைபேசி: 0461-2330811 செல்: 9443002487.



## துறையூர் சா. முத்துக்குமார்

**காளியாட்டக் கலைஞர்**

1500க்கும் மேற்பட்ட காளியாட்ட நிகழ்ச்சிகளை இந்தியா முழுவதும் சென்று நிகழ்த்தியுள்ள சா.முத்துக்குமார், தமிழக அரசின் மாவட்ட அளவிலான விருதான 'கலைச்சுடர்மணி' என்ற விருதையும் பெற்றுள்ளார். ஆந்திர மாநில அரசின் விருதைப் பெற்றுள்ள இவர், சுவிட்சர்லாந்து உட்பட பல்வேறு நாடுகளில் இந்தக் கலையைப் பரப்பியுள்ளார்.

70-பி, இலாயம் தெரு, வலங்கைமான் அஞ்சல்-வட்டம்,
திருவாரூர் மாவட்டம் - 612804. தொலைபேசி: 0437-4264923
செல்: 9942533228

# சின்னத்திரை



## சுந்தர் கே.விஜயன்

**சின்னத்திரை இயக்குநர்**

இயக்குநர் கே.விஜயனின் மகனாகிய சுந்தர் கே.விஜயன், தன் 18 வயதிலேயே 'ரேவதி' என்ற திரைப்படத்தை இயக்கியவர். அதற்குப் பின் 'வெளிச்சம்', 'என் அருகில் நீ இருந்தால்' போன்ற திரைப்படங்களை இயக்கி, பின்பு சின்னத்திரையில் 'அண்ணாமலை', 'நம்ம குடும்பம்', 'தங்கமான புருஷன்' என 1200 எபிசோடுகளுக்கு மேலாக, பல தொடர்களை இயக்கிய வெற்றிகரமான அனுபவத்திற்குரியவர்.

19, கெனால் பேங்க் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 600 028.
தொலைபேசி: 2432 3999
செல்: 9841073408, 9841022164



## வே. திருச்செல்வம்

**சின்னத்திரை இயக்குநர்**

திரைப்படக் கல்லூரியில் பயின்ற திருச்செல்வம் சுஜாதா ரிக்கார்டிங் தியேட்டரிலும், பிரசாத் ஸ்டுடியோவிலும் சவுண்டு என்ஜினியராகப் பணியாற்றி, பிறகு 'காவேரி', 'மெட்டி ஒலி' தொடரில் இணை இயக்குநராகவும், நடிகராகவும் அறிமுகமாகி இப்போது கோலங்கள் என்ற தொடரை இயக்கி, தொல்காப்பியன் என்ற கதாபாத்திரத்திலும் நடித்து வருபவர்.

ஏ.பி.1333, 33-வது தெரு,
7வது செக்டார், கே.கே.நகர், சென்னை - 600 078.
செல்: 944423000



## வி.பி. அபிஷேக்

சின்னத்திரை நடிகர்

எழுத்தாளர் தி.ஜானகிராமன் எழுதிய பிரபலமான நாவலான 'மோகமுள்' என்ற நாவல் திரைப்படமான போது அந்தக் கதையின் நாயகனாக அதில் அறிமுகமாகி 'இந்திரா காந்தி தாமரை' என்ற தேசிய விருதைப் பெற்ற அபிஷேக், 'குடும்பம்', 'குங்குமம்', 'கோகுலம் வீடு', 'மங்களம்', 'கோலங்கள்', 'தீர்க்க சுமங்கலி', 'மலர்கள்' ஆகிய தொடர்களில் நடிப்பதோடு, பல்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறார்.

எஸ். 3. கணேஷ் வில்லா, 64/23, பாலகிருஷ்ணன் தெரு விரிவு,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.
தொலைபேசி: 65299245 செல்: 9840759439.



## அனுஹாசன்

சின்னத்திரை நடிகை

'இந்திரா' என்ற திரைப்படத்தில் அறிமுகமான அனுஹாசன் தொடர்ந்து 'ரன்', 'நள தமயந்தி', 'ஆளவந்தான்' எனப் பல திரைப்படங்களில் நடித்து தமிழக அரசின் சிறந்த குணச்சித்திர நடிகைக்கான விருதினைப் பெற்றவர். களறி கலையிலும், ஜாஸ் இசையிலும் கற்றுத் தேர்ந்துள்ளவர். இவர் பல தொலைக்காட்சித் தொடர்களில் நடித்து வருகிறார்.

பிளாட் எண்.12, 2வது மாடி அப்பாவு அபார்ட்மெண்ட்ஸ்,
வீனஸ் காலனி 2வது தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600018.
செல்: 9840077270



## தெ. அமர சிகாமணி

சின்னத்திரை குணசித்திர நடிகர்

எஸ்.வி.சகஸ்ரநாமம், கோமல் சுவாமிநாதன், வி.கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் நாடகக் குழுக்களில் நடித்துள்ள அமரசிகாமணி, மரபுக்கவிதை எழுதுவதிலும், சித்தர் பாடல்களைப் பாடுவதிலும் வல்லவர். கலைஞரின் 'தென்பாண்டிச் சிங்கம்' தொலைக்காட்சித் தொடரில் துபாஷியாகவும், கலைஞரின் 'பாசக்கிளிகள்' திரைப்படத்தில் செட்டியாராகவும் நடித்துள்ள அமரசிகாமணி, நூற்றுக்கணக்கான தொலைக்காட்சித் தொடர்களில் நடித்துள்ளார்.

34, மணிகண்டன் தெரு, பாலையா நகர்,
மடிப்பாக்கம், சென்னை - 600 091.
தொலைபேசி: 2242 0309 செல்: 9841218323



## மா. தேவிப்பிரியா

**சின்னத்திரை நடிகை**

'மின்சார கனவு', 'உயிரோடு உயிராக' போன்ற திரைப்படங்களில் நடித்துள்ள தேவிப்பிரியா 'சக்தி', 'செல்வி', 'சித்தி' தொலைக்காட்சித் தொடர்களின் மூலமாகப் பிரபலமானவர். இவரும் ஏராளமான தொலைக்காட்சித் தொடர்களில் நடித்து வருபவர் ஆவார்.

பழைய எண்.1737, புதிய எண் 5, முதல்தளம்,
102-வது தெரு, 14வது செக்டர்,
கே.கே.நகர், சென்னை - 600 078. செல்: 9840797779



## பாஸ்கர் சக்தி

**சின்னத்திரை கதை வசனகர்த்தா**

ஆனந்தவிகடன் பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணியாற்றி, சிறுகதை ஆசிரியராக அறியப்பட்டுள்ள பாஸ்கர் சக்தி, 'மெட்டி ஒலி', 'கோலங்கள்' ஆகிய பிரபலமான தொலைக்காட்சித் தொடர்களுக்கும், 'எம்.மகன்', 'முனியாண்டி விலங்கியல் மூன்றாமாண்டு', 'வெண்ணிலா கபடிக் குழு' ஆகிய திரைப்படங்களுக்கும் வசனம் எழுதிய அனுபவத்திற்குரியவர்.

1333, 33வது தெரு, 7-வது செக்டார், கே.கே.நகர், சென்னை - 600 078.
தொலைபேசி: 2472 3459 செல்: 9444232000



## எம்.எம். ரெங்கசாமி

**சின்னத்திரை ஒளிப்பதிவாளர்**

'செந்தூரப்பூவே' என்ற வெள்ளி விழாத் திரைப்படத்தின் மூலம் அறிமுகமாகி, கடந்த 25 ஆண்டுகளாக சினிமா, தொலைக்காட்சிகளில் பணியாற்றி வரும் இவர் படைப்புகளில் குறிப்பிடத்தக்கது, கலைஞரின் 'காவலுக்குக் கெட்டிக்காரன்' திரைப்படமும், கலைஞரின் 'தென்பாண்டிச் சிங்கம்' தொலைக்காட்சித் தொடரும். எழுத்தாளர் சுஜாதாவின் 'கொலையுதிர் காலம்' என்ற தொடரை ஒளிப்பதிவு செய்து இயக்கியுள்ளார். குறிப்பிடத் தகுந்த மற்றொரு திரைப்படம் காமராஜர்.

எண்.5, கரிகாலன் அபார்ட்மெண்ட்ஸ்,
பாரி நகர், அசோக் நகர் அஞ்சல், சென்னை - 600 083.
தொலைபேசி: 2489 0161
செல்: 9444188961

2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா





## ரமேஷ் பிரபா

சின்னத்திரை நிகழ்ச்சித் தயாரிப்பாளர்

தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக பிரபலமாக அறியப்பட்டுள்ள ரமேஷ் பிரபா, இதுவரை 3000 பல்துறை அறிஞர்களை தொலைக்காட்சி ஊடகத்தின் வழியே பேட்டி கண்டுள்ளார். 23 நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறார். 'படித்தால் மட்டும் போதுமே', 'படியப்பா', 'வேலை உங்களுக்கே', 'எப்படி ஜெயித்தார்கள்' என 9க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கான கல்வியறிவு நூல்களை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

18, கேலக்ஸி, 4வது தெரு,
கற்பகம் அவென்யூ, ஆர்.ஏ.புரம், சென்னை - 600 028.
தொலைபேசி: 24956277 செல்: 9841039925

# இதர கலைத்துறை



## என். சீனிவாசன்

ஓவியக் கலைஞர்

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் கட்டிடக்கலை பொறியியல் வளாகத்தில் ஆசிரியராகப் பணியாற்றி வரும் டிஜிட்டல் ஓவியங்கள் வரைவதில் வல்லவரான சீனிவாசன், தன் கிராமத்தைப் பற்றியே நினைக்கிறார். சித்திரங்களை உருவாக்கும்போது அதுவும் அச்சித்திரங்கள் வர்ணத்தில் கைபடாமல் பிரஷ்ஷைக் கையால் தொடாமல், கான்வாஸ் ஏதும் இல்லாமல் கம்ப்யூட்டரில், கீ போர்டைத் தட்டிக்கொண்டும், மௌசை நகர்த்திக்கொண்டும், இம்மாதிரியான முரண் நகைகளை எப்படிப் புரிந்துகொள்வது? கிராமப்புறம் × அதி நவீன டிஜிட்டல் சித்திரம் என்ற முரண் மாத்திரம் அல்ல. ஒரு அதி நவீன கம்ப்யூட்டர் கிராபிஸ்ட். ஒரு அப்பாவித் தஞ்சை கிராமப்புற விவசாயியாகத் தன்னை உருவகித்துக்கொள்வது இன்னுமொரு முரண். பொறியியல் நிபுணராகவும், அதே சமயம் ஒரு ஓவியக் கலைஞனாகவும் இருவேறு உலகங்களைத் தன்னுள் ஒரு முரணாகக்கொள்ளாமல் இரண்டும் ஒன்றிணைந்த ஒரு ஆளுமையாக சீனிவாசன் நம்முன் நிற்பதைக் காட்டத்தான். இத்தகைய ஒரு Integrated Personality என ஒரு பெரும் தொடர்ச்சியையேக்கூட நாம் காணலாம். 'தேடினால் லியானார்டோ டாவின்ஸியிலிருந்து சத்யஜித்ரே வரை' நினைத்துப் பார்த்தால் ட்ராட்ஸ்கி மருதுவும் இச்சங்கிலித் தொடரில் ஒருவர் தான் என்று விமர்சகர் வெங்கட் சாமிநாதன் பாராட்டும் சீனிவாசன், இன்றைய இளம் ஓவியர்களில் குறிப்பிடத்தக்கவர்.

27 தெற்கு ரத வீதி, சீர்காழி,
நாகப்பட்டினம் மாவட்டம் - 609 110.
தொலைபேசி: 04364 -272369 செல்: 9884248369

## மா.இரா. பஞ்சநதம்

**சிறந்த கலை நிறுவனம், தமிழிசை மன்றம், திருவையாறு**

கடந்த 37 ஆண்டுகளாகத் தைத் திங்கள் முதல் மூன்று தேதிகளில் தமிழிசை நிகழ்ச்சி, நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சி, பட்டிமன்றம், வழக்காடு மன்றம் போன்ற நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றது இந்த அமைப்பு. பொதுவாழ்க்கையில் இருக்கக்கூடிய பல முன்னணித் தலைவர்களும், காப்பாளர்களாகவும், அறங்காவலர்களாகவும் இருந்து சிறப்பிக்கிறார்கள் என்பது இந்த அமைப்பின் இன்னுமொரு சிறப்பு.

அறங்காவலர், தமிழிசை மன்றம், 35/187,
தெற்குப் பெருந்தெரு, திருவையாறு - 613204. தஞ்சாவூர் மாவட்டம்,
தொலைபேசி: 04362-260569

## கலைச்செல்வம் சாம்பு

**சிறந்த நாடகக் குழு, ஸ்ரீசங்கர நாராயண சபா, ஆடுதுறை**

1920இல் மூத்த முன்னோடி நாடகக் கலைஞர்களால் துவங்கப்பெற்று இயங்கி வரும் இந்த அமைப்பு, கடந்த 88 ஆண்டுகளாகத் தொடர்ந்து பல புராண, சரித்திர, சமூக நாடகங்களை, தஞ்சை மாவட்டத்திலும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தி வருகிறது. இந்த அமைப்பின் இயக்குநரும், நாடக ஆசிரியருமான சாம்புவிற்கு இதனால் பல பரிசுகளும், பாராட்டுகளும் கிடைத்துள்ளது. தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றம் தேர்வு செய்த சிறந்த நாடகங்களில் ஒன்றான 'மீண்டும் ஆரம்பம்' என்ற நாடகம் சாம்பு எழுதியதாகும்.

ஸ்ரீ சங்கர நாராயண சபா
தேவி அச்சகம், மெயின் ரோடு, ஆடுதுறை அஞ்சல் - 612 101.
தஞ்சாவூர் மாவட்டம், தொலைபேசி: 04364-232194

## பொற்கிழி பெறும் கலைமாமணிகள்



**டி.என். கிருஷ்ணன்**
நாடக நடிகர்



**என்.எஸ். வரதராசன்**
இசை நாடகப் பாடலாசிரியர்



**டி.சி. சுந்திரமூர்த்தி**
புரவியாட்டக் கலைஞர்

2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா



# கலைமாமணி விருது வழங்கும் விழாவில் திறந்துவைக்கப்பட்ட மறைந்த கலைமேதைகளின் திருவுருவப் படங்கள்



எம்.ஆர். ராதா



எம்.என். நம்பியார்



நாகேஷ்



இயக்குநர் ஸ்ரீதர்



ஜி. வரலட்சுமி



கே.ஏ. சொக்கலிங்க பாகவதர்

2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா



வழுவூர். ஆர். சாம்ராஜ்



பூர்ணம் விஸ்வநாதன்



குன்னக்குடி வைத்தியநாதன்



நடனம் நட்ராஜ்



டி.வி.எஸ். சிவசுப்ரமணியம்



டி.வி. நமச்சிவாயம்

2007க்கான கலைமாமணி விருது வழங்கும் விழா



# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்



சமூக விஞ்ஞானி என்று கொண்டாடப்படும் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் 1955ஆம் ஆண்டு இலக்கியத்திற்காக சாகித்ய அகாடமியும், ஓவியத்திற்காக லலித்கலா அகாடமியையும் இசைநாட்டியம் மற்றும் நாடகத்திற்காக சங்கீத நாடக அகாடமியையும் 1955ஆம் ஆண்டு ஆரம்பித்து வைத்தார்கள். இந்த அமைப்பு தமிழகத்தில் 'சங்கீத நாடக சங்கம்' என்ற பெயரில் இயங்கி வந்தது. 1973ஆம் ஆண்டு நம் தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் இந்த அமைப்பிற்கு 'இயல், இசை, நாடக மன்றம்' என்று பொருத்தமான பெயரைச் சூட்டினார்கள். 1973ஆம் ஆண்டில் 'தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்', என அரசால் பெயர் மாற்றம் செய்யப்பெற்றது. மாநில அரசு வழங்கும் மானியத் தொகை மூலம் இம்மன்றம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

## 1. கலைப்பணித் திட்டங்கள்

மாநிலங்களிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்தல், நலிந்த நிலையில் வாழும் புகழ்பெற்றக் கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்குதல், புகழ்பெற்ற மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்குக் குடும்பப் பராமரிப்பு நிதி உதவி வழங்குதல், தமிழ்நாட்டில் பல்வேறு கலை நிறுவனங்களின் மூலம் கலை நிகழ்ச்சிகளை நடத்த வாய்ப்பளித்து அதன்மூலம் திறமைமிக்க புத்திளங் கலைஞர்களுக்கு ஆதரவும் ஊக்கமும் அளித்தல், கலைத்துறையின் மேம்பட்ட வளர்ச்சிக்குச் சேவை செய்த புகழ்மிக்க கலைஞர்களுக்குக் கலைமாமணி என்ற மாநில விருது வழங்கிச் சிறப்பு செய்தல், தமிழ்ப் பண்பாட்டினைச் சித்திரித்துத் தயாரிக்கும் சிறந்த தமிழ் நாடகங்களை உருவாக்கும் தொழில்முறை நாடகக் குழுக்களுக்கு நாடகத் தயாரிப்பு நல்கை வழங்குதல், கலை மேதைகளின் நினைவு விழாக்களை நடத்தும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல், கலைஞர்கள் பயன்பெறும் வண்ணம் பல்வேறு கலைவிழாக்கள் நடத்துதல், மறைந்து வரும் தொன்மைச் சிறப்புமிக்க கலை அம்சங்களை வருங்காலச் சந்ததியினரும் கண்டு உணரும் வண்ணம் அவற்றை ஆவணமாக்குதல், புகழ்பெற்ற முதுபெரும் இசைக்கலைஞர்களின் இசைநிகழ்ச்சிகளைப் பதிவு செய்து பாதுகாத்தல், நம் மரபுவழிக் கிராமியக் கலைகள் மற்றும் கவின்மிகு நுண்கலைகளைப் பற்றிய ஆய்வுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் ஆகிய முக்கியப் பணிகளை இயல் இசை நாடக மன்றம் செம்மையுறச் செய்து வருகின்றது.

## 2. கலைமாமணி விருது வழங்குதல்

கலைத்துறையில் செயற்கரிய சேவை செய்து புகழ்பெற்ற கலைஞர்களைப் பாராட்டிச் சிறப்பு செய்யும் முகத்தான், அவர்களுக்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், கலைமாமணி விருது வழங்குகிறது. இதுவரை, 1,450 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2007ஆம் ஆண்டுக்கான கலைமாமணி விருது 71 கலைஞர்களுக்கு வழங்கப்படுகிறது.

கலைமாமணி விருது வழங்கும் விழாவில், இதுகாறும், 324 மறைந்த புகழ்பெற்றக் கலைமேதைகளின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. கலைமாமணி விருது வழங்கும் விழாக்களில், வறிய நிலையில் வாழும் மூத்த கலைமாமணி விருதாளர்களுக்குப் பொற்கிழி (பணமுடிப்பு) வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வகையில் ரூ.1,000 வீதம் 147 கலைஞர்களுக்கும், ரூ.5,000/- வீதம் 17 கலைஞர்களுக்கும், ரூ.10.000/- வீதம் 13 கலைஞர்களுக்கும், ரூ.15,000/- வீதம் 22 கலைஞர்களுக்கும் ஆகமொத்தம் 199

கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்கப்பட்டுள்ளது. கலைவளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் தன்னார்வக் கலை நிறுவனங்களையும், செம்மையுறச் செயல்பட்டு வரும் நாடகக் குழுக்களையும் பாராட்டும் வகையில், இதுவரை 27 கலை நிறுவனங்களுக்கும், 18 நாடகக் குழுக்களுக்கும் கேடயங்கள் மற்றும் சுழற்கேடயங்கள் வழங்கப்பெற்றுள்ளன.

### 3. நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

வாழ்நாள் முழுவதும் கலையையே தொழிலாகக் கொண்டு அகவை முதிர்ந்த நிலையில் நலிந்து வாழும் சிறந்த கலைஞர்களுக்குத் திங்கள்தோறும் ரூ.500/- நிதியுதவியாக வழங்கப்பட்டு வந்தது. இந்த நிதியுதவித் தொகையினை 2006ஆம் நிதியாண்டிலிருந்து ரூ.500/-இல் இருந்து ரூ.1,000 ஆக உயர்த்தி முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ், 2008-2009ஆம் நிதியாண்டில் புதியதாக 500 நபர்களுக்கு நிதியுதவி ஒப்பளிக்கப்பட்டுள்ளதை உள்ளடக்கி, இதுவரை மொத்தம் 9563 நலிந்த கலைஞர்கள் நிதியுதவி பெறும் வகையில் அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 2009-2010 ஆம் ஆண்டில் புதிதாக 500 கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட உள்ளது.

### 4. மறைந்த புகழ்பெற்றக் கலைஞரின் குடும்பத்தாருக்குக் குடும்பப் பராமரிப்பு நிதியுதவி வழங்குதல்

கலைஞர்களின் மறைவினால் தவிக்கும் குடும்பங்களுக்குக் குடும்பப் பராமரிப்பு நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் ரூ.2,000/- வீதம் 88 குடும்பங்களுக்கும், ரூ.3,000/- வீதம் 77 குடும்பங்களுக்கும், ரூ.5,000/- வீதம் 81 குடும்பங்களுக்கும், ரூ.6,000/- வீதம் 93 குடும்பங்களுக்கும் ஆக மொத்தம் 339 மறைந்த கலைஞர்களின் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

### 5. மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றம்

இந்தியத் திருநாட்டின் தேசிய ஒருமைப்பாட்டு ஒற்றுமை உணர்வை வலுவாக்கவும், மாநிலங்களுக்கிடையே கலை பண்பாட்டு மரபினைப் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும், இந்திய அரசின் சார்பில் புதுதில்லி, சங்கீத நாடக அகாதெமியும், தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றமும் இணைந்து மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை தமிழகத்திற்கு வெளி மாநிலக் கலைக்குழுக்கள் 81 வருகை புரிந்துள்ளன. 84 தமிழகக் கலைக் குழுக்கள் வெளிமாநிலங்களுக்குச் சென்று கலை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளன.

இவ்வகையில், 2008ஆம் ஆண்டு, திங்கள் 6 முதல் 16ஆம் தேதி வரை தமிழகக் கலைக்குழுவை இமாச்சலப் பிரதேச மாநிலத்திற்கு அனுப்பிவைத்துக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளது. நடப்பாண்டில் மேற்கு வங்க மாநிலத்துடன் கலைக்குழுக்களை பரிவர்த்தனை செய்யப்பட உள்ளது.

### 6. திறம்படைத்த இளம் கலைஞர்களை ஊக்குவித்தல்

வாய்ப்பாட்டு மற்றும் கருவியிசை, பரதநாட்டியம் ஆகிய கலைத்துறைகளில் பயிற்சி பெற்ற புத்திளங்கலைஞர்களை அறிமுகம் செய்யும்வண்ணம் தமிழகத்தில் செம்மையுடன் இயங்கிவரும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு மன்றம் நிதியுதவி செய்து, அதன் வாயிலாகக் கலை நிகழ்ச்சிகள் நடத்திட ஊக்குவித்து வருகின்றது. 2006-2007ஆம் நிதியாண்டில் 36 கலைஞர்களைத் தெரிவு செய்து நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டுள்ளதை உள்ளடக்கி, இத்திட்டத்தின்கீழ் இதுவரை 1792 இளம் கலைஞர்கள் பயன் பெற்றுள்ளனர்.

### 7. கிராமியக் கலைஞர்களுக்கு / கலைக் குழுக்களுக்கு இசைக்கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க நிதியுதவி வழங்குதல்

ஊரகக் கலைஞர்களுக்கும் கலைக்குழுக்களுக்கும், இசைக்கருவிகள், ஆடை அணிகலன்கள் வாங்க மன்றம் நிதியுதவி வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தனிப்பட்ட கலைஞருக்கு ரூ.750/- வீதம் தொகையும் ஒவ்வொரு கலைக்குழுவிற்கு ரூ.2,500/- தொகையும் நல்கையாக வழங்கப்படுகிறது. இதுவரை 1425 ஊரகக் கலைஞர்களும் / கலைக்குழுக்களும் பயன் துய்த்துள்ளனர். மேலும், பதிவு செய்யப்பெற்றுள்ள பத்து கிராமியக் கலைக்குழுக்கள் மற்றும் இசை-நாடக நடிகர் சங்கங்களுக்குத் தலா ரூ.30.000/- மதிப்பிலான இசைக்கருவிகள் விரைவில் வழங்கப்பட உள்ளது.



## 8. புதிய நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்

தமிழ்க்கலை மற்றும் பண்பாட்டைப் பின்னணியாகக் கொண்டு, தமிழில் சிறந்த நாடகங்கள் தயாரித்திட நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை 42 நாடகங்கள் மன்ற நல்கையுடன் உருவாக்கி மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளன. தற்போது மேலும் புதிய நாடகங்கள் உருவாக்கும்பொருட்டு நல்கை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 9. புதிய நாட்டிய – நாடகங்கள் தயாரிக்க நிதியுதவி வழங்குதல்

தமிழ் இலக்கியம், பண்பாடு ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டு தமிழில் சிறந்த நாட்டிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்யும் நாட்டிய நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. 2008-2009 ஆம் நிதியாண்டில் நான்கு நாட்டிய-நாடகங்கள் மன்ற நல்கையில் தயாரிக்கப்பட்டு மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளதை உள்ளடக்கி. இதுவரை 17 நாட்டிய- நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் புதிய நாட்டிய நாடகங்கள் தயாரிக்கும்பொருட்டு நல்கை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 10. அரிய கலை நூல்களுக்கு மானியம் வழங்குதல்

கலைநூல்களைப் பதிப்பித்து வெளியிட நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 104 நூல்கள் மன்ற நல்கையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வகையில், 2008-2009ஆம் நிதியாண்டில் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றப் பொன்விழா வெளியீடாகக் கவிஞர் கருணானந்தம் அவர்களின் 'அண்ணா – சில நினைவுகள்' நூல் வெளியிடப்பட்டுள்ளது.

## 11. நாடகக் கலையை ஆவணமாக்கிப் பாதுகாத்தல்

நாடகக் கலை குறித்து இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் பொருட்டு நாடகக் கலையில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின் புகைப்படங்கள், குரல்கள் மற்றும் நாடக நிகழ்வுகளைப் பதிவு செய்து பாதுகாக்கவும், புகழ்பெற்ற கலைஞர்கள் பயன்படுத்திய ஆடை, அணிகலன்கள், மேடைப் பொருட்கள், காட்சி அமைப்புகளையும் சேகரித்துப் பாதுகாத்துப் பார்வையாளர்கள் காணும்வண்ணம் காட்சிப் பொருள்களாக வைக்கும்பொருட்டு, அரசால் மன்றத்திற்கு ரூபாய் பத்து இலட்சம் தொகை ஒப்பளிப்பு செய்துள்ளதைத் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 12. தமிழிசை மரபு பற்றிய ஆவணப்படம் தயாரித்தல்

சீர்காழி மூவரிலிருந்து ராஜரத்தினம் பிள்ளை வரையிலான வரலாற்றைச் சித்திரிக்கும் தமிழிசை மரபு பற்றிய ஆவணப்படம் தயாரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 13. முத்தமிழ் முகாம் நடத்துதல்

பூனா திரைப்படக் கல்லூரியில் ஆண்டுதோறும் கோடை விடுமுறையில் திரைப்பட ரசனைப் பயிற்சி வகுப்பு நடத்துவதுபோல், இயல், இசை, நாடகத்திற்கான முகாம் ஒன்றை மூன்று துறைகளிலும் உள்ள சிறந்த கலைஞர்கள், படைப்பாளிகளைக் கொண்டு நடத்தப்பட உள்ளது.

## 14. ஒலி-ஒளி நூலகம் அமைத்தல்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற வளாகத்தில் ஒலி-ஒளி நூலகம் விரைவில் திறக்கப்பட உள்ளது.

## 15. சென்னையில் கலைஞர்கள் தங்குவதற்கு விருந்தினர் விடுதி கட்டுதல்.

வெளிமாவட்டங்களிலிருந்து சென்னைக்கு கலை நிகழ்ச்சிகள் நடத்த வரும் கலைஞர்கள் தங்குவதற்கு இயல் இசை நாடக மன்றம் மூலம் 363.90 சதுர மீட்டர் பரப்பளவில் விருந்தினர் விடுதி கட்டப்பட்டு வருகின்றது.

## 16. மன்ற கலைவிழாக்கள்

மறைந்து வரும் நம் மரபு வழிச் சிறப்புமிக்க ஊரகக் கலைகளின் சிறப்பினைத் தற்போதைய தலைமுறையினர் கண்டுணரும் வண்ணமும், தொழில் வாய்ப்பின்றி வாழ்ந்து வரும் ஊரகக் கலைஞர்களுக்கு நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் நல்கும் வண்ணமும், இயல் இசை நாடக மன்றம் பல்வேறு கலைவிழாக்களையும், ஊரகக் கலைவிழாக்களையும் நடத்தி வருகின்றது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கும், அதன் பல்வேறு கலைப்பணிகளுக்காக நல்கை வழங்கி வருகின்றது.



மாண்புமிகு துணை முதல்வரை வாழ்த்துகிறார்
எழுத்து வேந்தர் ஜெயகாந்தன்











இயல் இசை நாடக மன்ற நிகழ்வுகளில்

மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி